# கார்காத்தார் ஒப்புரவு

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

KARKATHAR OPPURAVU

| | | | | |
|---|---|---|---|---|
| மலர்–16, இதழ் – 11<br>Volume - 16, Issue - 11 | ஐப்பசித் திங்கள்<br>October 2025 | விலை ரூ. 25/–<br>Price Rs. 25/- | ஆண்டு சந்தா ரூ. 300/–<br>Annual Subscription Rs. 300/- | தமிழ் மாத இதழ்<br>Tamil Monthly |






"Delivered by India Post"

www.indiapost.gov.in



தொடர்ச்சியான
கால்வலி மற்றும் எரிச்சலை
சாதாரணம் என தவறாக
எண்ண வேண்டாம்
இது வெரிகோஸ்
வெயினின் ஆரம்ப
அறிகுறியாக இருக்கலாம்!
பிரத்தியேக
வாஸ்குலர் துறை
வடு, வலி, தையல்
இல்லா சிகிச்சை
சிகிச்சையின் நாளிலேயே
வீடு திரும்பும் வசதி
பார்வதி
மருத்துவமனை
044 2238 2248
www.parvathyhospital.com
241, GST Road, near MIT Bridge, Chromepet,
Chennai, Tamil Nadu 600044

CELEBRATE LIKE A LANDLORD

DESTINATION WEDDING @

Saradharam's

LAKSHMI VILAS

HERITAGE HOTEL



NEAR **VEERANAM** LAKE





+91 9442591456 / 94425 91466

lakshmivilasheritage@gmail.com

http://www.lakshmivilasresort.com/

71/2, SIVANKOIL STREET, NEDUNCHERRY T. PUTHUR TAMIL NADU

# Premium Luxury Apartment at Chidambaram

**5% Discount**
**Refer Oppuravu Advt**

## Features

- Spacious Double bed room
- Johnson Lift
- Car park
- Two borewell (Tasty water)
- Modular kitchen
- Premium Vitrified tiles
- Interior decorated hall
- Specially made Pooja shelf(Teak)
- Teak Front Doors with Brass design
- Maintenance contract with Builder for 2 years




## Strategic Location

- 10 mins walk to Natarjar Temple
- 15 mins drive to Annamalai University
- Near to Chidambaram Bye pass road
- 40 feet road and no water stagnant
- Well maintained Neighbourhood

## Loan facility

- Tied up with Canara bank for this project
- Housing loan easily available with EMI facility
- Loan Assistance will be provided for NRI also

## Contact

**MUTHUKUMAR M**
9790769996
9790789091

***MOHANKUMAR***
98840 65606

Site Address
**16/32 ,Periyar street**
**Chidambaram**
**(Near Chettiar school)**



Kalyan Grand is a 3 Star Business Class Hotel, well equipped with modern amenities that blend comfort with functionally to provide comfortable, restful stays.

KALYAN GRAND
a business hotel

**108 Rooms & Suites | 03 Banquet Halls**

**[For Weddings & Receptions, Birthday Parties and Corporate Events]**

Ph: 044 66289999 | Mob: 7812009999
reservations@kalyangrand.com | www.kalyangrand.com




**Thiruvasantham**
**PURE VEG**

**A Traditional South Indian Pure Vegetarian Restaurant**

**Authentic Indian Sweets, Savouries and Outdoor Catering**

Ph: 044 22752999 | Mob: 9884092244
hotelthiruvasantham@gmail.com | www.thiruvasantham.com

No. 247, GST Road, Vandalur, Chennai, Tamil Nadu - 600048
(Adjacent to Kilambakkam New Mofussil Bus Terminus)



BRAHMA ENTERPRISES
Elevating Construction Standards
BRAHMA
ENTERPRISES
Supplier of quality construction materials
TMT Rebar | Cement | Structural Steel | Paint | RMC | Construction Chemicals
Tile Adhesive | Cool Roof Tiles | MS Pipes and Colour Coated Sheets
DISTRIBUTOR • WHOLESALER • DEALER
SHYAM STEEL
SHYAM TMT REBAR
flexi STRONG
UltraTech CEMENT
The Engineer's Choice
MRF Vapocure Paints
TATA TISCON SD
SUPER DUCTILE REBARS
Dalmia Bharat Cement
JK WHITE CEMENT
THE PERFECT WHITE
RINL VIZAG STEEL
Pride of Steel
Chettinad cement
FOSROC
PULKIT TMT BARS
Everlasting Relationship
RAMCO SUPERGRADE
As strong as family bonds.
LUNE TILES
COOL ROOF TILES
KAAVERI
TMT BARS & STRUCTURAL
கம்பீரத்தின் அடையாளம்
SANKAR SUPER POWER
Unshakeable Trust
CCP
CERA-CHEM
SUMANGALA TMT
we understand steel
ACC
Ambuja Cement
ascolite
Biflex TC
WE'RE JUST A CALL AWAY!
S. Arul Vignesh, Director
Grandson of Melakadai Ramasamy, Pennadam &
Sundaresan Pillai, Tirupanandal
Available at +91 9600 533 563
BRAHMA ENTERPRISES PVT. LTD.
#4/299, Sikkandar Chavadi
Alanganallur Main Road, Madurai-625 018
SHYAM STEEL
SHYAM TMT REBAR
70 Years of Experience
flexi STRONG
Perfect balance of Strength & Flexibility
PRIMARY STEEL PRODUCER
brahmaenterprisesmadurai@gmail.com | www.brahmaenterprises.co.in


NAPA VALLEY
BY DAC
DAC
DREAM ASCEND CONQUER
LOCATED NEAR OMR AT
HALF THE PRICE
OF OMR
( 5 Kms from Sathyabama University | 4 Kms from Perumbakkam Metro )
Near Sholinganallur — Bang On Main Road —
Member CREDAI
Air Conditioned GYM
Kid's Play Area
Indoor Games
Rooftop Pergola Seating
OMR Market Price
₹1.10 Cr.
2&3 BHK Apartments
From ₹ 64L
Scan for Location
Location Advantages
METRO STATIONS
• Sathyabama University Metro - 5 Kms
• Perumbakkam Metro - 4 Kms
IT PARKS
• ELCOT SEZ - 7.4 Kms
• SIPCOT IT Park - 9 Kms
HOSPITALS
• H & M Hospital - 3.7 Kms
• Gleneagles Global Health City - 6.9 Kms
SCHOOLS
• BVM Global School - 2.1 Kms
• Orchids The International School - 3 Kms
COLLEGES
• Sathyabama University - 5 Kms
• Prince Shri Venkateshwara Engineering College - 5.4 Kms
ENTERTAINMENT ZONE
• Vivira Mall - 6.2 Kms
• AGS Navalur - 6.2 Kms
TRANSPORTATION
• Arasankazhani Bus Stop - 1.5 Kms
• Perumbakkam Bus Depot - 4.1 Kms
Why Choose Napa Valley?
• Premium Gated Community
• Private Terrace Apartments
• 100% Vaastu Compliant Homes
• Total Privacy Ensured with Main Doors Not Facing Each Other
• Lifestyle Amenities Including Air Conditioned GYM, Indoor Games, Multipurpose Hall, Yoga/Meditation, Roof Top Amenities and More
• Power Backup Inside the Apartments
• Independent Lift Lobby for Each Block
• Ample Car Park Space at Stilt Level
110+ PROJECTS
3.5M+ SQFT CONSTRUCTION
3000+ HAPPY FAMILIES
TN/35/BUILDING/0166/2025
DATED 02.05.2025
www.rera.tn.gov.in
93003 93003
www.dacdevelopers.com

# CHIDAMBARAM SPIRITUAL STAY

**146/18A, KANAGASABAI NAGAR, CHIDAMBARAM**

சிதம்பரம் நடராஜர் திருவருளால் சிதம்பரம் கனகசபை நகரில் ஆன்மீக சுற்றுலா பயணியர் மற்றும் திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளுக்கு குழுவாக வருபவர்களுக்கும் மேலும் குடும்பத்துடன் வருகைபுரியும் அன்பர்களுக்கும் குளிர்சாதன வசதியுடன் (A/c) தங்குவதற்கு விடுதி அமைந்துள்ளது. திருமண விசேஷங்களுக்கு மணமகன், மணமகள், வீட்டார் உறவினர்கள் ஒரே இடத்தில் 50 நபர் வரை தங்குவதற்கு சிறந்த இடம் **“Chidambaram Spiritual Stay”**

**குறிப்பு : இங்கு தங்குபவர்களுக்கு காலை & இரவு சிற்றுண்டி வழங்கப்படுகிறது.**





**மேலும் விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய அலைபேசி எண்.**

**9790292444, 9790215833**

**முன்பதிவிற்கான கட்டண விபரங்களுக்கு “Booking.com” மற்றும் Google இணைய தளத்தில் காணலாம்**

**Free Driver Accommodation Available, SPL A/c. Cottages Available**

## ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் சேவை மையம்

**சித்திரை மாதம் 2025 தொடங்கி உங்களின் ஆதரவுடன் சிறப்பாக நடைபெற்று வருகிறது.**

**சிறப்பம்சங்கள் :**

- தனி நபர் கட்டணம் ரூ. 200/– மட்டும்
- Locker Facility உள்ளது.
- காலை வேளை மட்டும் சிற்றுண்டி வழங்கப்படும்.
- காது குத்துவது / குடும்ப சுப நிகழ்வு கொண்டாடுவோர் / குலதெய்வ வழிபாடு செய்வோர்
- தனி அறைகள் மற்றும் 20 நபர் தங்கும் வசதியுள்ள பொது இடம்.
- குறைந்த கட்டணம், நிறைவான சேவை
- 30 பேர் வரை தங்க சிறந்த இடம்

தொடர்பு 1 : **A. கோவிந்தராஜன்**
சாரதா உணவகம், அமைப்பாளர்
89731 63434

தொடர்பு 2 : **தில்லை ப. செல்வம்**
ஒருங்கிணைப்பாளர்
98403 17346

**இதழின் உள்ளே....**



சங்க நிகழ்வுகள் ....................................................12–25

சங்கப் பலகை ..............................................................26

இணைய தள வங்கிச் சேவை ...........................41

மணமகன் / மணமகள் தேவை.....................46–49

சிறுவர் பகுதி.....................................................50–53

**கார்காத்தார் ஒப்புரவு**
**கார்காத்தார் சங்கம் (சென்னை)**
64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு,
சூளைமேடு, சென்னை – 600 094.
தொலைபேசி : 044–2472 4882
Whatsapp : 82484 49204

**ஆயுள் சந்தா ரூ. 2000/-**
**ஆண்டு சந்தா ரூ. 300/-**

வெளியீட்டாளர் : **கைலை. சண்முகம்**

ஆசிரியர் : மேலையூர் S. **அன்பழகன்**

அச்சிடுவோர் :
**மீ. நடராஜன்**
**மயூர் பிரிண்டர்ஸ்**
எண். 72/88 காமராஜ் காலனி 8வது தெரு,
(பாளையகாரன் தெரு) கோடம்பாக்கம்,
சென்னை – 600 024. போன் : 4204 6533

கதை, கட்டுரைகள், கவிதைகள் மற்றும் செய்திகள், மணமகன்/மணமகள் பற்றிய விபரங்கள், மற்றும் விளம்பரங்களில் வரும் தகவல்களை வாசகர்கள் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இவைகளுக்கு "கார்காத்தார் ஒப்புரவு" நிர்வாகம் பொறுப்பேற்காது.

## ஏடு இட்டோர் இயல்



நம் இனிய உறவுகளுக்கு கார்காத்தார் ஒப்புரவின் மனம் நிறைந்த வணக்கங்களும், தீபாவளி நல் வாழ்த்துக்களும்!

நவராத்திரி விழாவினை கோலாகலமாக கொண்டாடியிருப்பீர்கள் என நம்புகிறோம். பாரதத்தின் புதிய துணை குடியரசுத் தலைவராக, மராட்டிய மாநிலத்தின் ஆளுநராக பொறுப்பிலிருந்த திரு. ச.பொ. இராதாகிருஷ்ணன் அவர்கள் செப்டம்பர் 12–ஆம் தேதி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவரை எதிர்த்து போட்டியிட்டவர் முன்னாள் நீதிபதி க. சுதர்ஷன்ரெட்டி, திரு. ச. பொ. ராதாகிருஷ்ணன் அவர்கள் 452 வாக்குகள் பெற்று துணைக் குடியரசு தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவரை நம் கார்காத்தார் ஒப்புரவும், நம் கார்குலமும் வாழ்த்துகிறது.

நமது அண்டை நாடான நேபாளத்தில் அரசு, ஃபேஸ்புக், வாட்ஸ்அப் உள்ளிட்ட 26 முன்னணி சமூக வலைத்தளங்களுக்கு, தேசத்தின் விதிகளுக்கு இணங்கவில்லை என்பதால் நேபாள அரசு தடை விதிக்க, அதனால் ஏற்பட்ட பெரும் கலவரத்தால், பிரதமர் சர்மா ஒலி பதவி விலக நேரிட்டது. இடைக்கால பிரதமராக, உச்சநீதி மன்ற முன்னாள் நீதிபதி, 73 வயதான சுசீலா கார்கி அவர்கள் பதவியேற்றுள்ளார்.

தென்மேற்கு பருவ மழை நமது தேசத்தில் பல மாநிலங்களிலும் சராசரி அளவை விட மிக அதிகமாக பொழிந்து உள்ளது. அக்டோபர் மூன்றாம் வாரத்தில் ஆரம்பமாகும் வடகிழக்கு பருவமழை தேவையான மழைப்பொழிவைத் தரவேண்டும் என இயற்கை அன்னையை பிரார்த்திப்போம்.

இனி மூத்த குடிமக்களுக்கு ரூ 1 லட்சம் வரை வைப்பு நிதி வட்டிக்குப் பிடித்தம் இல்லை என அறிவித்திருப்பது மகிழ்ச்சியே. மேலும் G.S.T. வரி இரண்டு அடுக்குகளாக குறைக்கப்படுவது செப்டம்பர் 22–ஆம் தேதி அமுலுக்கு வந்துள்ளதால், மருந்து போன்ற பல அத்தியாவசிய பொருட்களின் விலை குறையும் எனும் நம்பிக்கை நம்மிடையே உள்ளது.

இத்தாலியில் நடந்த 82–ஆவது வெனிஸ் திரைப்பட விழாவில், 'ஒரிசோன்டி' (Orizzonti) என்ற சிறப்பு பிரிவில் சாங்ஸ் ஆப் ஃபர்காட்டன் ட்ரீஸ் (Songs of forgotter trees) என்ற தன் முதல் திரைப்படத்திற்கு சிறந்த இயக்குநருக்கான விருதினைப் பெற்ற அனுபர்ணாராய், இவ்விருதினைப் பெறும் முதல்

இந்தியராவார். மேலும் 2026–ஆம் ஆண்டு ஆஸ்கர் விருதுக்கு இயக்குநர் நீரஜ் கய்வான் இயக்கிய இந்தி திரைப்படமான 'ஹோம்பவுண்டு', சிறந்த சர்வதேச திரைப்படப் பிரிவில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அவர் விருது பெற வாழ்த்துவோம்!

எச் ஒன் பி விசா கட்டணத்தை ஒரு லட்சம் அமெரிக்க டாலராக அதாவது 88 லட்சம் ரூபாயாக டிரம்ப் அரசு உயர்த்தி உள்ளது. கடந்தாண்டு வழங்கப்பட்ட எச் ஒன் பி விசாக்களில் 71% சதவீதம் இந்தியர்களுக்கானது.

சினிமாத்துறையின் உயரிய விருதான 'தாதாசாகேப் பால்கே' விருது பிரபல மலையாள நடிகர் மோகன்லால் அவர்களுக்கு செப்டம்பர் மாதம் 23–ஆம் தேதி நடைபெற்ற 71–ஆவது தேசிய திரைப்பட விருது விழாவில் குடியரசுத் தலைவர் மேதகு திரௌபதி முர்மு அவர்களால் வழங்கப்பட்டது. அவருக்கு எமது வாழ்த்துக்கள்!

* கஜகஸ்தானில் நடந்த ஆசிய துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டியில், ஆண்களுக்கான 25 மீ 'ஸ்டாண்டர்டு பிஸ்டல்' பிரிவில் குர்பிரீத்சிங் வெற்றி பெற்றுள்ளார். சீனாவில் நடந்த உலக ஸ்பீடு ஸ்கேட்டிங்கில் தங்கம் வென்ற முதல் இந்தியர்' தமிழகத்தைச் சேர்ந்த ஆனந்த்குமார் ஆவார். ஜுனியர் 1000 மீ ஸ்பிரிண்ட் பிரிவில் இந்தியாவின் கிரீஷ் சர்மா தங்கம் வென்றுள்ளார். இவர்கள் மேலும் பல வெற்றிகளைப் பெற கார்காத்தார் ஒப்புரவின் வாழ்த்துக்கள்!

* நமது கார்குல மக்கள் தீபாவளிப் பண்டிகையைச் சிறப்புடன் கொண்டாட வாழ்த்துவோம்!

## * முக்கிய அறிவிப்பு *

கார்காத்தார் ஒப்புரவுக்கு அனுப்பப்படும் சங்க செய்திகள், கட்டுரைகள், ஒவ்வொரு ஆங்கில மாதத்தின் 25–ஆம் தேதிக்குள் அனுப்பப்பட வேண்டும். அதன் பின்னர் பெறப்படும் செய்திகள் அடுத்து வரும் இதழ்களில் பிரசுரிக்கப்படும். சங்க நிகழ்வுகள் பற்றிய செய்திகள் அனுப்பும் போது கட்டாயமாக சங்கத்தின் தலைவர் / செயலாளரின் கையொப்பம் மற்றும் சங்க முத்திரையிட்டு அனுப்ப வேண்டும்.

❖ செய்திகள், கட்டுரைகள், கட்டாயமாக 1½ பக்கம் முதல் 2 பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். இதற்கு மேல் வரும் செய்திகள், கட்டுரைகள் மற்றும் கதைகளை குறைக்கவோ அல்லது நிராகரிக்கவோ நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.

❖ சங்க நிகழ்வுகள், விழாக்கள் பற்றிய செய்திகளை 3 முதல் 4 பாராக்கள் வரை மட்டுமே எழுதி அனுப்பபட வேண்டும். மேலும் செய்திகள் சுருக்கமாகவும், மிகவும் தெளிவாகவும், முக்கிய கருத்துகளை உள்ளடக்கியதாகவும், பெயர்களை தவிர்த்தும், பொறுப்பாளர்களின் கையொப்பத்துடனும் அனுப்பப்பட வேண்டும்.

❖ E-mail–ல் செய்திகள் அனுப்புவது தவிர்க்கப்பட வேண்டும்.

❖ **மணியார்டர், காசோலை, DDகள் அனைத்தும் கார்காத்தார் ஒப்புரவு என்ற பெயரில் அனுப்பபட வேண்டும்.**

**Online fund Transfer** Account Number : 130801000022149
IFSC Code : IOBA0001308
Account Name : M/S Karkathar Oppuravu
Bank Name and Branch : Indian Overseas Bank/ Choolai Medu - Chennai.

**இந்த QR CODE/UPI யை SCAN செய்தும் பணம் செலுத்தலாம்**

**தொகை செலுத்தியபின் Name, Amount, subscription - ADVT Details, Date of Payment, Transaction ID/UTR Number, Communication Address, Pincode (must), Phone / WhatsApp Number, Screenshot of Payment / Google form (https://forms.gle/rXkimYPnPMCJwtRi8) இந்த விவரங்களை "கார்காத்தார் ஒப்புரவு" Whatsapp No. 8248449204க்கு அனுப்பி வைத்தால் மட்டுமே தங்களது விவரங்கள் update செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.**

❖ செய்திகள் பிரசுரிப்பது குறித்து தொலைபேசி / கடித போக்குவரத்து இயலாது.

**அனைத்து தபால்களையும் கார்காத்தார் ஒப்புரவு,**
**எண். 64, சௌராஷ்டிரா நகர், 10வது தெரு, சூளைமேடு, சென்னை - 600 094.**
**என்ற முகவரிக்கு மட்டுமே அனுப்ப வேண்டும்.**

**- கார்காத்தார் ஒப்புரவு**

## தி கார்காத்தார் சங்கம் (மெட்ராஸ்)

(சென்னை கார்காத்தார் சங்கம்)

சூளைமேடு, சென்னை – 600 094.

### 103வது பொதுக்குழு கூட்டம்

அன்புடையீர் வணக்கம்.

நமது சங்கத்தின் பொதுக்குழு கூட்டம் 27.09.2025 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் ஊர்வசி அரங்கம், பாம்குரோவ் ஹோட்டல், 13, கோடம்பாக்கம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை – 600 034–ல் சிறப்பாக நடைபெற்றது. பொதுக்குழு கூட்டம் தமிழ்த்தாய் வாழ்த்துடன் இனிதே துவங்கியது. இணைச் செயலாளர் திரு. S. மதிவாணன் வரவேற்புரைக்கு பின் தலைவர் S. சோமசுந்தரம் முன்னுரை ஆற்றினார்கள். அடுத்து 2024–2025ம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையை செயலாளர் கைலை சண்முகம் அவையில் சமர்ப்பித்தார்கள். அடுத்து 2024–2025ம் ஆண்டிற்கான வரவு செலவு அறிக்கையை பொருளாளர் திரு. G. செந்தில்நாதன் சமர்ப்பித்தார்கள். மேற்படி ஆண்டறிக்கை மற்றும் வரவு செலவு அறிக்கை பொதுக்குழு உறுப்பினர்களால் ஏற்றுகொள்ளபட்டது. அடுத்து 2025–2026ம் ஆண்டிற்கான தணிக்கையாளராக திரு. விசுவநாதன் அவர்கள் நியமனம் செய்யப்பட்டார்கள். இறுதியாக தேநீர் விருந்துடன் பொதுக்குழு இனிதே நிறைவுற்றது.

அடுத்து முதன்மை விருந்தினர் உயர்திரு ஆ. சண்முக வேலாயுதன், நிர்வாக பங்குதாரர், ஐ.பி.எல். புராடக்ட்ஸ், சென்னை, அவர்களை பாராட்டும் விழா இனிதே தொடங்கியது. அவரை கைலை சண்முகம் அவையோர்க்கு அறிமுகம் செய்து அவரது பண்புகளையும், ஆற்றலையும், நமது சமூகத்தின் மீது வைத்துள்ள பற்றுதலையும் விரிவாக எடுத்து கூறினார்கள். மேலும் அவர்களது குடும்பத்தினர் அனைவரும் விழாவிற்கு வருகை தந்தமைக்கு மனமார்ந்த நன்றிகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்தார்கள்.

முதன்மை விருந்தினர் திரு. ஆ, சண்முக வேலாயுதன் அவர்களை மேனாள் தலைவர் திரு. சபா. சிவகுமார் பாராட்டி பேசினார்கள். திரு. ஆ. சண்முக வேலாயுதன் அவர்களின் தொடக்க கால நிகழ்வுகளையும், அவரது விடாமுயற்சி மற்றும் செயல்திறனால் இன்று மிகப் பெரிய வளர்ச்சியை கண்டுள்ளதையும் சிறப்பாக எடுத்துரைத்தார்கள். அன்னாரது குடும்ப உறுப்பினர்கள் குறிப்பாக மகள் மற்றும் மருமகன் நிறுவன வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றுதலை எடுத்துரைத்தார்கள். நமது சமுதாய இளைஞர்கள் இவர்களைப் பின்பற்றி தொழில் தொடங்கி வளர்ச்சியடைய வேண்டும் என்று எடுத்துரைத்தார்கள்.

மேலும் விழாவில் கலந்துகொண்ட நீதியரசர் T.N. வள்ளிநாயகம் திரு. ஆ. சண்முக வேலாயுதன் அவர்களது சமுதாய பற்றையும், தொழில் மீது கொண்ட ஆர்வத்தையும் பாராட்டி பேசினார்கள். மேலும் இன்றைய காலகட்டத்தில் நமது சமுதாயம் சிறப்புடன் செயல்பட ஆலோசனைகளை வழங்கி வாழ்த்துரை வழங்கினார்கள். அடுத்து பேசிய திரு. சபா. சிவகுமார் சொத்து பாதுகாப்பு குழுவின் நடவடிக்கைகளை விரிவாக எடுத்துரைத்தார்கள். அடுத்து திரு. திருஞானசம்பந்தம், குரோம்பேட்டை அவர்கள் கீரல்வாடி பசுமை பண்ணை சம்பந்தமாக விளக்கமாக எடுத்துரைத்தார்கள்.

முதன்மை விருந்தினர் திரு. ஆ. சண்முக வேலாயுதன் அவர்களுக்கும், அவரது குடும்பத்தினர்க்கும் சால்வை அணிவித்து நினைவுப் பரிசு வழங்கி சிறப்பு செய்யப்பட்டது. நீதியரசர் T.N. வள்ளிநாயகம், மற்றும் தணிக்கையாளர் திரு. விசுவநாதன் ஆகியோருக்கும் சால்வை அணிவித்து சிறப்பு செய்யப்பட்டது. அகவை 80 கண்ட நங்கநல்லூர் திரு. வி. சாமிநாதன் அவர்கள் விழாவில் கலந்துகொள்ள முடியாததால் அவர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

அடுத்து ஏற்புரை நிகழ்த்திய ஆ. சண்முக வேலாயுதன் தனது தொழில் வளர்ச்சியையும், சமுதாயத்திற்கு ஆற்றிய பணிகளையும் மிகவும் சிறப்பாகஎடுத்துரைத்தார்கள்.விழாவில் பங்கு பெற்றது மிகவும் மகிழ்ச்சியை அளிக்கிறது என்றும், சங்க நிர்வாகிகளுக்கு மனம் நிறைந்த பாராட்டுதலையும் தெரிவித்து நன்றி கூறினார்கள்.இத்துடன் நிகழ்ச்சிகள் சிறப்புடன் நடைபெற்று, நன்றியுரையை திருமதி E. வனஜா அவர்கள் தெரிவிக்க, கூட்டம் நாட்டுப் பண் இசைக்க முடிவுற்றது. வருகை புரிந்த அனைவர்க்கும் மதிய அறுசுவை விருந்து வழங்கப்பட்டு, நினைவுப்பரிசு வழங்கப்பட்டு விழா சிறப்புடன் நிறைவுபெற்றது.

**27.09.2025** அன்புடன்

சென்னை கைலை. சண்முகம்

செயலாளர்

## சங்கச் செய்திகள் அனுப்புவோர் கவனத்திற்கு

தமிழ்நாட்டில் சுமார் 150 க்கும் மேற்பட்ட சங்கங்கள் செயல்படுவதை நாம் அறிவோம். அனைத்து சங்கங்களும் தங்களது சிறப்பான செயல்பாடுகளை சங்க செய்திகளாக அனுப்பி வருவதை வெளியிட்டு வருகிறோம். அதற்கு உதவும் வகையில், சங்கச் செய்திகளை அனுப்புபவர்கள் செய்திகளை சுருக்கமாகவும், முக்கிய தீர்மானங்களையும் சுருக்கமாக மூன்று பாராக்களுக்கு மிகாமல் அனுப்பி வைக்க வேண்டுகிறோம். அதிகமான பாராக்களுடன் வரும் செய்திகள், சுருக்கி கொடுக்கவோ அல்லது நிராகரிக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு என்பதை கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

## தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பு பொதுக்குழு கூட்டம்

அன்புடையீர் வணக்கம்.

தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பின் பொதுக்குழு கூட்டம் 28.09.2025 ஞாயிற்றுக்கிழமை ஜெயங்கொண்டம் ஆரோக்யாமஹாலில்நடைபெற்றது. காலை 9.00 மணிக்கு 2025–2028ம் ஆண்டிற்கான நிர்வாகிகள் தேர்தலில் அமைப்பு செயலாளர் பதவிக்கு மட்டும் தேர்தல் நடைபெற்றது. மதியம் 1.00 மணி வரை வருகைபுரிந்த பொதுக்குழு உறுப்பினர்கள் தமது வாக்கினைச் செலுத்திய பின் தேர்தல் பணி முடிவுபெற்றது. மதியம் 1.00 மணி முதல் 2.00 மணி வரை மதிய உணவு விருந்து நடைபெற்றது.

அடுத்து 2.00 மணியளவில் அமைப்பு செயலாளருக்கான தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டவுடன் புதிய நிர்வாகிகளின் பட்டியல் தேர்தல் ஆணையர் திரு. S. நடராஜன் மற்றும் உதவி தேர்தல் ஆணையர் திரு. N. பாண்டியன் ஆகியோரால் சபையில் அறிவிக்கப்பட்டது. தொடர்ந்து பொதுக்குழு மங்கள இசையுடன் குத்துவிளக்கு ஏற்ற சிறப்புடன் தொடங்கியது. இறைவணக்கம் மற்றும் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பெற்றது. தொடர்ந்து புதிய நிர்வாகிகள் தலைவர் தலைமையில் மண்டபத்தின் ஹாலில் சங்க கொடியேற்றியபின் அனைவரும் நாதஸ்வர இசை முழங்க மேடைக்கு அழைத்து வரப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள்.

திரு. R. இரவிஸ்வரன் பிள்ளை வரவேற்புரைக்கு பின் தலைவர் தலைமையுரையாற்றி சிறப்பித்தார்கள். பொதுச்செயலாளர் திரு. M. பாலசுப்ரமணியன் ஆண்டறிக்கை சமர்ப்பித்தார்கள். பொருளாளர் திரு. G. இராமநாதன் பிள்ளை நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்தார்கள். அவையோரின் பலத்த கைவொலியுடன் ஆண்டறிக்கையும் நிதிநிலை அறிக்கையும் ஏற்றுகொள்ளப்பட்டன. புதிய நிர்வாகிகள் அனைவரும் உறுதிமொழி ஏற்று பதவி ஏற்றபின் வருகைபுரிந்த சொந்தங்களால் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர். விழாவை சிறப்பாக நடத்திய ஜெயங்கொண்டம் சங்கத்திற்கும், தேர்தலை சிறப்பாக நடத்திய தேர்தல் குழுவினருக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது. வருகைபுரிந்த அனைவருக்கும் நன்றி தெரிவிக்கபட்டு பொதுக்குழு இனிதே நிறைவுற்றது.

28.09.2025

கைலை சண்முகம்
பொதுச்செயலாளர்

## 2025 - 2028ஆம் ஆண்டு காலத்திற்கான தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பு பொறுப்பாளர்கள்

மாநிலத் தலைவர்: **K. ராஜசுந்தரம்** @ KKRK. **சுரேஷ்**

மாநில பொதுச்செயலாளர் **K. சண்முகம்** @ **கைலை சண்முகம்**

மாநில பொருளாளர்: **G. ராமநாதன்**

மாநில அமைப்புச் செயலாளர்: **சீ. பழமலை**

### மண்டலத் தலைவர்

| | | |
|---|---|---|
| 1. | சென்னை | G. தியாகராஜன் |
| 2. | பாண்டி – காரைக்கால் | J. இராஜன்பாபு |
| 3. | சிதம்பரம் | R. பத்மநாபன் |
| 4. | சீர்காழி | M. சிங்காரவேலன் |
| 5. | மயிலாடுதுறை | S. சண்முகம் |
| 6. | செம்பனார்கோயில் | கீ. ராமநாதன் |
| 7. | கும்பகோணம் | S. விஜயகுமார் |
| 8. | திருவாரூர் | செ. குஞ்சிதபாதம் |
| 9. | தஞ்சாவூர் | N. முத்துகுமாரவேலு |
| 10. | மதுரை | S. உமையொருபாகம் |
| 11. | திருநெல்வேலி | S.K. கணபதி |
| 12. | விருத்தாசலம் | A.S.V. வேல்முருகன் |
| 13. | பெண்ணாடம் | T. திருநாவுக்கரசு |
| 14. | அரியலூர் | R. ரவீஸ்வரன் |

| | | |
|---|---|---|
| 15. | ஜெயங்கொண்டம் | K. சாமிநாதன் |
| 16. | ஜெயங்கொண்டம் | N. பன்னீர்செல்வம் |

**மண்டலச் செயலாளர்**

| | | |
|---|---|---|
| 1. | சென்னை | ம. பாலமுருகன் |
| 2. | சென்னை | K. சாமிநாதன் |
| 3. | பாண்டி–காரைக்கால் | G. முத்துகுமாரசாமி |
| 4. | சிதம்பரம் | R. துரைப்பிள்ளை |
| 5. | சீர்காழி | ந. சிதம்பரநாதன் |
| 6. | மயிலாடுதுறை | S. சீனிவாசன் |
| 7. | செம்பனார்கோயில் | லெ. ராமசெல்வம் |
| 8. | தஞ்சாவூர் | V. வேல்ராஜ் |
| 9. | திருச்சி | V. குணசேகர் |
| 10. | திண்டுக்கல் | ச. பூபேஸ்குரு |
| 11. | திருநெல்வேலி | S. சரவணன் |
| 12. | திருநெல்வேலி | செ. இராமசுப்ரமணியன் |
| 13. | ஈரோடு | S. பூபதி |
| 14. | பெண்ணாடம் – விருத்தாசலம் | க. குஞ்சிதபாதம் |
| 15. | பெண்ணாடம் – விருத்தாசலம் | A. வேணுகோபால் |
| 16. | பெண்ணாடம் – விருத்தாசலம் | E. வசந்தா |
| 17. | பெண்ணாடம் – விருத்தாசலம் | N. சிவக்குமார் |
| 18. | அரியலூர் | M. செந்தில்நாதன் |
| 19. | அரியலூர் | அ. சிவக்குமார் |
| 20. | ஜெயங்கொண்டம் | K. பாலசுப்ரமணியன் |
| 21. | ஜெயங்கொண்டம் | G. திருவேங்கடம் |
| 22. | ஓசூர் | M. மனோகர் |

## நங்கநல்லூர் :

சங்க கூட்டம் சங்க கட்டடத்தில் 21–9–25 அன்று திருமதி. வனஜா சரவணன் அவர்களது இறைவணக்கத்துடன் துவங்கியது.

சென்னை புழுதிவாக்கம் பகுதி சங்க உறுப்பினர் M. நடராஜன் அவர்களது தந்தையார் மாசிலாமணி பிள்ளை பூர்வீகம் திருவிளையாட்டம் அவர்களது மறைவுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

சென்ற மாதத்திய கூட்ட அறிக்கை சங்க செயலாளரால் வாசிக்கப்பட்டு பிற நிகழ்வுகளும் விவரிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

சங்க பொருளாளர் திரு. V. செல்வகுமார் சமர்ப்பித்த வரவு – செலவு கையிருப்பு விவரம் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

எதிர் வருகின்ற டிசம்பர் மாத இறுதி ஞாயிற்றுக்கிழமையன்று சங்கத்தின் 38–வது ஆண்டு விழாவினை சென்னை – மூவரசன்பட்டு வியாபாரிகள் சங்க திருமணமண்டபத்தில் நடத்துவது என்று ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

சங்க தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் மாநில கூட்டமைப்பின் தேர்தலில் கலந்து கொண்டு ஓட்டளிக்க சங்கம் பரிந்துரைத்தது. திரு. G. செந்தில்நாதன் செயற்குழு உறுப்பினர் நன்றி நவில கூட்டம் நிறைவுற்றது.

சங்க துணைத்தலைவர் திரு. G. சுவாமிநாதன் குடும்பத்தினரால் இரவு உணவு வழங்கப்பட்டது.

– க. சரவணன்,

தலைவர்.

## அண்ணாநகர் :

சங்க கூட்டம் 14–9–2025 அன்று ஆடிட்டர் கே. முத்தையா அவர்களின் அண்ணாநகர் அலுவலகத்தில் தொடங்கி நடைபெற்றது.

மறைந்த நம் சங்க ஆயுட்கால உறுப்பினரும், அண்ணாநகரை உருவாக்கிய வீட்டு வசதி வாரியத்தின் தலைவராக இருந்த திரு. பூவராகவன் அவர்களின் மகனுமான திரு. கதிர்வேலு அவர்களின் மறைவிற்கும், ஆயுட்கால உறுப்பினர் பி. கேதாரம் அவர்களின் மறைவிற்கும் இரங்கல் தெரிவித்து, இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

தருமை ஆதீன சைவசிந்தாந்த கல்லூரியில் சேர்ந்து படித்து "சைவசிந்தாந்த புலவர்" பட்டம் பெற்ற நமது செயற்குழு உறுப்பினர் ஜி. கண்ணன் அவர்களை வாழ்த்தி பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

சங்கத்தில் புதிதாக இணைந்த இந்தியன் வங்கியில் பொது மேலாளராக இருந்து ஓய்வு பெற்ற திரு. வி. இராதாகிருஷ்ணன் அவர்கள் பேசும்போது நம் இனம் பொதுவாக முன்னேறாமல் இருக்கிறது. அதற்கு நமது சங்கங்கள் முன்னிருந்து இனத்தை முன்னேற்ற ஆவன செய்ய வேண்டும் என பேசினார்கள்.

தலைவர் திரு. ஜெ. கோபாலகிருஷ்ணன் அவர்கள் ஆண்டு விழாவிற்கான பணிகள் நடந்து வருவதை விபரமாகவும் சங்க பதிவு புதுப்பிக்க ஆவணங்கள் சமர்ப்பித்துள்ளதாகவும் தெரிவித்தார்கள். ஆண்டு விழா பட்ஜெட் மற்றும் சங்கத்தின் நிதி நிலை அறிக்கையை பொருளாளர் சார்பில் படித்தார், அதற்கு செயற்குழு ஒப்புதல் வழங்கியது.

திரு. பால அறிவொளி அவர்கள் ஆண்டு விழா டின்னர் மெனு பற்றிய விபரங்களை தெரிவித்தார்கள். ஆண்டு விழா 5–10–2025 அழைப்பிதழை இந்த வாரத்திற்குள் அனுப்பிவிடுகிறோம் என துணைத்தலைவர் திரு. ஏ. இராஜேந்திரன் அவர்கள் தெரிவித்தார்கள். அண்ணாநகர் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள உறுப்பினர் ஆகாதவர்கள்

எல்லோரும் விரைவில் உறுப்பினர் ஆகவேண்டும் என ஆடிட்டர் கே. முத்தையா அவர்கள் பேசினார்கள்.

நிறைவாக திரு. எஸ். பாலப்பிரகாஷ் அவர்கள் நன்றி உரையுடன் கூட்டம் நிறைவு பெற்றது.

– என். ஆனந்தகணபதி, செயலாளர்.

**9094682811**

## போரூர் :

சங்க ஆண்டு விழா **21–9–2025** அன்று கார்குல மகளிர் குத்துவிளக்கு ஏற்ற, தொடங்கியது. சாய் ஜீவந்திகா சரவணன் பரதநாட்டியத்துடன் மற்ற குழந்தைகளின் நாட்டியமும், ஆடல் பாடலும் களை கட்டியது. பிறகு போரூர் கார்காத்தார் சங்க தலைவர் திரு. A. இராமலிங்கம் அவர்கள் சிறப்பான வரவேற்புரை ஆற்ற, சங்க செயலாளர் திரு. S. சந்திரமோகன் அவர்கள் செயலறிக்கை வாசிக்க, சங்க பொருளாளர் திரு. K. பரமசிவம் அவர்கள் நிதிநிலை அறிக்கை சமர்ப்பித்தார். மாநில தலைவர் திரு. K.K.R.K. சுரேஷ் அவர்கள் போரூர் கார்காத்தார் சங்கத்தை பாராட்டி, மூத்தோர் காட்டும் நல்வழியில், நல்லோர் தரும் ஊக்கத்துடன், இளைஞரின் பொங்கும் உணர்வோடும், நமது சங்கம், நம் இனத்தவரை மேலும் வாழ்வாங்கு வாழ உறுதுணையாக இருக்கும் எனவும், போரூர் சங்கம் **350** உறுப்பினர்களை கொண்ட முன்னிலை சங்கம் எனவும் பாராட்டி பேசினார்கள். பிறகு சிறப்பு அழைப்பாளர் திரு. S. இளவரசன், A.S.P AUDITING, LLC, DUBAI, UAE, அவர்கள் வளைகுடா நாடுகளில் வேலை தேடித்தர ஆவண செய்வதாகவும், இளைஞர்கள் கல்வியோடு தமது தனித்திறமையையும் (SKILLS) வளர்த்து கொள்ள வேண்டும் எனவும் போரூர் சங்க கூட்டத்தில் கலந்து கொள்ளவே துபாயிலிருந்து வந்துள்ளேன் எனவும், போரூர் சங்கத்தை பாராட்டியும் பேசினார்கள்.

அதன் பிறகு சிறப்பு அழைப்பாளர் திரு. Dr. G. ராம்குமார் MD.,DM., அவர்கள் மருத்துவம் தரும் மருந்தை விட, அவர் தரும் அறிவுரையை பின்பற்றுங்கள் எனவும், ஒரு நாளைக்கு 5 கிலோ மீட்டர் வாக்கிங் செல்லுங்கள் எனவும், உங்கள் உயரத்தில் சென்டிமீட்டரில் நூறை கழித்தால் வரும் எண்ணை உங்கள் எடையாக Maintain பண்ண வேண்டும் எனவும், எந்த வயதிலும் பழையமுது சாப்பிடலாம் என்றும், அது உடலில் நல்ல பாக்டீரியாக்களை வளர்த்து, உடல் ஆரோக்கியத்துடன் இருக்க உதவும் எனவும், அரங்கம் முழுக்க நிரம்பி வழிந்த மக்களைப் பார்த்து சந்தோஷமடைந்ததாகவும் பாராட்டி பேசினார்கள். பிறகு அமைப்பு செயலாளர் திரு. கைலை சண்முகம் அவர்கள், போரூர் சங்கத்தின் வளர்ச்சியையும், Weight ஆன EC TEAM கொண்ட சங்கம் எனவும் பாராட்டி பேசினார்கள். பிறகு மனித நேயர் திரு. T.N. முத்துகுமாரசுவாமி அவர்கள் மாணவர்களுக்கு புத்தகம் வழங்கினார்கள். மேலும் நமது சங்கம் திரு. T.N. முத்துக்குமாரசுவாமி அவர்களுக்கு "சேவை செம்மல்" என்ற பட்டம் வழங்கி, SHIELD, சால்வை, சந்தனமாலை அணிவித்து கௌரவித்தது. பின் சங்கத்தின் பத்தாம் ஆண்டு மலர் (முகவரி கையேடு) வெளியிட, மாநில தலைவர், அமைப்புச் செயலாளர், சிறப்பு அழைப்பாளர்கள் பெற்றுக் கொண்டார்கள். பிறகு விளையாட்டு போட்டிகளில் வெற்றிப் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு, பரிசு பொருட்கள் வழங்கப்பட்டது. 10th, +2 மாணவர்களுக்கு சிறப்பு பரிசு வழங்கப்பட்டது. அறுவது வயது பூர்த்தியடைந்த இரண்டு தம்பதிக்கு பரிசுடன் சால்வை அணிவித்து கௌரவிக்கப்பட்டது.

சிறப்பு அழைப்பாளர்கள், சங்க செயற்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் சால்வை அணிவித்து, Shield வழங்கி கௌரவிக்கப்பட்டது. பின்னர் 'LUCKY DRAW' முதல் பரிசாக Water Kettle, ஒரு நபருக்கும், HOT & COLD WATER BOTTLE - முப்பது பேருக்கும், Tubber Ware Box- பத்து பேருக்கும், ஆக கார்குல மக்கள் உற்சாகத்துடன் காணப்பட்டார்கள். அனைத்து கார்குல சொந்தங்களுக்கு இனிய இரவு விருந்து உபசரிக்கப்பட்டு, வந்திருந்த அனைத்து குடும்பத்துக்கும் HOT & COLD WATER BOTTLE, முகவரி கையேடும் வழங்கப்பட்டது. திருமதி. தீபா பரமசிவம் அவர்களின் சிறப்பான நிகழ்ச்சி தொகுப்பு, மற்றும் அனைத்து செயற்குழு உறுப்பினர்களின் முழு ஒத்துழைப்புடன் 'முகவரி கையேடு' சிறப்பாக வடிவமைத்து தந்த திரு. மயூர் பிரிண்டர்ஸ் M. நடராஜன் அவர்களை சங்கம் பாராட்டியும், விளம்பரம் தந்து சங்கத்தை கௌரவித்த அனைத்து நல் உள்ளங்களையும் பாராட்டியும், முழு ஒத்துழைப்பு கொடுத்த அனைத்து கார்குல சொந்தங்களையும் சங்கம் பாராட்டி, திரு. குமரன் அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது

தலைவர், செயலாளர், பொருளாளர்
மற்றும் செயற்குழு உறுப்பினர்கள்.

## பெருங்களத்தூர்:

சங்க செயற்குழு கூட்டம் 27.09.2025 அன்று சிவாலி ஹாலில் சங்கத் தலைவர் திரு. R. கார்த்திகேயன் அவர்கள் தலைமையில் அனைவரும்

இணைந்து தமிழ்த்தாய் வாழ்த்து பாட இனிதே துவங்கியது.

இணைச் செயலாளர் திரு. V. சேகர் முன்னிலையில் கூட்டம் நடைபெற்றது. வரும் ஆண்டு 4.01.2026 ஞாயிற்றுக்கிழமை பெருங்களத்தூர் சிவாலி ஹாலில் ஆண்டு விழா நடத்த தீர்மானிக்கப்பட்டது. நம் சங்க உறுப்பினர் நெடுங்காடு G. ரத்தினவேல் அவர்களின் தாயார் திருமதி. G. தையல்நாயகி அவர்கள் மறைவிற்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதுவரை நம் சங்கத்தில் உள்ள ஐந்து ஏழை மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்குவதற்கு CREW அறக்கட்டளைக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மாநில சங்கத் தேர்தலில் தேர்வுபெற்ற தலைவர்களை நம் சங்க ஆண்டுவிழாவிற்கு அழைத்து கௌரவிக்க தீர்மானம் செய்யப்பட்டது.

கும்பகோணத்தில் நடைபெற்ற கார்குல மகளிர் சங்கமம் மாநாட்டில் சங்க உறுப்பினர் சிதம்பரம் திருமதி. லதா பட்டாபிராமன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பாக பணியாற்றியமைக்காக சங்கத்தின் சார்பாக கௌரவிக்கப்பட்டார். சங்கத்தின் நிதி ஆதாரத்தை பெருக்க நடவடிக்கை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது. செயற்குழு உறுப்பினர் ஊர்குடி திருமதி. K. சங்கரி அவர்கள் நன்றியுரை நவில தேசிய கீதத்துடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

R. கார்த்திகேயன், தலைவர்

**9791078294**

## கடலூர்:

**31.8.2025** அன்று சங்கத்தின் **43**ஆம் ஆண்டு பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. பொதுக்குழுவில் புதிய நிர்வாகிகளாக மகளிரணிக்கு தலைவியாக திருமதி. பானுமதி இராஜதுரையும், செயலாளராக திருமதி. அகிலாண்டேஸ்வரி ஆறுமுகம், பொருளாளராக திருமதி. ஹேமலதா சிவமணியும், துணைத்தலைவியாக திருமதி. கீதா பிறையோனும் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர். சங்க நிர்வாகிகளாக திரு. T. விவேகானந்தன் தலைவராகவும், திரு. B. சிவமணி செயலாளராகவும், திரு. G. பாலமுருகன் பொருளாளராகவும் தொடர்ந்து பணியாற்றிட கேட்டுக்கொண்டு ஒரு மனதாகத் தேர்வு செய்யப்பட்டனர்.

சென்னை இராதா இஞ்சினீரிங் ஒர்க்ஸ் சேர்மன், மாண்புமிகு. கொடைவள்ளல் ச. வெங்கடேசம் பிள்ளை – திருமதி. ஞானாம்பிகை தம்பதியர் **80** அகவை விழா கொண்டாடியதற்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

மகளிர் அணி துணைத்தலைவி திருமதி. கீதா பிறையோன், மகளிருக்கான விளையாட்டுப் போட்டிகளை துவக்கி நடத்தி பரிசு பெறுபவர்களை தேர்வு செய்தார்.

திரு. தங்க. சிவப்பிரகாச சுவாமிகள் இறைபூஜை செய்யும் போது ஓதுவார் மூர்த்தி திரு. சுப்பிரமணியம் அவர்கள் பஞ்சபுராணம் பாடினார். துணைத்தலைவி கூட்டத்திற்கு வந்திருந்தவர்களை வரவேற்றார். தலைவர் தலைமை தாங்கி உரையாற்றினார்.

செயலாளர் திரு. சிவமணி ஆண்டறிக்கை வாசித்தார். மகளிரணி செயலாளர் திருமதி. பானுமதி ராஜதுரை ஆண்டறிக்கை வாசித்தார். நிதிநிலை அறிக்கையினை தலைவர் வாசித்து பொதுக்குழுவின் ஒப்புதலை பெற்றார்.

சங்கத்தின் கௌரவத்தலைவர் திரு. Dr. விசுவநாதன் அவர்கள் முன்னிலைவகித்துபேசுகையில் சங்கத்தை எடுத்து நடத்திட புதிய நபர்கள் ஆர்வமுடன் பங்கேற்க வரவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். கட்டிடக்குழுத் தலைவர் பேசுகையில் விழாவில் பங்கேற்றுள்ளவர்களில் பெரும்பான்மையோர் மூத்த குடிமக்களாக உள்ளனர். இளைஞர்களை கூட்டத்திற்கு பெற்றோர்கள் தவறாமல் அழைத்து வரும்படி வலியுறுத்தினார். சிதம்பரம் பகுதி, மாநில துணைத்தலைவர் வழக்கறிஞர் திரு. V. சிவராஜன் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

ஆன்மீக உரையாற்றிய திரு. தங்க. சிவப்பிரகாச சுவாமிகள் வாழ்க்கையில் ஆன்மீக நெறிகளை குடும்பத்தினர் அனைவரும் பின்பற்ற வேண்டும். அதனால் நல்லொழுக்கம், பண்பாடுகள் வளரும் என தெரிவித்தார். இறுதியாக சிறப்பு விருந்தினர், மருத்துவர் திரு. ப. அருண்பிரசாத், M.D., D.M., Cardio அவர்கள் உரையாற்றினார். நம் குழந்தைகட்கு திருநீறு அணிவதன் முக்கியத்துவத்தையும், அதன் வழியாக பண்பாட்டினையும், நல்லொழுக்கத்தையும் வளர்க்கலாம். அதன் வழியாக நல்ல இளைய சமுதாயம் வளரும் எனக் கேட்டுக்கொண்டார்கள்.

விழாவின் இறுதி நிகழ்வாக விளையாட்டுப் போட்டிகளில் முதல் **3** இடங்களைப் பெற்றவர்கட்கு பரிசுகள் வழங்கப்பட்டன. அவ்வாறே சேமிப்புத் திட்டங்களில் பங்குபெற்ற அனைவருக்கும் ஊக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன. விழாவில் கலந்து கொண்டவர்களில் **3** நபருக்கு பங்கேற்றதற்கான ஊக்கப் பரிசுகள் குலுக்கல் மூலம் தேர்வு செய்து

வழங்கப்பட்டன. செயற்குழு உறுப்பினர் திரு. சுரேஷ் விழா நிகழ்வுகளை ஒருங்கிணைத்து நன்றி உரையாற்றினார். விழாவில் கலந்துகொண்ட அனைவருக்கும் மதியம் அறுசுவை உணவு வழங்கியதுடன் விழா இனிதே முடிவடைந்தது.

T. விவேகானந்தன் தலைவர்

9942429789

## புதுச்சேரி :

7–9–25 அன்று சங்க கூட்டம் புதுச்சேரி அரும்பார்த்தபுரம், V. மணவெளி, பாரதிதாசன் நகர், 1–வது தெரு, நெ.9. துணைச்செயலாளர் திரு. G. ஞானசேகரன் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது.

புதுச்சேரி சங்கத்திற்கான 2025–28 ஆண்டிற்கான புதிய நிர்வாகிகள் தேர்வு செய்ய தேர்தல் ஆணையராக திரு. G. ஞானசேகரன் அவர்களையும், (9994789900) துணை ஆணையராக திரு. S. ராமலிங்கம் அவர்களையும் (9894378883) கூட்டம் கேட்டுக்கொண்டது. விருப்பம் உள்ளவர்கள் மேற்கண்டவர்களை தொடர்புகொள்ளலாம். அவர்களிடம் இருந்து முறையான அறிவிப்பு வாட்சப் மூலமும் தபால் மூலமும் உங்களுக்கு வரும்.

ஆண்களுக்கு ஆன பரிசு திரு. R. ரவிச்சந்திரன் அவர்களுக்கும், பெண்களுக்கான பரிசு திருமதி. V. விருதாம்பிகை அவர்களுக்கும் கிடைத்தது.

அடுத்த மாதக்கூட்டம் 05–10–25 ஞாயிறு மாலை 4 மணிக்கு வி. மணவெளி திரு. T. விவேகானந்தன் அவர்கள் இல்லத்தில் நடைபெறும். 10–08–25 குடந்தையில் நடைபெற்ற கார்குல சங்கமத்தில் பரதநாட்டியத்தில் நம் சங்கத்தை சார்ந்த செல்வி. G.S. ரித்திகா முதல் பரிசு பெற்றதற்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. அதற்கு அவர்கள் பெற்றோர் வாட்சப் வீடியோ காலில் நன்றி தெரிவித்தார்கள்.

திருமதி. நிர்மலா ஞானசேகரன் விருந்தோம்பலுக்கு கூட்டத்தினர் நன்றி தெரிவிக்க கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

J. ராஜன்பாபு,

தலைவர்

## செந்துறை :

சங்கக்கூட்டம் 07–09–2025 அன்று திருஞானசம்பந்தர் மடாலயத்தில் நடைபெற்றது.

சங்கத்தின் மாநில துணைத்தலைவர் திரு. R. இரவீஸ்வரன் அவர்கள் தலைமையேற்றார். சங்கர் செயலாளர் திரு. S. ஜெயராமன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

செந்துறை அருள்மிகு ஸ்ரீ வரதராஜ பெருமாள் கோவிலில் புதிதாக இராஜகோபுரம் கட்டப்பட்டு, குடமுழுக்கு விழா கடந்த 04–09–2025 அன்று சிறப்பாக நடைபெற்றது. இந்த குடமுழுக்கு விழாக் கமிட்டியில் நமது கார்குல சொந்தங்கள்

திரு. R. செல்வராஜ் அவர்கள் தலைவராகவும், திரு. P. இராதா பிள்ளை அவர்கள் செயலாளராகவும், திரு. A. நடனசபாபதி அவர்கள் பொருளாளராகவும் செயல்பட்டு கும்பாபிஷேகத்தை சிறப்புற நடத்தினார்கள். இந்த கமிட்டியில் நமது சொந்தங்கள் மேலும் பலரும் இடம் பெற்று தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர்.

ஏறத்தாழ இரண்டு ஆண்டுகள் அயராது உழைத்து, குடமுழுக்கு விழாவை பலரும் போற்றும் வண்ணம் சிறப்பாக நடத்தி முடித்த விழாக் கமிட்டியின் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் நமது அனைத்து கமிட்டி உறுப்பினர்களையும் செந்துறை கார்காத்த வேளாளர் சங்கம் பாராட்டுகிறது.

குடமுழுக்கு விழாவிற்கு வந்திருந்த பக்தகோடிகளுக்கு நமது சங்கத்தின் சார்பில் ''அன்னதானம்'' வழங்கப்பட்டது. இந்த அன்னதானத்திற்கு மனமுவந்து 'நிதியுதவி' வழங்கிய நமது சொந்தங்களுக்கும், மற்றும் இதை வெற்றிகரமாக்கிய நமது 'தன்னார்வலர்கள் (Volunteers)' அனைவருக்கும் சங்கத்தின் சார்பில் இதயப்பூர்வ நன்றி உரித்தாகுக.

இறுதியாக, சங்கத்துணைத்தலைவர் திரு. சு. பன்னீர்செல்வம் அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவுற்றது.

– சா. ஜெயராமன்,

செயலாளர்.

## ஜெயங்கொண்டம் :

27–08–2025 அன்று நமது கார்குல மக்கள் திரளாக வசிக்கும் தெற்கு மற்றும் மேற்கு வெள்ளாழர் தெருவில் எழுந்தருளி அருள்பாலித்து கொண்டிருக்கும் அருள்மிகு மூர்த்தி விநாயகருக்கு சதுர்த்தி அன்று சிறப்பு அபிஷேகம் மற்றும் வீதியுலா சிறப்பாக நடைபெற்றது. இந்த கிராம விழாவை வ.உ.சி. ஆண்கள் சுயஉதவி குழு & மூர்த்தி விநாயகர்

ஆண்கள் சுயஉதவி குழு நிர்வாகித்து சிறப்பாக நடத்தி இனிதே நிறைவு பெற செய்தனர். இந்த விழா கடந்த பத்தாண்டாக கார்குல சொந்தங்கள் பேராதரவுடன் நடந்து வருகிறது. இது நமது கார்குல சொந்தங்கள் ஒன்றாக இணைந்து நடத்தும் முக்கிய விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது.

– கி. பாலசுப்பிரமணியன், செயலாளர்.

## காட்டுமன்னார் கோயில் ஒன்றியம் :

செயற்குழு உறுப்பினர்களின் கூட்டம் 21–09–2025 அன்று திரு. R. பஞ்சாட்சரம் அவர்களின் இல்லத்தில் நடைபெற்றது. திரு. R. பஞ்சாட்சரம் அனைவரையும் வரவேற்றார். தலைவர் திரு. R. பத்மநாபன் தனது தலைமை உரையில் கார்காத்தார் சங்க சிதம்பரம் மண்டல தலைவராக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டதாக தெரிவித்தார். அவருக்கு பொன்னாடை போர்த்தி வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. பொருளாளர் 15–08–2025 அன்று நடைபெற்ற காட்டுமன்னார் கோயில் ஒன்றிய பொதுக்குழு கூட்டத்தின் வரவு செலவு அறிக்கையை சமர்ப்பித்தார். அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. கல்வி உதவித்தொகை வழங்கி வரும் கார்குல வள்ளல் திரு. S. வெங்கடேசன் பிள்ளை அவர்களுக்கு நன்றியும், பாராட்டும் தெரிவிக்கப்பட்டது. X மற்றும் XII வகுப்பு பொதுத்தேர்வில் முதல் மூன்று இடங்களை பெறும் மாணவர்களுக்கு தனியாகவும், மாணவிகளுக்கு தனியாகவும் ரொக்கப் பரிசை அதிகப்படுத்தி வழங்குவதென தீர்மானிக்கப்பட்டது. பொதுக்குழு கூட்டம் சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு அளிக்க இளைஞர் அணியினர் மற்றும் செயற்குழு உறுப்பினர்களுக்குநன்றிதெரிவிக்கப்பட்டது.இணைச் செயலர் திரு. K. ராஜு அவர்களின் நன்றியுரைக்கு பின் திரு. R. பஞ்சாட்சரம் குடும்பத்தினர் வழங்கிய சிறப்பான சிற்றுண்டிக்கு பின் கூட்டம் நிறைவு பெற்றது.

- R. ஞானம்,

செயலாளர்.

## குமராட்சி ஒன்றியம் :

21–0925 அன்று சங்க செயற்குழு கூட்டம் ஒன்றிய அரங்கத்தில் தலைவர் திரு. A.G. சிவராமன் பிள்ளை தலைமையில் நடைபெற்றது. பொருளாளர் திருமதி. R. திலகம் அவர்களின் வரவு – செலவு அறிக்கை ஏகமனதாக ஏற்கப்பட்டது.

சங்கக் கட்டிடத்தில் மேலும் மூன்று குளியல் அறைகள் தேவையை பூர்த்தி செய்ய நிதி திரட்டி பூர்த்தி செய்ய ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. 2026–ம் ஆண்டுக்கு மாத நாட்காட்டி தயாரித்து அடக்க விலைக்கு சங்கத்தினர்களுக்கு வழங்கப்படுவது என தீர்மானித்து அந்த பொறுப்பை திரு. V. தெய்வநாயகம் பிள்ளையிடம் ஒப்படைக்கப்பட்டது. ஒன்றிய அரங்கம் கட்டும் பணி மிகுதியாக இருந்ததால் கடந்த சில ஆண்டுகளில் இணைப்பு சந்தா மட்டும் செலுத்தி விட்டு மாநில கூட்டமைப்புக்கு போட்டியிடுதல், முன்மொழிதல், வழிமொழிதல் போன்ற செயல்களில் ஒன்றிய தீர்மானத்தின்படி ஈடுபடவில்லை. தற்போது உறுப்பினர்களின் வேண்டுகோளையேற்று வரும் காலங்களில் கூட்டமைப்பு தேர்தல்களில் முன்மொழிதல் – வழிமொழிதல், போட்டியிடுதல் ஆகிவற்றில் பங்கேற்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

4–1–26–ல் சிதம்பரம் பகுதி மங்கல சந்திப்பு நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது. அந்த மங்கல சந்திப்புக்கு உறுப்பினர்கள் ஒத்துழைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

குமராட்சி ஒன்றியம் மேலப்பருத்திக்குடி கிளை சங்கக் கூட்டம் 21–9–25 அன்று ஒன்றிய அரங்கத்தில் நடைபெற்றது. புதிய பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

புதிய பொறுப்பாளர்கள் பதவியேற்புக்கு பிறகு கூட்டம் நிறைவடைந்தது.

– திரு. A.G. சிவராமன் பிள்ளை, தலைவர்.

9787068062

## சீர்காழி :

சங்கத்தின் செயற்குழு கூட்டம் 6–9–25 அன்று தலைவர் திரு. K. ஜெயச்சந்திரன் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

திரு. K. ஜெயச்சந்திரன் பிள்ளை அவர்கள் கன்னியாகுடி திரு. A. மணிராஜா அவர்களின் மகன் ஹேமபிரகாஷ்– க்கு கல்வி உதவிதொகையாக Rs. 5000/- வழங்கினார்

14–9–25 நடந்த சிறப்பு செயற்குழு கூட்டத்தில் மண்டல செயலாளர் பதவி வேண்டாம் என்று தீர்மானிக்கப்பட்டு, தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பு சங்க தேர்தல் ஆணையருக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

– சி. அகோரம்,

செயலாளர்.

## மணிக்கிராமம் :

சங்கத்தின் 22–வது ஆண்டு நிறைவு விழா 17–08–25 அன்று தெற்கு தெரு M.M.S. வீட்டு மைதானத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. முதலில் மகளிர் அணியினர் குத்து விளக்கு ஏற்ற, காவல் துறை ஆய்வாளர் ஓய்வு திரு. M. நடேசன் பிள்ளை கொடி ஏற்றி விழாவை துவக்கி வைத்தார்கள். மகளிர் அணியினர் இறைவணக்கம் பாட திருமதி. லதா கண்ணன் வரவேற்புரை நிகழ்த்தினார். சங்கத் தலைவர் திரு. G. அன்பழகன் தலைமை உரை ஆற்ற, திரு. T. கபிலன் செயலாளர் அவர்கள் ஆண்டறிக்கை வாசிக்க பொருளாளர் திரு. S. பரமநாதன் வரவு – செலவு கணக்குகளை படிக்க சபை அதை ஏற்றுக்கொண்டது. ஒருங்கிணைப்பாளர் திரு. M. சிங்காரவேலன் (சங்க துணைத்தலைவர்) அவர்கள் சங்கம் வளர்ந்த விதம் பற்றி எடுத்துரைத்தார். 80. அகவை கண்டவர்கள் மற்றும் பணி நிறைவு பெற்றவர்களை பாராட்டி சால்வை அணிவிக்கப்பட்டது. மணிக்கிராமத்தை சேர்ந்த திரு. R.J.R. பாண்டியன் அவர்களுக்கு மயிலாடுதுறை கிங்ஸ் ரோட்டரி சங்கத்தில் பொருளாளர் பதவி வழங்கியதற்கு பாராட்டி சால்வை அணிவிக்கப்பட்டது.

**வாழ்த்துரை :**

கிராம சமுதாய தலைவர் திரு. S. தர்மதுரை பிள்ளை முன்னிலையில் திரு. S. சண்முகம் பிள்ளை, துணைத்தலைவர்,மயிலாடுதுறை,திரு.K.இராமநாதன் பிள்ளை, துணைத்தலைவர், செம்பொன், திரு. V. சிவராஜன் பிள்ளை, வழக்கறிஞர், துணைத்தலைவர், சிதம்பரம், திரு. S. சீனிவாசன் பிள்ளை மண்டல செயலர் மயிலாடுதுறை, L. ராமசெல்வம் பிள்ளை, மண்டல செயலர், செம்பை ஆகியோர் வாழ்த்துரை நிகழ்த்தினர். திரு. V. மாணிக்கவேல் பிள்ளை உதவி கல்வி அலுவலர் (ஓய்வு) குடவாசல் அவர்கள் திருக்குறள் ஒப்புவித்த மாணவ, மாணவிகளுக்கு பரிசு பணமாக வழங்கி கல்வி உதவித்தொகையும் வழங்கினார். அவர்களுக்கு சங்கத்தின் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது. திருமதி. இராஜலட்சுமி பரமநாதன் போட்டிகளை நடத்தி முடித்தார். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது.செயலர் திரு. T. கபிலன் பனிரெண்டாவது வகுப்பு தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கினார். விழாவிற்கு வந்தகிளை சங்கத்தின் பொறுப்பாளர்களுக்கு சால்வை அணிவிக்கப்பட்டது. காலை 11 மணிக்கு தேநீர், மதியம் 1.30 மணிக்கு மதிய விருந்தும் கொடுக்கப்பட்டது.

மண்டல மகளிர் அணி பொறுப்பாளர் திருமதி. ரம்யா சுவாமிநாதன் நன்றியுரை ஆற்ற, நாட்டுப்பண்ணுடன் கூட்டம் இனிதே முடிந்தது.

- G. அன்பழகன்,

தலைவர்.

## இளந்தோப்பு :

22–08–25 அன்று சங்க கூட்டம் சிவன் கோயில் வளாகத்தில் தலைமை : T. ரவி பிள்ளை, முன்னிலை : S.S.R. பிள்ளை வகிக்க கூட்டம் துவங்கியது.

10–09–25 அன்று விநாயகர் சதுர்த்தி விழா வீதிவுலா நிகழ்ச்சியுடன் மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது.

அடுத்து வரும் சிவன் கோயிலில் நடைபெறவுள்ள நவராத்திரி விழாவை சிறப்பாக கொண்டாட முடிவு செய்யப்பட்டது.

நன்றியுரை : R. ஞானசேகரன் பிள்ளை வழங்க கூட்டம் இனிதே முடிவுற்றது.

- V. ராம மூர்த்தி – V. குருநாதன்,

தலைவர் – செயலாளர் –பொருளாளர்.

## மயிலாடுதுறை :

07–09–25 அன்று செயற்குழு மற்றும் பாராட்டு விழா கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு திரு. ரவிகுமார் தலைவர் (பொறுப்பு) அவர்கள் தலைமை ஏற்க செயலர் தில்லைநாயகம் மகளிர் அணி தலைவி சுகுணா தேவி, இளைஞர் அணி தலைவர் செல்வ முத்துக்குமரன், ஆகியோர் முன்னிலை வகிக்க திருச்சி சங்க தலைவர் சிவகுருநாதன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ள விழா இனிதே துவங்கியது. மகளிர் அணி செயலாளர் அகிலாண்டேஸ்வரி அவர்களின் இறைவணக்கத்துடன் இணைச்செயலாளர் திரு. G. பிரதீப் அவர்கள் வரவேற்பு உரையாற்ற தலைவர் (பொறுப்பு) வகிக்கும் திரு. ரவிகுமார் அவர்கள் தலைமை உரை ஆற்றினார்கள். பாராட்டு விழாவிற்கு வருகை தந்த அனைத்து கார்குல சொந்தங்களையும் பாராட்டு பெற இருக்கின்ற கார்குல உறவுகளையும் வணங்கி வரவேற்றார்கள். இன்றைய விழாவில் மயிலாடுதுறை நகர பகுதியை சார்ந்த அரசு மற்றும் தனியார் துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ள இருபது நம் இன உறுப்பினர்களையும், பல்வேறு சாதனைகள் படைத்து விருதுகள் பெற்ற ஆறு உறுப்பினர்களையும், பல்வேறு சேவை சங்கங்களில் இந்த ஆண்டு பொறுப்பு ஏற்றிருக்கும் எட்டு இன

சொந்தங்களையும், மருத்துவ மேற்படிப்பு மற்றும் மருத்துவபடிப்பை முடித்து புதிதாக பணியேற்றுள்ள 14 மருத்துவர்களையும், 10 மற்றும் 12–ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற 11 மாணவ செல்வங்களையும் வாழ்த்தி பாராட்டினார்கள். கடந்த நான்கு மாத காலமாக தேங்கி கிடந்த வங்கிப் பணிகளை முடித்து ரூபாய் 3 லட்சம் நன்கொடை அளித்த நன்கொடையாளரின் தொகையை நிரந்தர வைப்பு நிதியில் செலுத்தி அவருக்கு வைப்பு நிதி ரசீதும் அனுப்பி வைக்கப்பட்ட நிகழ்வை கூறினார்கள்.

மேலும் நம் இன மாணவச் செல்வங்கள் 66 பேருக்கு ரூபாய் 2,81,000/– கடந்த 20 தினங்களில் நம் இன நன்கொடையாளர்களிடமிருந்து வசூல் செய்து வழங்கிய விபரங்களை தெரிவித்தார்.

பின்னர் பேசிய சிறப்பு விருந்தினர் சிவகுருநாதன் அவர்கள் மயிலாடுதுறை சங்கம் தான். தான் இந்த உயர்ந்த நிலைக்குச் செல்ல தனக்கு துணிவையும் ஊக்கத்தையும் தந்தது என்று பெருமையுடன் கூறினார்கள்.

செயற்குழு கூட்டம் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. காலியாக உள்ள தலைவர் பதவிக்கு 05–10–25 அன்று தேர்தல் நடத்துவது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதற்கு தேர்தல் ஆணையராக திருஞானசம்பந்தம் அவர்களை நியமனம் செய்வது என்று தீர்மானிக்கப்பட்டது.

07–09–25 இன்று நடைபெறும் பாராட்டு விழா செலவினங்களை பின்னேற்பு செய்ய செயற்குழுவின் அனுமதி கோரப்பட்டது.

பாராட்டு பெறுபவர்கள் ஒவ்வொருவரையும் சிறப்பாக அறிமுகம் செய்து அவர்களுக்கு சால்வை அணிவித்து பரிசு பொருட்களை விருந்தினர்கள் வழங்க திரு. செல்வகுமார் திரு. குலசேகரன், திரு. செந்தில்நாதன் இணைச்செயலாளர் திரு. சரவணன் ஆகியோர் நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கினார்கள். பாராட்டு பெற்றவர்கள் சார்பாக லயன் சிவராமன் அவர்கள் ஏற்புரை வழங்கினார்கள். பொருளாளர் திரு. முத்துக்குமாரசாமி அவர்கள் நன்றி உரை ஆற்றினார்கள்.

மேலும் பிளஸ் 2 மாணவர்களுக்கு கைக்கடிகாரம் வழங்கிய முளப்பாக்கம் குருசாமி அறக்கட்டளை நிர்வாகத்திற்கும் பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு பரிசு பொருட்கள் வழங்கிய மகா ஐஸ்கிரீம் உரிமையாளர் திரு. தியாகராஜன் அவர்களுக்கும் வந்திருந்த விருந்தினர்களுக்கு இனிப்பு காரம் வழங்கிய அன்னபூரணி கேட்டரிங் உரிமையாளர் திரு. ராமு அவர்களுக்கும் நன்றியினை தெரிவித்தார்கள்.. விழாவிற்கு வருகை தந்திருந்த அனைத்து கார்குல சொந்தங்களும் பாராட்டு விழா மிகச்சிறப்பாக நடைபெற்றது என்று பொறுப்பாளர்களை பாராட்ட விழா இனிதே நிறைவுற்றது.

சீனு. தில்லைநாயகம்
செயலாளர்
9894986545

## செம்பனார் கோவில் :

சங்க கூட்டம் 06–09–2025 சங்க தலைவர் திரு. M.C.K. இராமநாதம் பிள்ளை அவர்கள் இல்லத்தில், சங்க தலைவர் அவர்கள் தலைமையில், திருமதி. இரத்தினாவதி அவர்கள் இறைவணக்கம் பாடிட சங்கத் தலைவர் அவர்கள் வரவேற்பு நல்கிட திரு. குரு. முத்துகுமார் அவர்கள் சென்ற மாத கூட்டறிக்கை வாசித்திட வரவு – செலவு பொருளாளர் கூறிட கூட்டம் இனிதே தொடங்கியது. சங்க தலைவர் அவர்கள் பேசுகையில் கும்பகோணத்தில் நடைபெற்ற மகளிர் கார்காத்த கலாச்சார விழாவிற்கு நமது சங்கத்தின் சார்பாக 24 பேர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். என்றும் மாநாடு மிகவும் பயனுள்ள வகையில் சிறப்பாக இருந்ததும் என்றும் கூறினார்கள். வரும் 28–ஆம் தேதி மாநில பொறுப்பாளர்களுக்கான தேர்தல் நடைபெறவுள்ளது என்றும் நமது சங்கத்தின் மூத்த உறுப்பினர் திரு. கணபதி நடனம் பிள்ளை அவர்களை நேரில் வந்து ஆதரவு கேட்டுள்ளார்கள் என்றும் பேசினார்கள். சைவ சித்தானந்த இரண்டு ஆண்டு காலம் படிப்பை முடித்து புலவர் பட்டம் பெற்ற திருமதி. இரத்தினாவதி அவர்களை பாராட்டியும் அவர்களுக்கு சங்கத்தின் சார்பாக சிறப்பும் செய்யப்பட்டது. திரு. A.M. சேகர் பேசுகையில் "சோப்பு" என்ற பெயர் எப்படி உருவானது என்றும் சோப்பு போட்டு குளிப்பதால் நாம் அடையும் பலன் பற்றியும் அவர் தேகத்திற்கு தகுந்த "சோப்பை" பயன்படுத்தி குளித்தால் மட்டுமே பலன் பெற முடியும் என கூறினார்கள். திரு. வாசன் அவர்கள் பேசுகையில் யுகங்கள் மொத்தம் நான்கு என்றும் தற்பொழுது கலியுகம் நடைபெறுகிறது என்றும் இன்னும் 10 ஆண்டுகளில் பெரிய மாற்றம் ஏற்படும் என்றும் நமது எண்ணம், சொல், செயல் மூன்றும் நன்மையாக இருக்க வேண்டும் என கூறினார்கள். மண்டல செயலர் திரு. இராமசெல்வம் கூட்டத்தில் கலந்து கொண்டு ஒவ்வொரு ஊரிலும் நமது சங்க கூட்டம் ஒவ்வொரு மாதமும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டு வந்தது என்றும் கூறினார்கள்.

திருமதி. இரத்தினாவதி அவர்கள் பேசுகையில் நமது வாழ்க்கையில் ஏற்பட்ட மனமாற்றத்திற்கு நிறைய புத்தகம் படிப்பதாலும், சைவ சித்தாந்த வகுப்பிற்கு சென்றதன் விளைவு மற்றும் திருமந்திரம் யோக வகுப்பில் கலந்து கொண்டதாலும் மனமும், உடலும் வலிமை அடைந்துள்ளதாகவும், வாய்ப்பு கிடைத்தால், நீங்கள் கலந்து கொண்டு நன்மை பெற வேண்டும் என்றும் கூறினார்கள்.

மேலும் சங்க மூத்த உறுப்பினர் திரு. கணபதி நடனம் பிள்ளை அவர்கள் பேசுகையில் கூட்டம் நடத்திய இல்லத்தாரைப் பற்றியும், புலவர் பட்டம் பெற்ற திருமதி. இரத்தினாவதி பற்றியும் பேசினார்கள். அவர்களுக்கு வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்து கொண்டார்கள். மாநில பொறுப்புக்கு போட்டியிடும் பொறுப்பாளர்கள் என்னை நேரில் சந்தித்து ஆதரவு கேட்டுள்ளார்கள் என்றும் கூறினார்கள். அவர்களிடம் பரசலூர், செம்பனார் போயில் இரண்டு சங்கமும் இணைந்து செயல்பட அனைத்து முயற்சியும் சங்கம் எடுக்க வேண்டும் என கேட்டு கொண்டதாக தெரிவித்தார்கள். கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு ஆண்களுக்கான பரிசு திரு. இராமநாதன் பிள்ளை அவர்களுக்கும் பெண்களுக்கான பரிசு திருமதி. தேவி அவர்களுக்கும் இல்லத்தாரார் அளித்து சிறப்பு செய்யப்பட்டது. கூட்டம் ஏற்று நடத்திய இல்லத்தாருக்கு சங்கத்தின் சார்பாக சிறப்பு செய்யப்பட்டது. இல்லத்தாரால் அளிக்கப்பட்ட இரவு விருந்தில் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். திரு. இரவிச்சந்திரன் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

– கி. இராமநாதன்,

தலைவர்.

## பரசலூர் :

07–09–2025–ம் ஆண்டு மாதாந்திரக்கூட்டம் பரசலூர் பிரதான சாலை ராமு நகர் M. சாமிநாதன் – S. ரேணுகாதேவி இல்லத்தில் S. ரேணுகாதேவி இறைவணக்கத்துடன் M. சாமிநாதன் வரவேற்புரை நிகழ்த்த தலைவர் க. கோவிந்தராஜன் தலைமையில் கூட்டம் துவங்கியது.

செயலர் சென்ற மாத அறிக்கை, பொருளர் மாதாந்திர நிதிய அறிக்கை, தலைவர் மு.அ நிதிய அறிக்கையை வாசிக்க நிதிய சம்மந்தமான பதிவேடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு விடப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

மாநில தேர்தல் தொடர்பான ஒன்றிய செயற்குழு கூட்டத்தில் (திருவிளையாட்டம் கார்காத்தார் சங்கம்) பரசலூர் சங்க பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். சங்க வளர்ச்சிக்கு உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை எடுத்துக்கூறினார்கள்.

கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு இனிப்பு, காரம், காப்பி வழங்கப்பட்டது.

சிறப்புக் குலுக்கலுக்கான ஆண்களுக்கான பரிசு N. சிவக்குமார், பெண்களுக்கான பரிசு R. ஈஸ்வரிக்கும் முறையே M. சாமிநாதன் – S. ரேணுகா தேவி பரிசுப் பொருட்களை வழங்கினர். கூட்டம் நடத்திய இல்லத்தார் M. சாமிநாதன் – S. ரேணுகா தேவிக்கு முறையே R. அமிர்தகணேசன் – A. ஜெயசுதா ஆகியோர் சங்கத்தின் சார்பில் சால்வை அணிவித்தனர்.

தொழில் கல்வி ஆசிரியர் S. செந்தில்குமார் – கவிதை வடிவில் நன்றியுரை கூற கூட்டம் இனிதே நிறைவேறியது.

– வீ. கண்ணன்,

செயலர்.

Cell : 9894960438

## செம்பனார் கோவில் ஒன்றியம் :

சங்க கூட்டமைப்பின் சிறப்பு செயற்குழு கூட்டம் 13–09–25 அன்று திருவிளையாட்டம் தலைவர் இராஜமாணிக்கம் பிள்ளை அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. சங்கம் தோற்றம் முதல் இன்று வரை வழிகாட்டி திரு. கணபதி நடனம் பிள்ளை அவர்கள் முன்னிலையில் ஒன்றிய தலைவர், ப. இலட்சுமணன் பிள்ளை தலைமை வகித்தார்கள். மகளிர் அணியினர் குத்து விளக்கேற்றினார்கள். திருமதி. வளர்மதி ஜெய்சங்கர் இறைவணக்கம் பாடினார்கள். திருவிளையாட்டம் புதிய தலைவர் T.S. மணிவண்ணன் பிள்ளை வரவேற்றார்கள். செயலாளர் M.C.K. இராமநாதன் பிள்ளை அறிக்கையையும், வரவு செலவு அறிக்கையையும் வாசித்தார்கள். செயற்குழு கூட்டம் நோக்கம் பற்றி தலைவர் எடுத்துரைத்தார்கள். வருகை தந்த 16 கிளை சங்க பொதுக்குழு உறுப்பினர்களுக்கும் மகளிர், இளைஞர் அணி பொறுப்பாளர்களுக்கும் திருவிளையாட்ட சங்கம் கைத்தறி ஆடை அணிவித்து கவுரவித்தனர். திரு. கணபதிநடனம் பிள்ளை வருகிற 28–9–25 ஜெயங்கொண்டத்தில் நடைபெறும் மாநில சங்க பொறுப்பாளர்கள் தேர்வு பற்றியும் நமது செம்பொன் மண்டலத்திற்கு ஒரு மண்டல தலைவர், ஒரு மண்டல செயலாளர் தேர்வு பற்றியும் அனைவரது

கருத்துக்களையும் தெரிவிக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். அதன் அடிப்படையில் அனைவரும் தங்கள் கருத்துக்களை எடுத்துரைத்தார்கள் பிறகு மண்டல தலைவர் பதவிக்கு திரு. M.C.K. இராமநாதன் பிள்ளை அவர்களை முன்மொழிந்தும் வழிமொழிந்தும்,

மண்டல செயலாளர் பதவிக்கு திரு. இல. ராமசெல்வம் பிள்ளை அவர்களை முன்மொழிந்தும் வழிமொழிந்தும் ஏகமனதாக தேர்ந்தெடுத்தார்கள். பிறகு மாநில பொறுப்பாளர்களுக்கு வாக்களிக்க 28–9–25 ஜெயங்கொண்டம் அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களும் வருகை தந்து சிறப்பிக்க கேட்டுக்கொண்டார்கள். கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் :** ஒன்றிய செயற்குழு கூட்டம் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை நடத்த வேண்டும் என்றும், மண்டலத்திற்கு உட்பட்ட சங்க கூட்டத்திற்கு மண்டல தலைவர் செயலாளர் இருவரையும் அழைக்க வேண்டும் என்றும், செம்பொன் மண்டலத்திற்கு என்று தனியாக முகவரி கையேடு தயார் செய்வது என்றும், மகளிர் இளைஞர் சங்கம் மாநில சங்கத்தில் பதிவு செய்வது என்றும், திரு. ஜெய்சங்கர் பிள்ளை நன்றி கூறினார்கள். வருகை தந்த அத்துணை பேருக்கும் மதியம் சிறப்பான உணவு திருவிளையாட்டம் சங்கம் வழங்கி வருகை புரிந்தவர்களுக்கு குலுக்கல் முறையில் பரிசு வழங்கினார்கள். கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

K. ராமநாதன்,
ஒன்றியச் செயலாளர்.

---

## மேலப்பெரும்பள்ளம், கீழப்பெரும்பள்ளம் & தலைச்சங்காடு :

சங்க கூட்டம் 05–09–2025 அன்று தலைவர் திரு. B. இலட்சுமணன் அவர்கள் இல்லத்தில் இறைவணக்கத்துடன் இனிதே தொடங்கியது.

சங்க உறுப்பினர்களை வரவேற்று பேசிய தலைவர் திரு. B. இலட்சுமணன் அவர்கள், சென்ற ஆகஸ்ட் 25–ல் மேலப்பெரும்பள்ளம் ஸ்ரீ சீதளா தேவி மாரியம்மன் தீமிதி திருவிழா மற்றும் ஸ்ரீ வேம்பு அய்யனார் கோவில் குடமுழுக்கு திருவிழா ஆகிய இரண்டிற்கும் உடல் உழைப்பு மற்றும் நன்கொடை அளித்த சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக்கொண்டார்.

பின்னர் பொருளாளர் திரு. G. பாஸ்கரன் அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிதே முடிவுற்றது.

– பால. இலட்சுமணன், தலைவர்.
**9443783743**

## 80. இராதாநல்லூர் :

சங்க கூட்டம் முப்பெரும் விழாவாக 18–9–2025 அன்று சங்க செயலர் RMA. ராஜா முத்தையா அவர்கள் இல்லத்தில் சங்க கௌரவத்தலைவர் திரு. K. இராமசுப்ரமணியன் அவர்ள் தலைமையில் சிறப்பு விருந்தினராக அரிமா. Er. S. அகோரம் "மாருதி–பில்டர்ஸ்" அவர்கள் பங்கேற்க தலைவர் T. முத்துக்குமரசாமி அவர்கள் வரவேற்க விழா தொடங்கியது. விழாவிற்கு சீர்காழி மண்டல தலைவர் திரு. M. சிங்காரவேலன், மண்டல செயலாளர் திரு. N. சிதம்பரநாதன் இலையமுதுகூட சங்க தலைவர் திரு. A. நடனம் மேலையூர் சங்க பொருளாளர் திரு. R. வெங்கடேசன், செயலாளர் திரு. G. விஜயராகவன், மகளிர் அணி திருமதி. V. லெட்சுமி, மணி நகர் சங்க தலைவர் திரு. G. அன்பழகன், செயலர் திரு. T. கபிலன், பொருளாளர் திரு. S. பரமநாதன் ஆகியோர் வருகை புரிந்தார்கள். விழாவின் தொடக்கமாக 1) திருவெண்காடு S.S.D. ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்ற திரு. G. மதிவாணன் M.A., B.Ed மற்றும் அயல்நாட்டில் மருத்துவம் பயின்று இந்தியாவில் NEET தேர்வு எழுதி தேர்வில் வெற்றி பெற்ற Dr. M. சிந்துமதி M.B.B.S. D/o G. மதிவாணன் ஆகியோர்க்கு பொன்னாடை அணிவிக்கப்பட்டு நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன.

பூம்புகார் – மேலையூர் – சீனிவாசா மேல்நிலைப்பள்ளியின் உதவி தலைமை ஆசிரியையும் தமிழாசிரியருமாகிய திருமதி. A. உமாதேவி M.A., B.Ed அவர்களுக்கு அரிமா சங்கத்தில் "அறிவுச்சுடர்" விருது வழங்கியதை பாராட்டி நினைவுப் பரிசு வழங்கி சிறப்பிக்கப்பட்டது. சங்க பொருளாளர் திரு. M. சீனிவாசன் அவர்கள் மூவரையும் வாழ்த்தி பாராட்டினார்கள்.

நமது சங்க அழைப்பினை ஏற்று விழாவிற்கு வருகை புரிந்த அனைவருக்கும் சங்க செயலர் திரு. R.M.A. ராஜா முத்தையா அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்கள். தேனீர் விருந்திற்கு பிறகு சங்க பொருளாளர் திரு. M. சீனிவாசன் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

- T. முத்துக்குமரசாமி.
**9443645646**

## பூம்புகார் மேலையூர் :

ஆலோசனை கூட்டம் உறுப்பினர் திரு. பரணீதரன் இல்லத்தில் (7–9–2025) அன்று மழலை

நித்திஷ் அவர்களின் இறைவணக்கத்துடன் தலைவர் திரு. பாண்டியன் அவர்கள் தலைமை வகிக்க கூட்டம் இனிதே நடைபெற்றது.

இந்த மாதம் திருமணநாள் காணும் நமது மூத்த உறுப்பினர் திரு. T. ஜெயபால் அவர்களுக்கும், பிறந்தநாள் காணும் திரு. நடராஜன் ஆசிரியர் அவர்களுக்கும் சங்கம் சார்பாக வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது. 2025–ஆம் ஆண்டிற்கான நமது சங்க ஆண்டு விழா டிசம்பர் மாத இறுதியில் நடத்துவது என அனைத்து உறுப்பினராலும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. நமது சங்க உறுப்பினர்கள் (10–8–2025 அன்று கும்பகோணத்தில் நடைபெற்ற கார்குல கலாச்சார சங்கமம் விழாவிற்கு சென்று வந்தது சம்மந்தமாக கருத்துக்கள் பரிமாறபட்டது.

இறுதியில் பொருளாளர் திரு. R. வெங்கடேசன் நன்றியுரை கூற கூட்டம் இனிதே நிறைவேறியது.

- G. விஜயராகவன், செயலாளர்.

9994635306

## நெடுங்காடு :

திரு. S. ராஜமாணிக்கம் பிள்ளை, அவர்கள் இல்லத்தில் சங்க கூட்டம் தலைவர், செயலாளர், பொருளாளர், மண்டல செயலாளர் முன்னிலையில் நடைபெற்றது.

இறைவணக்கம் : செல்வன் சிவவிக்னேஷ் அவர்கள் பாடினார்கள். நெடுங்காடு கார்காத்தார் தெரு, திரு. குணசேகரன் மனைவி பேபி அவர்கள் மறைவிற்கும்,திரு.வைத்தியநாதன் அவர்களின்தந்தை திரு. சீனிவாசன் அவர்கள் மறைவிற்கும் இரங்கல் தெரிவித்து மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

கார்குல மகளிர் கலாச்சார சங்கம மாநாட்டை சிறப்பாக நடத்திய மகளிர் அணியினருக்கும் சிறப்பாக வழிநடத்திய கார்குல முன்னோடி T.M. வைத்தியநாதன் அவர்களுக்கும் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்ளப்பட்டது. சாதனை மகளிருக்கும் பாராட்டு செய்தமைக்கும், பரிசுகள் வழங்கியமைக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

மாநில சங்க தேர்தலில் காரைக்கால் பகுதிக்கு துணைத்தலைவர் பொறுப்பினை பெற்றுக் கொள்வது எனவும் அப்பொறுப்பிற்கு திரு. G. முத்துக்குமரசாமி அவர்களின் பெயரை முன்மொழிய முடிவு செய்யப்பட்டது.

மாநில பொறுப்பாளர் தேர்தலில் 28–ஆம் தேதி வாக்களிக்க முடிவு செய்யப்பட்டு, சங்க நலன் கருதி தலைவர், செயலர், பொருளாளருக்கு அதிகாரம் அளித்து முடிவு செய்யப்பட்டது.

கார்குலக் கர்ணன் திரு. வெங்கடேசன் பிள்ளை அவர்களுக்கு நேரில் சந்தித்து சங்கத்தின் சார்பில் வாழ்த்து மடல் அளிக்க முடிவு செய்யப்பட்டது.

இந்த மாத பரிசு குலுக்கல் – I. M. முத்துக்குமார் – காரைக்கால், II. S. பத்மநாதன் – நெடுங்காடு, III. P. மோகன் – நெடுங்காடு.

S. ரெங்கநாதன்,

செயலாளர்.

## திருவிடைமருதூர் :

சங்கத்தின் கூட்டம் 21–09–25 அன்று அம்மாசத்திரம் ஊராட்சி ஜெயலெட்சுமி நகர் திரு. க. அருள் இல்லத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு திரு. க. அருள் தலைமை வகித்தார். செயலர் க. பொற்செழியன் மற்றும் பொருளர் திரு. T.S. இராஜமோகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளராக மேனாள் மாநிலப் பொருளர் திரு. தி.மா. வைத்தியநாதன் கலந்து கொண்டார். தமிழ்த்தாய் வாழ்த்துக்கு பிறகு வரவேற்புரை நல்கிய செயலர் திரு. க. பொற்செழியன் திருவிடைமருதூர், திருவாலங்காடு, திருவாவடுதுறை, திருமாந்துறை, சூரியனார் கோவில், கௌத்தூர், அம்மாசத்திரம் ஆகிய ஊர்களில் இருந்து வந்துள்ள நம் இன சொந்தங்களை வரவேற்றார். மேலும் அவர் நம் இன குறிக்கோளான நம் இனத்தை சுவாசிப்போம்! பிற இனத்தை நேசிப்போம்! என்பதனை சுட்டிக்காட்டி நம் இன பண்பாடு, பெருமை காத்திட நம் இன ஒற்றுமை அவசியம் என கூறினார்.

தொடர்ந்து பேசிய மேனாள் மாநில பொருளர் கயிலை தி.மா. வைத்தியநாதன் ஒற்றுமையின் அடையாளமாக சங்கம் விளங்க வேண்டும் என கூறினார். அதோடு சங்கம் உருவான வரலாறு கூறினார். மற்றும் சங்கமானது அருகில் உள்ள கோவில் விழாக்களில் கலந்து கொண்டு அது போது அன்னதானம், குடிநீர் வழங்கல் போன்ற சேவைகள் மேற்கொள்ள வேண்டும் என்றார். அதனை தொடர்ந்து பேசிய பொருளர் திரு. T.S. இராஜமோகன் சங்க வருங்கால திட்டம் ஆகிய ஆண்டு விழா நடத்துவது பற்றியும் அதற்கு அனைவரது ஒத்துழைப்பும் அவசியம் என்றார். அதோடு உறுப்பினர்கள் சந்தா அளிக்க கேட்டுக்கொண்டார் தொடர்ந்து பேசிய செயலர் 28–9–25 அன்று நடைபெறும் நம் மாநில சங்க தேர்தல் குறித்து எடுத்துரைத்தார்.

நட்பு அதிகாரத்தில்

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு –

என குறள் கூறி விளக்கம் கூறினார். இன்று மகாளய அமாவாசை தினம் நம் முன்னோர்களின் வானின்று வாழ்த்துதல்களை பெற இரண்டு நிமிட மௌனம் மூலம் ஆசி பெற்றனர். கூட்ட ஏற்பாடுகளை சிறப்புற செய்த திரு. மாறன் மற்றும் திரு. க. அருள் ஆகியோர் பாராட்டப்பட்டனர். செயற்குழு உறுப்பினர் திரு. க. அருள் நன்றி கூற எளிய தேநீர் விருந்துடன் கூட்டம் இனிதே முடிவுற்றது.

– க. பொற்செழியன்,
செயலர்.

## கும்பகோணம் :

10–09–2025 அன்று சங்க செயற்குழு கூட்டம் ராஜேந்திரன் பேட்டை நெல்லுகடைத்தெரு, திரு. N.ராஜா அவர்கள் இல்லத்தில் துணைத்தலைவர் திரு. M.பாலகுரு அவர்கள் தலைமை ஏற்க துணைத்தலைவர் திரு. G. ராஜாராமன் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் கலந்து கொண்டவர்களை பொருளாளர், திரு. A.S. பழனி வரவேற்றார்கள். கூட்ட முடிவில் செயலாளர் திரு. S. விஜயகுமார் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்கள்.

ஒவ்வொரு வருடமும் நடைபெறும் தீபாவளி நிகழ்வாக முதியோர் இல்லத்தில் உணவு, உடை, இனிப்பு மற்றும் காரம் வழங்குவது எனவும்,

மங்கல சந்திப்பு 2016 ஏப்ரல் முதல் வாரம் நடத்துவதற்கு எம்.ஆர்.கே. பாண்டியன் அவர்கள் தலைமையில் குழு அமைப்பது எனவும்,

நமது சங்கத்தைப் பற்றியோ நிர்வாகம் மற்றும் நிர்வாகிகள் பற்றியோ எந்த விமர்சனம் விவாதங்கள் செயற்குழு மற்றும் பொது குழுவில் மட்டுமே விவாதிக்கப்பட வேண்டும் அதற்கு மாறாக பொது வெளியில் வாட்ஸ் அப் வாயிலாகவோ பேஸ்புக் வாயிலாகவோ வேறு நெகிழிகள் வாயிலாகவோ விவாதிக்கக்கூடாது. அவ்வாறு விமர்சனம் செய்பவர்களை செயற்குழுவில் விவாதித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும்,

தமிழ்நாடு கார்காத்தார் கூட்டமைப்பு மண்டல துணைத்தலைவர் பதவிக்கு திரு. விஜயகுமார் அவர்களை வேட்பாளராக முன்னிறுத்துவது எனவும்,

திருப்பனந்தாள் காசி மடம் 22–ஆவது அதிபராக ஸ்ரீலஸ்ரீ சபாபதி தம்பிரான் அவர்கள் பதவி ஏற்பதற்கு பாராட்டுகளை கும்பகோணம் மண்டல கார்காத்தார் சமூக நல சங்கம் தெரிவித்துக் கொண்டு தீர்மாயனங்கள் நிறைவேற்றப்பட்டது.

திருப்பனந்தால் காசிமடத்து 21–வது அதிபர் ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமரசுவாமி தம்பிரான் அவர்கள் பரிபூரணம் அடைந்ததற்கும்,

நமது சங்க இணை பொருளாளர் திரு. T.S. சூரிய நாராயணன் அவர்களின் தாயார் சிவகாமி அம்மாள் அவர்கள் 29–8–25 அன்று இறைவனடி சேர்ந்தமைக்கும் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

- S. விஜயகுமார்,
செயலாளர்.

## தஞ்சாவூர் :

சங்க கூட்டம் 09–09–2025 அன்று திரு. S. மோகன்குமார் இல்லத்தில் நடைபெற்றது. சங்கத்தலைவர் திரு. S. ஜெயச்சந்திரன் அவர்கள் வரவேற்புரையாற்றினார்கள். சங்க செயலாளர் திரு. S. மதியழகன் சென்ற கூட்ட நடவடிக்கைகளை வாசித்தார்கள்.

திரு. R. சண்முகம் சங்க பொருளாளர் 23–05–2025 மகளிர் தின செலவுகளையும், கும்பகோணத்தில் 10–08–2025–ல் நடைபெற்ற சங்க கலாச்சார பண்புகள் குறித்தான செலவு அறிக்கை படிக்கப்பட்டு ஏகமனதாக அங்கீகாரம் செய்யப்பட்டது.

28–09–2025–ல் நடைபெறவுள்ள பொதுக்குழுக் கூட்டத்தில் (தலைவர், செயலாளர், பொருளாளர்) மூவரும் கலந்து கொண்டு, தேர்தலில் வாக்குகள் அளிக்க முடிவு செய்யப்பட்டது. நமது சங்கத்திலிருந்து தேர்தலில் நிற்க தகுதியுள்ள உறுப்பினர்கள் யாரும் விருப்பம் தெரிவிக்காததால் வேட்பு மனு தாக்கல் குறித்து அவசியம் ஏற்படவில்லை. சங்க 2025–ல் ஆண்டுக்கான விழாவை நடத்திட அடுத்து வரும் கூட்டத்தில் முடிவு செய்வது என்றும் தெரிவிக்கப்பட்டது. திருமதி. V. சிவரஞ்சினியின் தையற் மிஷின் கோரிக்கை மனு மீது பரிசீலித்து நடவடிக்கை எடுக்க முடிவு செய்யப்பட்டது.

கூட்டம் நடத்திடவும், சிற்றுண்டி வழங்கியமைக்கும் திரு. S. மோகன்குமார் குடும்பத்தினருக்கும் திரு. D. சுகுமாறன் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுப்பெற்றது.

- S. ஜெயச்சந்திரன், தலைவர்.
9952564790

**மதுரை:**

14.09.2025 அன்று செயற்குழு கூட்டம் சங்கத் தலைவர் முனைவர் K. சிவசுப்ரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சங்க செயற்குழு உறுப்பினர் திரு. K. ராஜேந்திரன் அவர்கள், கடவுள் வாழ்த்து பாடினார்.

மாநில அளவில் நடைபெறும் சங்க தேர்தல் பற்றி விவரித்தார். மதுரை சார்பாக மண்டல தலைவராக திரு. S. உமையொருபாகம் அவர்களை நியமிக்க முடிவு செய்து சங்க துணைச்செயலாளர் திரு. N. இராமலிங்கம் & C. கார்த்திகேயன் பசுங்கிளி முன்மொழிய, சங்க பொருளாளர் வழக்கறிஞர் S. முருகன் வழிமொழிந்தார். முறையே படிவம் பூர்த்தி செய்து சங்க தலைவர் முனைவர் K. சிவசுப்ரமணியம் மற்றும் பொருளாளர் வழக்கறிஞர் S. முருகன் கையொப்பம் இட்டனர். கல்வி உதவிதொகை படிவம் வழங்கப்பட்டது. பின்னர் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

B. ரவிச்சந்திரன்
செயலாளர்
**9443831474**

**திருநெல்வேலி:**

24.08.2025 அன்று சங்கத்தின் 107வது ஆண்டு விழா கார்குல கர்ணன் வெங்கடேசன்பிள்ளை அரங்கத்தில் C. சண்முகசுந்தரம்பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மகளிர் அணியினர் இறைவணக்கம் பாடி கூட்டம் ஆரம்பம் ஆனது. தலைவர் உரையில் சங்க வளர்ச்சி ஒற்றுமை வலியுறுத்தி பேசினார்கள். கூடலரசன்பிள்ளை அனைவரையும் வரவேற்றும், செயலர் செ. இராமசுப்பிரமணியபிள்ளை ஆண்டறிக்கை வாசித்தார்கள். நிதிநிலை அறிக்கையும் வாசித்து ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தேர்தல் அதிகாரியாக அம்பாசமுத்திரம் தலைவர் சொக்கலிங்கம்பிள்ளை நியமிக்கப்பட்டு மதியம் 1 மணி வரை மனு தாக்கல் செய்ய நேரம் கொடுக்கப்பட்டது.

சிறப்புவிருந்தினர்வே.வீரபுத்திரன்பிள்ளை சங்க ஒற்றுமை, சங்க வளர்ச்சி, கல்வி பயில வழிகாட்டுதல், உதவிகள், நம் இன மக்களின் வீடுகளில் நடக்கும் நல்ல காரியங்களுக்கு குடும்பத்துடன் கலந்துகொள்ளுதல் பற்றி விரிவாக எடுத்துக் கூறினார்கள். டாக்டர் அகிலாண்டபாரதி அவர்கள் கண்களை பாதுகாப்பது, கண் தானம் செய்வது, கண்களில் வரும் நோய்களை குணப்படுத்தும் முறைகள் பற்றி விரிவாக எடுத்துக் கூறினார்கள். அம்பை ஜி. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் சங்க வளர்ச்சி பற்றி எடுத்து கூறினார்கள். கூடலரசன்பிள்ளை அவர்கள், சங்க வளர்ச்சி இன்னும் செய்ய வேண்டிய வேலைகள், உதவிகள் பற்றி பேசினார்கள்.

**9, 10, 11, 12** படிக்கும் **68** மாணவ மாணவிகளுக்கு தலா ரூ. **1000/–** வீதம் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது. **10, 12**ல் நன்கு படித்து அதிக மதிப்பெண் பெற்றவர்களுக்கு I பரிசு – **3000/–**, II பரிசு – **2000/–**, III பரிசு – **1000/–** வீதம் வழங்கப்பட்டது.

தேர்தலில் யாரும் எதிர்த்து போட்டியிடாததால் தாக்கல் செய்யப்பட்ட அனைவரும் போட்டியின்றி ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்ட விபரத்தை கூறி, தேர்தல் அதிகாரி நிர்வாக உறுப்பினர்கள் பெயரை வாசித்தார்கள். கரவொலி மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. நன்கொடை வழங்கிய அனைவருக்கும் பத்திரிக்கை அடித்துக் கொடுத்த குமார் கேபிள் உரிமையாளர் A.C. இராதாகிருஷ்ணன் பிள்ளை, சமையல் மாஸ்டர் மணி, கிளை சங்க நிர்வாகிகளுக்கு சால்வை அணிவித்து கௌரவிக்கப்பட்டது. சிறப்பு விருந்தினர்களுக்கு சால்வை அணிவித்து நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. மதியம் அறுசுவை உணவு அனைவருக்கும் வழங்கப்பட்டது. S.K. கணபதியாபிள்ளை நன்றியுரை கூற கூட்டம் இனிதாக முடிவுற்றது.

**24.08.2025** அன்று நடைபெற்ற பொதுக்குழுவில் நிர்வாகிகள் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் விவரம்

தலைவர்: திரு. C. சண்முகசுந்தரம்பிள்ளை, **9865353843**, செயலாளர்: திரு. C. இராமசுப்பிரமணியன்பிள்ளை, **9486557059**, பொருளாளர்: திரு. A. திருஞானசம்பந்தன்பிள்ளை, **9976702800**,

துணைத்தலைவர்கள்: S.K. கணபதியாபிள்ளை, **9486672981**, M.K. தியாகராஜன்பிள்ளை, **9442024405**, A.C. ராதாகிருஷ்ணன்பிள்ளை, **9443081041**

இணைச்செயலாளர்கள்: M. இளங்கோபிள்ளை, **9003406329**, S. கூடலரசன்பிள்ளை, **9488668132**, M.K. கனகசபாபதிபிள்ளை, **9943632102**, C. சங்கரநாராயணன்பிள்ளை, **9842110916**

**கோவை :**

சங்கத்தின் **46–**ம் ஆண்டு விழா கோவை மணி மஹால் திருமண மண்டபத்தில் **31–8–25** அன்று சிறப்பாக நடைபெற்றது.

***ஆன்மீக அமர்வு*** : தெய்வத்தமிழ் இசை

செல்வர் மா. கண்ணப்பன் ஓதுவார், திருமுறை இசைச்செல்வி திருமதி. தனசொரூபி கண்ணப்பன் அவர்களின் திருமுறை இன்னிசை பாடல்களுடன் டாக்டர் S. மணிமேகலை, திருமதி உமாசங்கரன், திருமதி கங்காதேவி முன்னிலையில் விழா இனிதே துவங்கியது.

**சித்த வைத்திய இலவச முகாம் :** சித்த மருத்துவ முகாமை டாக்டர் கே. அர்ச்சனா அவர்கள் தொடங்கி வைத்தார்கள். சித்த மருத்துவர் டாக்டர் எஸ். நடராஜன் அவர்கள் பல உறுப்பினர்களுக்கு இலவசமாக ஆலோசனைகளையும் மருந்துகளையும் தந்தார்கள்.

**சங்க நிர்வாக அமர்வு :** செல்வி S.V. ரம்யஸ்ரீ ரஞ்சனா மற்றும் செல்வி. S.V. கலை ஸ்ரீ ரஞ்சனா அவர்களின் இறைவணக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்டது. திருமதி. விஜயா சைலப்பன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்கள். திரு. P.T. திருவேங்கடம் அவர்கள், திரு. V. சைலப்பன் அவர்கள் முன்னிலை வகித்தார்கள் திரு. K.R. சிவராஜா கோபால் அவர்கள் ஆண்டறிக்கை மற்றும் நிதி அறிக்கை வாசித்தார்கள். சங்க நிர்வாகிகள் சார்பாக நிர்வாக உரையை திரு. S. பழனிவேல் அவர்கள் உரையாற்றினார்கள். விழா தலைமை உரையை திரு. S. ஞானசம்பந்தம் அவர்கள் சிறப்பாக கூறினார்கள். திரு. S. சுவாமிநாதன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சங்கத்தின் வளர்ச்சிக்கு பல நல்ல கருத்துக்களை எடுத்துரைத்தார்கள். சங்க முகவரி கையேட்டை Dr. R. ஜெயபால் அவர்கள் வெளியிட திரு. M. செந்தில் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

**பாராட்டரங்கம் :** 80–ஆவது வயது திருமண விழாவை நிறைவு செய்த மூத்த உறுப்பினர்களுக்கும், தங்கள் பணிகளில் மிகவும் சிறப்பாக பணிபுரிந்த உறுப்பினர்களுக்கும், மாவட்ட அளவில் கலை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பரிசு பெற்ற செல்வி. S.V. ரம்யஸ்ரீ ரஞ்சனா மற்றும் செல்வி S.V. கலை ஸ்ரீ ரஞ்சனா ஆகியோருக்கு பொன்னாடை அணிவித்து சிறப்பு செய்யப்பட்டனர்.

**நினைவேந்தல் மோட்ச வழிபாடு:** கோவை சங்க உறுப்பினர்களின் இதயத்தில் வீற்றிருக்கும் இறைவன் திருவடி அடைந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தி, இறைவழிபாடு நடைபெற்றது. திருமறைச் செல்வர் கலைமாமணி திரு. கெங்காதர தேசிகர் அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

**அருளாசி அமர்வு :** கோவை கௌமார மடாலயத்தின் நான்காம் குருமஹா சன்னிதானம் சிரவை ஆதீனம் திருப்பெருந்திரு முனைவர் இராமானந்த குமரகுரு சுவாமிகள் அருளானந்த ஆசியுரை ஆற்றினார்கள்.

திரு. V. சோமசுந்தரம் திரு. C. கருணாநிதி, திரு. S.K. சண்முகம் அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

**தொழில் முனைவோர் சிறப்பு அமர்வு :** திரு. B. அனந்த பத்மநாபன் அவர்கள் தலைமையேற்றார். திரு. N. கோபால், திரு. P. வாஞ்சிநாதன், திரு. T.S. வீரபாகு அவர்கள் முன்னிலை வகித்தனர். Dr. P. உமா மகேஸ்வரி அவர்கள் How to start a "Start Up" என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார்கள். முதலீடும் சேமிப்பும் சைபர் பாதுகாப்பு விழிப்புணர்வு பற்றி திரு. K.E. கல்யாணசுந்தரம் அவர்கள் பல நல்ல தகவல்களை எடுத்துரைத்தார். **திருமண தகவல் வரன்கள் அறிமுக அமர்வு :** திரு. C. கருணாநிதி, திருமதி. சுந்தரி சிவராஜ் கோபால் அவர்கள் நடத்தினர். பல உறுப்பினர்கள் வரன் அறிமுக நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பயன்பட்டனர்.

மனமகிழ்முற்றம் என்ற நிகழ்ச்சியில் நம் குல மாணவச் செல்வங்களின் திறன் வெளிப்படுதல் நிகழ்வு மிகச் சிறப்பாக நடைபெற்றது.

**உடலும் மனமும் அமர்வு :** Dr. T. சிவசங்கரன் அவர்கள் எளிய உடற்பயிற்சிகளையும் அதனால் விளையும் நன்மைகளையும் பற்றி சிறப்பாக விளக்கி கூறினார்கள். திரு. S. சங்கர சுப்பிரமணியன் அவர்கள் யோகா பற்றி அருமையான செயல் விளக்கம் தந்து உறுப்பினர்களின் கேள்விகளுக்கு விடை தந்தார்கள்.

திருமதி. வசந்தரத்னா அவர்கள் விழா நிகழ்ச்சிகளைமிகஅழகாகதொகுத்துவழங்கினார்கள். திரு. டி. மகாராஜன் அவர்கள் நன்றி உரையுடன் விழா இனிதே நிறைவுற்றது.

---

## வருந்துகிறோம்

சீர்காழி, சன்னதி தெரு, திரு. N. சௌந்தரராஜன் பிள்ளை அவர்கள் 2–09–25 அன்று இயற்கை எய்தினார், சீர்காழி, தென்பாதி காவேரி நகர் திரு. M.G. ராஜா அவர்களின் தாயார் பாலாமணி அம்மையார் 23–09–25 அன்று இயற்க்கை எய்தினார் என்பதை சீர்காழி சங்கம் ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்து கொள்கிறது.

..................................

பூர்வீகம் திருவாலங்காடு மயிலாடுதுறை மாவட்டம் திரு. கார்த்திகேயன் இந்திய விமான படையில் உயர் அதிகாரியாக பணியாற்றி 18–9–25 அன்று சென்னையில் காலமானார். விமானப்படை அதிகாரிகள் தேசிய கொடி போர்த்தி மலர்வளையம் வைத்து இறுதி மரியாதை செய்தனர்.

### சங்கப் பலகை

**பங்கு பெறுவோர் :** மீனா, கோமதி, கௌரி, சித்ரா, ஆண்டாள், பிரியா, மீரா, வசுமதி, மற்றும் தீபிகா.

**இடம் : செம்மொழிப் பூங்கா.**

மகளிர் அனைவரும் மாலை 5 மணி அளவில் பூங்காவில் குழுமினர்.

ஆண்டாள் : போன வருஷம் வந்தது; இந்த வருஷம் நல்ல மழையா இருந்ததால, பூங்கா நல்லா பச்ச பசேல்ன்னு இருக்கு. மனசுக்கு ரம்மியமாக ஒரு ஆனந்தத்தை தருதுல்ல!

மீனா : ஆமாக்கா ! தீபாவளி பர்சேஸ் எல்லாம் எல்லாருக்கும் முடிஞ்சுடுச்சா ? ரெடியாயிட்டீங்களா ? என்னல்லாம் ஸ்வீட், காரம் பண்ணப் போறீங்க ?

சித்ரா : முன்னெல்லாம் 4 Sweet, 4 காரம் பண்ணும் பழக்கம். இப்பல்லாம் each 2 தான். அடுத்த Meet க்கு நாம் பண்றதை எடுத்துட்டு வந்து பகிர்ந்துப்போம்.

மீனா : அதுவும் Correct தான். ஆண்டாளக்கா! உங்க காலத்துலே எப்படி செலபரேட் பண்ணுவீங்கன்னு சொல்லுங்க.

ஆண்டாள் : நிசம்மாவே அந்த காலத்துல ரொம்ப கொண்டாட்டமா இருக்கும். நான் சின்னவளா இருந்தப்ப, கூட்டுக் குடும்பம் தானே! கிராமத்திலே எல்லா வீட்டிலேயேயும் ஜே! ஜேன்னு கூட்டம் தான். பண்ணயாளுக்குன்னு பலகாரம் ஒரு தவளையில் இருக்கும். அனைவரும் காலை 3 மணிக்கே எழுந்து, பாட்டி தலைக்கு சிறிதளவு எண்ணெய்சாஸ்திரத்துக்கு வைக்க, நாங்கள் குளிச்சிட்டு வந்ததும், தாத்தா எங்களுக்கு புத்தாடை கொடுப்பார்கள். புத்தாடை அணிந்து மத்தாப்பு, கொளுத்தி வெடி வெடிப்போம். யார் வீட்டிலே நிறைய குப்பை இருக்குன்னு ஒரு போட்டி வேறே! எல்லாரும் தூங்கின பின் முந் நாள் ராத்திரியே எந்த வீட்டிலே குப்பை நிறைய இருக்கோ, அந்த குப்பையை என் தம்பிகள் கை நிறைய எடுத்து வந்து எங்க வீட்டுக்கு முன்னால் போட்டுவிடுவார்கள். அப்பல்லாம் இத்தன டைப் மத்தாப்போ, வெடிகளோ இல்லை. என் கல்யாணத்தப்போ தான் ராக்கெட் போன்றவைகள்மார்க்கெட்டுக்குவந்துச்சு. அப்பல்லாம் கம்பி மத்தாப்பு, நெருப்பு பெட்டி மத்தாப்பு, பென்சில், சாட்டை, சங்கு சக்கரம், புஸ்வாணம், லட்சுமி வெடி, சீனு வெடி, ஆட்டம்பாம் இவ்வளவுதான் இருந்துச்சு.

மீரா : ஆமாம்மா! எனக்கும் ஞாபகம் இருக்கு. அப்புறம் பாம்பு, வெங்காய வெடி இருந்துச்சு. கேப் வெடி அந்த காலத்துலே இருந்துச்சு. இப்ப அவ்வளவா காணல. புதுசு கட்டினதும் வீட்லே இருக்கற பெரியவங்களுக்கு நமஸ்காரம் பண்ணி ஆசீர்வாதம் வாங்கணும். காலை டிபனுக்கு இட்லி, கேசரி, வடை, சுழியன் அல்லது பஜ்ஜி கட்டாயம் இருக்கும். காலைலே எட்டு மணிக்கு வீட்டில், பண்ணையாள் வேலை செய்பவர்கள் வர அப்பாவும், தாத்தாவும் அவர்களுக்கு இட்லி, சாம்பார், சட்னி மற்றும் தேந்தலை, அதிரசம், ரவா உருண்டை மற்றும் வேஷ்டி துணி, சேலை கொடுத்து அனுப்புவார்கள்.

ஆண்டாள் : ஆமாம்பா! என் கல்யாணத்துக்குப் பிறகு 3 அல்லது 4 வருஷம் அந்த பழக்கம் இருந்தது. அப்புறம் அவர்கள் எங்களுக்கு பலகாரம் எல்லாம் வேண்டாம் என்று கூறி புத்தாடை மட்டும் வாங்கினார்கள். இப்ப அதுவும் இருக்கா ? இல்லையா ? எனத் தெரியவில்லை.

கௌரி : திருப்பனந்தாள் மடத்தின் 22–வது அதிபராக; சபாபதி தம்பிரான் 34 வயதில் ஆகியுள்ளார். எனக்கு நேரில் பதவியேற்பு காணும் பாக்கியம் கிடைச்சுது. புதிய அதிபராக அஷ்டலட்சுமிமண்டபத்தில் ஞான பீடம் ஏறும் வைபவம் நடைபெற்றது. காசிமட குருமூர்த்தி வழிபாடும் செய்யப்பட்டது. திருப்பனந்தாள் நடுப்பண்ணை TRM டிரஸ்ட் சார்பில் திரு. தி.மா. வைத்தியநாதன் அவர்கள் அழகிய செங்கோல் ஒன்றை அவருக்கு வழங்கினார். மாலையில் திருவீதி உலாவும் சிறப்பாக நடைபெற்றது. Full day இருந்து எல்லாத்தையும் காணும் வாய்ப்பு கிடைத்தமைக்கு ஈசனுக்கு நன்றி கூறணும்.:

சித்ரா : ஜப்பானில் நடந்த அரியணை ஏறும் விழா பற்றி சொல்றேன். அங்கு 40 ஆண்டுகளுக்குப் பின் அரியணை ஏறும் ஆண் வாரிசு இளவரசர் ஹிசா ஹிதோ. ஜப்பானில் இன்றளவும் முடியாட்சி உள்ளது. அரசர் அரசியல் அதிகாரம் ஏதுமின்றி அரசின் தலைவராக உள்ளார். ஆண் வாரிசுகளே அரசராகலாம் என்று Rule. இப்ப மன்னராக இருப்பவர் நருஹிதோவிற்கு ஒரேமகள் இளவரசி ஐகோ. அதனால் அரசரது தம்பி அகிஷினோ பட்டத்து இளவரசராக உள்ளார். அவரது மகன் தான் ஹிசாஹிதோ, இந்த வருடம் அவருக்கு 19 வயது பூர்த்தியானதையொட்டி, வயதுக்கு வந்த விழாவாக இம்பீரியல் அரண்மனையில் அரசு குடும்பமும், ஜப்பானிய அரசும், மக்களும் கொண்டாடினார்களாம்.

தீபிகா : புதுசா ஒண்ணை சொல்லியிருக்க! Sugar Test பண்ண ஒரு புது முயற்சி! ரத்தத்திலே சர்க்கரை அளவு அதிகரிச்சா, உடலில் அசிடோன் அளவு அதிகரிக்கும். வாயால் ஊதினால் வரும் காற்றில் அசிடோனைக் கண்டறியும் கருவியை அமெரிக்காவின் பென்சில்வேனியா பல்கலைக்கழகம்

கண்டறிந்துள்ளது. இதன் மூலம் ரத்த மாதிரி எடுக்காமலேயே உடம்பில் உள்ள சர்க்கரை அளவை அறிந்து கொள்ளலாம். எப்போது மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு வரும்னு தெரியல.

வசுமதி : நான் சானிடைசர் பற்றி சொல்றேன். இப்பஇருக்கறசானிடைசர்கள்பெரும்பாலும்எத்தனால் கொண்டு தயாரிக்கப்படுபவை இவை உடனடியாக கிருமிகளைக் கொல்லும். ஆனால் அதிகபட்சமாக 1 மணி நேரம் மட்டுமே இவற்றின் ஆற்றல் இருக்கும். ஜார்ஜியா பல்கலைக்கழகம் காயங்களுக்கான மருந்தில் சேர்க்கப்படும் நைட்ரிக் ஆக்ஸைட் மூலக் கூறுகளைக் கலந்து புதிய சானிடைசரை உருவாக்கி உள்ளது. இதற்கு நைட்ரிக் ஆக்ஸைட் வெளியாகும் ஜெல் அதாவது NOREL (Nitric oxide Releasing Gel) என பெயரிட்டு, முயலின் தோல் மீது சோதித்துப் பார்த்ததில் 97% கிருமிகளை 2 மணி நேரம் தோலில் தங்கியிருந்து கொன்றுள்ளது. இன்னும் நேரத்தினை அதிகரிக்க கிளிசரின், எத்தனால் கலந்து ஆய்வு மேற்கொண்டுள்ளார்கள்.

சித்ரா : இது வந்தா இப்ப மாதிரி அடிக்கடி கைகளில் சானிடைசரை உபயோகிக்க வேண்டாம்ல!

கோமதி : நான் Universe பற்றி சொல்ல போறேன்பா! நெப்டியூன் கோளைத்தாண்டி நீண்ட தொலைவில் 700 கி.மீவிட்டமுள்ள 2017 of 201 என்று பெயரிடப்பட்ட ஒரு கோளை விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். சூரியனை ஒரு முறை சுற்றி வர இதற்கு 25000 ஆண்டுகள் பிடிக்கும் என்றும் கூறி உள்ளனர். அதுபோன்றே நமது சூரிய மண்டலத்திலிருந்து 2472 ஒளியாண்டுகள் தொலைவில் 'கெப்லர் 7250' எனும் கோளை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். பூமியை விட 10 மடங்கு அதிக நிறையை உடையது இக்கோள்.

மீனா : பொதுவா சிறிய நட்சத்திரத்தைச் சிறிய கோள்தான் சுற்றி வரும். ஆனால் சிறிய நட்சத்திரமான TOI 6894 என்பதைச் சனி கிரகத்தை விட சற்றே பெரிய கோள் ஒன்று. சுற்றி வருவது விஞ்ஞானிகளை ஆச்சரியத்தில் ஆழ்த்தி உள்ளது. இன்னொரு செய்தி; பூமியைத் தாக்கும் என்று அஞ்சப்பட்ட விண்கல் 2024 YRA. ஆனால் இது 2032 ல் நிலவைத் தாக்கக் கூடும் என்கின்றனர். ஆய்வியல் விஞ்ஞானிகள். என் பங்குக்கு நானும் சொல்லிட்டேன்.

பிரியா : நான் நமது பாரதத்தில் நடப்பதைக் கூறிமுடிக்கிறேன். வடகிழக்குமாநிலமானமிசோராமில் புதிதாக துவங்கப்பட்ட பைராபி – சாய்ராங் ரயில் பாதை, பசுமை போர்த்திய வயல்களின் நடுவே, வளைந்து நெளிந்து செல்லும் பாதைகளில் மேல் அமைந்துள்ளது. இத்தடத்தில் ரயிலில் பயணிப்பது புதிய அனுபவத்தைத் தரும். இது மொத்தம் 8070 கோடி ரூபாய் மதிப்பில் 51.38 கி.மீ. தூரத்துக்கு கட்டப்பட்டுள்ளது. இன்னொரு செய்தி ; ஆசியாவிலேயே மிக அகலமான, அவுண்டா – சிமோரியா ஆறு வழி கேபிள் பாலம்; 1.86கி.மீ நீளம், 112 அகலத்தில் இந்தியாவின் பீகார் மாநிலத்தில் அமைந்துள்ளது. நமக்கு time கிடைக்கும் போது இவைகளைப் பார்த்து வரலாமா ?

சித்ரா : நமது உரையாடலை தமிழகச் செய்தியோடு முடிப்போம். தமிழகத்தில் நடப்பு கல்வியாண்டு முதல் பொறியியல் படிப்புக்கு புதிய பாடத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டதுடன், ஜப்பானீஸ், ஜெர்மன், கொரியா மொழிகளில் ஏதேனும் ஒன்றைத் தேர்வு செய்து கற்க அண்ணா பல்கலைக்கழகம் உத்தரவிட்டுள்ளது. அடுத்த மாதம் மழை இருக்கும்; அதனால் பாம்குரோவ் ஹோட்டலில் சந்திப்போம்.

அனைவரும் ஆமோதித்து, மீனா கொண்டு வந்திருந்த சுண்டலையும், பிரியா கொண்டு வந்திருந்த ரோஸ்மில்க் பானத்தையும் அருந்தி கலைந்தனர்.

நன்றி ! வணக்கம் !

---

## வாழ்த்துகிறோம்

கன்னியாகுடி திரு. திருநாவுக்கரசு பிள்ளை, திருமதி. சித்ரலேகா இவர்களின் புதல்வன் A.T. ஹரிஹரன் அவர்களுக்கும் மயிலாடுதுறை, தாலுக்கா, மல்லியம் திரு. G. ராஜகுமார் பிள்ளை – திருமதி. அபிராமி இவர்களின் புதல்வி .R. அனுகிருத்திகா அவர்களுக்கும் 20–8–25 அன்று மயிலாடுதுறை அபிராமி மஹாலில் திருமணம் இனிதே நடைபெற்றது.

நாங்கூர் திரு. R. முருகன் பிள்ளை – திருமதி. புவனேஸ்வரி இவரக்ளின் புதல்வி M. காயத்ரி அவர்களுக்கும் நெல்லை மாவட்டம் இராஜவல்லிபுரம் திரு. K. கனகராஜ்குமார் – திருமதி. S. ஜெயந்தி இவர்களின் புதல்வன் K. குற்றாலலிங்கம் அவர்களுக்கும் 20–8–25 அன்று வைத்தீஸ்வரன் கோயில் இந்திரபவன் மண்டபத்தில் திருமணம் இனிதே நடைபெற்றது. மணமக்களுக்கு சீர்காழி சங்கத்தின் சார்பில் சந்தன மாலை அணிவித்து வாழ்த்து மடல் வாசித்து வழங்கப்பட்டது.

– சி. அகோரம்,
செயலாளர்.



## ஆசிரியர் பணி அறப்பணி !

கல்வி என்பது குழந்தைகளின் ஒட்டுமொத்த ஆளுமைத்திறனை வளர்க்கும் முயற்சி எனலாம். இம்முயற்சியில் ஈடுபடும் ஆசிரியர்களை சமூகமானது மாதா மற்றும் பிதாவைத் தொடர்ந்து அடுத்த நிலையில் தெய்வத்திற்கு மேலாக கருதும் நிலையினை இன்றும் காண இயலும். இச்சமூகத்தின் எதிர்பார்ப்பையும் மீறி தன் வகுப்பு மாணவர்கள் மீது அதிக அன்பும், அக்கறையும் கொண்டு அவர்கள் மேம்பட போராடும் ஒவ்வொரு ஆசிரியரும் போர்வீரனே.

சுதந்திர இந்தியாவின் முதல் குடியரசுத் துணைத்தலைவரும், இரண்டாவது குடியரசுத் தலைவரும், சிறந்த தத்துவஞானியும் ஆன டாக்டர். இராதாகிருஷ்ணன் அவர்கள் ஒரு சிறந்த கல்வியாளரும் ஆவார்.

கல்வியாளர் என்ற வார்த்தைக்கு உரித்தானவர் டாக்டர். இராதாகிருஷ்ணன் அவர்கள். இந்திய சுதந்திரம் மற்றும் இந்தியக் கல்வி இரண்டிலும் தீவிர அக்கறை கொண்டவராக இருந்தார்.

கல்வியின் நோக்கம் இயற்கையோடு இயைந்த முறையிலானதாகவும், மனித மனத்தில் ஒளி பாய்ச்சி அவனுக்குள் இருக்கும் குரங்கின் குணங்களை நீக்கி, இதயத்தில் அன்பை வளர்த்து அனைத்திற்கும் மேலாக உயிரோட்டமுள்ள கற்பனைத் திறனை உருவாக்குவதாகும்.

எண்ணென்ப ஏனைஎழுத்தென்ப – இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு

என்று கல்வி கற்பதின் அவசியம் குறித்து கற்றுதருபவர் ஆசிரியர். வாழ்க்கை என்றும் பெரும் கடலில் இருந்து கரை சேர்த்திடும் கலங்கரை விளக்காவார் ஆசிரியர்.

கல்வி எனும் திரிபோட்டு, அறிவு எனும் விளக்கேற்றிவாழ்வினை ஒளிரசெய்து, ஒளிந்திருக்கும் திறமைகளை வெளிக்கொணர்பவர்கள் ஆசிரியர்கள். மாணவ சமுதாயத்திற்கு ஏணியாக, திசைமாறியவனுக்கு திசைக்காட்டும் கருவியாக, கரை சேர்க்கும் படகாக உழைப்பவர்கள்.

நம்மைவிட வளர்ந்து விட்டானே என்று பொறாமைப்படாத ஒரே ஜீவன் மாணாக்கரை உயர்நிலைக்கு கொண்டு சென்ற ஆசிரியர்கள் மட்டுமே என்பது நிதர்சனமான உண்மை. அறியாமை என்ற இருளை நீக்கி, கல்வி அறிவு என்னும் விளக்கேற்றி வழி காட்டுபவர். தன்னலம் இன்றி தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவர்களின் உயர்வுக்காக உழைக்கும் மகத்தான குணம் படைத்தவர்கள்.

ஆசிரிய பணியில் நான் : ஆசிரிய பணி நான் விரும்பிஏற்றுக்கொண்டது.சிறுவயதில்நீபடித்துஎன்ன வேலைக்கு போக போகிறாய்? என்று கேட்பார்கள். நான் டீச்சராகப் போகிறேன் என்று சொல்வேன். வேறு எந்த வேலையிலும் ஈடுபாடு இல்லை.

ஆசிரியர் பணியில் சேர்ந்த பின்பு திறம்பட செயலாற்றி பள்ளிக்கு பெருமை சேர்த்தேன் இடைநிலை ஆசிரியையாக பதவியில் அமர்ந்து, தலைமை ஆசிரியையாக பணி உயர்வு பெற்று ஓய்வு பெற்றேன். எம் பள்ளி மாணவர்கள் பக்கா கிராமத்து பிள்ளைகள். வெளி உலகமே தெரியாத குழந்தைகள். மாதம் ஒரு முறை இலக்கிய மன்ற விழா நடத்தி குழந்தைகளுக்கு பேச்சு போட்டி, பாட்டு போட்டி, நாடகம், நடனம் என அனைத்திலும் பயிற்சி அளித்து குழந்தைகளிடம் புதைந்திருந்த திறமைகளை வெளிக்கொணர்ந்து அவர்களின் பெற்றோருக்கும், ஊர் மக்களுக்கும் தெரியப்படுத்தினேன், வருடம் ஒரு முறை கல்விச் சுற்றுலா சென்றதன் வாயிலாக வெளி உலகத்தை அறிவதற்கான வாய்ப்பினை பெற்றனர். நேரு அவர்கள் “இன்றைய குழந்தைகள் நம் நாட்டின் வருங்கால தூண்கள் என்றார்”. அந்த தூண்களை செதுக்குபவர் ஆசிரியர். டாக்டர். இராதாகிருஷ்ணன் பிறந்த தினமான செப்டம்பர்–5 ஆசிரியர் தினமாக (கூநயஉாநச'ள னுயல) கொண்டாடப்படுகிறது.

“உழைப்போம், உயர்வோம், மாணவச் சமுதாயத்தை உயர்த்துவோம்!”

என்பது மட்டுமே ஆசிரிய சமுதாயத்தின் தாரக மந்திரமாக ஒலிக்க வேண்டும்!

– இரா. திலகம்,
வையூர்.
9789412635



Kalyan Grand is a 3 Star Business Class Hotel, well equipped with modern amenities that blend comfort with functionally to provide comfortable, restful stays.

KALYAN GRAND
a business hotel

**108 Rooms & Suites | 03 Banquet Halls**

**[For Weddings & Receptions, Birthday Parties and Corporate Events]**

Ph: 044 66289999 | Mob: 7812009999
reservations@kalyangrand.com | www.kalyangrand.com




**Thiruvasantham**
**PURE VEG**

**A Traditional South Indian Pure Vegetarian Restaurant**

**Authentic Indian Sweets, Savouries and Outdoor Catering**

Ph: 044 22752999 | Mob: 9884092244
hotelthiruvasantham@gmail.com | www.thiruvasantham.com

No. 247, GST Road, Vandalur, Chennai, Tamil Nadu - 600048
(Adjacent to Kilambakkam New Mofussil Bus Terminus)


BRAHMA ENTERPRISES
Elevating Construction Standards
Supplier of quality construction materials
TMT Rebar | Cement | Structural Steel | Paint | RMC | Construction Chemicals
Tile Adhesive | Cool Roof Tiles | MS Pipes and Colour Coated Sheets
BRAHMA ENTERPRISES
DISTRIBUTOR • WHOLESALER • DEALER
SHYAM STEEL TMT REBAR flexi STRONG
UltraTech CEMENT The Engineer's Choice
MRF Vapocure Paints
TATA TISCON SD
Dalmia Bharat Cement
JK WHITE CEMENT
RINL VIZAG STEEL Pride of Steel
Chettinad cement
FOSROC
PULKIT TMT BARS Everlasting Relationship
RAMCO SUPERGRADE As strong as family bonds.
LUNE TILES COOL ROOF TILES
KAAVERI TMT BARS & STRUCTURAL
SANKAR SUPER POWER Unshakeable Trust
CCP CERA-CHEM
SUMANGALA we understand steel
ACC Ambuja Cement
ascolite Biflex TC
WE'RE JUST A CALL AWAY!
S. Arul Vignesh, Director
Grandson of Melakadai Ramasamy, Pennadam &
Sundaresan Pillai, Tirupanandal
Available at +91 9600 533 563
BRAHMA ENTERPRISES PVT. LTD.
#4/299, Sikkandar Chavadi
Alanganallur Main Road, Madurai-625 018
SHYAM STEEL
SHYAM TMT REBAR
70 Years of Experience
flexi STRONG
Perfect balance of Strength & Flexibility
PRIMARY STEEL PRODUCER
brahmaenterprisesmadurai@gmail.com | www.brahmaenterprises.co.in

NAPA VALLEY
BY DAC

DAC
DREAM ASCEND CONQUER

# LOCATED NEAR OMR AT HALF THE PRICE OF OMR

( 5 Kms from Sathyabama University | 4 Kms from Perumbakkam Metro )

**Near Sholinganallur — Bang On Main Road —**




Air Conditioned GYM


Kid's Play Area


Indoor Games


Rooftop Pergola Seating

OMR Market Price ~~₹1.10 Cr.~~

**2&3 BHK Apartments From ₹ 64L**

Scan for Location

## Location Advantages

**METRO STATIONS**
- Sathyabama University Metro - **5 Kms**
- Perumbakkam Metro - **4 Kms**

**IT PARKS**
- ELCOT SEZ - **7.4 Kms**
- SIPCOT IT Park - **9 Kms**

**HOSPITALS**
- H & M Hospital - **3.7 Kms**
- Gleneagles Global Health City - **6.9 Kms**

**SCHOOLS**
- BVM Global School - **2.1 Kms**
- Orchids The International School - **3 Kms**

**COLLEGES**
- Sathyabama University - **5 Kms**
- Prince Shri Venkateshwara Engineering College - **5.4 Kms**

**ENTERTAINMENT ZONE**
- Vivira Mall - **6.2 Kms**
- AGS Navalur - **6.2 Kms**

**TRANSPORTATION**
- Arasankazhani Bus Stop - **1.5 Kms**
- Perumbakkam Bus Depot - **4.1 Kms**

## Why Choose Napa Valley?

- Premium Gated Community
- Private Terrace Apartments
- 100% Vaastu Compliant Homes
- Total Privacy Ensured with Main Doors Not Facing Each Other
- Lifestyle Amenities Including Air Conditioned GYM, Indoor Games, Multipurpose Hall, Yoga/Meditation, Roof Top Amenities and More
- Power Backup Inside the Apartments
- Independent Lift Lobby for Each Block
- Ample Car Park Space at Stilt Level

110+ PROJECTS | 3.5M+ SQFT CONSTRUCTION | 3000+ HAPPY FAMILIES

TN/35/BUILDING/0166/2025
DATED 02.05.2025
www.rera.tn.gov.in

**93003 93003**
**www.dacdevelopers.com**

# CHIDAMBARAM SPIRITUAL STAY

**146/18A, KANAGASABAI NAGAR, CHIDAMBARAM**

சிதம்பரம் நடராஜர் திருவருளால் சிதம்பரம் கனகசபை நகரில் ஆன்மீக சுற்றுலா பயணியர் மற்றும் திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளுக்கு குழுவாக வருபவர்களுக்கும் மேலும் குடும்பத்துடன் வருகைபுரியும் அன்பர்களுக்கும் குளிர்சாதன வசதியுடன் (A/c) தங்குவதற்கு விடுதி அமைந்துள்ளது. திருமண விசேஷங்களுக்கு மணமகன், மணமகள், வீட்டார் உறவினர்கள் ஒரே இடத்தில் 50 நபர் வரை தங்குவதற்கு சிறந்த இடம் **"Chidambaram Spiritual Stay"**

குறிப்பு : இங்கு தங்குபவர்களுக்கு காலை & இரவு சிற்றுண்டி வழங்கப்படுகிறது.





**மேலும் விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய அலைபேசி எண்.**

**9790292444, 9790215833**

முன்பதிவிற்கான கட்டண விபரங்களுக்கு "Booking.com" மற்றும் Google இணைய தளத்தில் காணலாம்

**Free Driver Accommodation Available, SPL A/c. Cottages Available**

## ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் சேவை மையம்

சித்திரை மாதம் 2025 தொடங்கி உங்களின் ஆதரவுடன் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

**சிறப்பம்சங்கள் :**

- தனி நபர் கட்டணம் ரூ. 200/– மட்டும்
- Locker Facility உள்ளது.
- காலை வேளை மட்டும் சிற்றுண்டி வழங்கப்படும்.
- காது குத்துவது / குடும்ப சுப நிகழ்வு கொண்டாடுவோர் / குலதெய்வ வழிபாடு செய்வோர்
- தனி அறைகள் மற்றும் 20 நபர் தங்கும் வசதியுள்ள பொது இடம்.
- குறைந்த கட்டணம், நிறைவான சேவை
- 30 பேர் வரை தங்க சிறந்த இடம்

தொடர்பு 1 : **A. கோவிந்தராஜன்**
சாரதா உணவகம், அமைப்பாளர்
89731 63434

தொடர்பு 2 : **தில்லை ப. செல்வம்**
ஒருங்கிணைப்பாளர்
98403 17346

# மருத்துவ பட்டம் பெற்றதற்கு பாராட்டு




புத்தகரம் கிராமத்தைச் சேர்ந்த மறைந்த திரு. ஜெயராமன் பிள்ளை – திருமதி. சுகந்த மல்லிகா ஆகியோரின் மகன் வழி பேத்தியும், மறைந்த கடலூர் திரு. மாணிக்கம் பிள்ளை – நலமுடன் திருமதி. செந்தமிழ் செல்வி ஆகியோரின் மகள் வழி பேத்தியும், திரு. **சுதாகர்** – திருமதி. **கலைவாணி** ஆகியோரின் மூத்த மகளுமான **Dr. எஸ். கே. நிவேதா,** இங்கிலாந்தின் பிரபலமான **கீல் பல்கலைக்கழகத்தில்** மருத்துவப் பட்டம் பெற்றுள்ளார்.

இந்த சாதனை அவரது கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் நிறைந்த கல்விப் பயணத்தின் பலனாகும். குடும்பத்தின் பெருமையை உயர்த்திய செல்வி. நிவேதாவுக்கு இதயம் கனிந்த பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறோம். செல்வி. நிவேதாவின் எதிர்காலம், மேலும் வெற்றிகளால் நிரம்பியிருக்க உங்களனைவரின் ஆசீர்வாதங்களை அளிக்குமாறு நன்றியுடன் கேட்டுக் கொள்கிறோம்.

**அன்பு பாட்டி மற்றும் பெற்றோர்,**

தங்கை : **S.K. ஸ்வேதா**, (M.B.B.S.) U.K.

மாமா : **M. செந்தில், M. கார்த்திகேயன்**

# வாழ்க மணமக்கள்



கடலூர் மாவட்டம் சிதம்பரம் வட்டம், கண்ணங்குடி கிராமம், தெய்வத்திருவாளர்கள் முனதரிய ராமானுஜம் பிள்ளை – மதுரம் இவர்கள் மகன் வழி பெயரனும், மேற்படி வட்டம் K. ஆடூர் கிராமம் தெய்வத்திருவாளர்கள் பிராங்குட A.P. சண்முகசுந்தரம் பிள்ளை – கோமளவள்ளி இவர்கள் மகள்வழி பெயரனும், கண்ணங்குடி கிராமம் முனதரிய திரு. R. கோவிந்தராஜம் பிள்ளை – அன்புக்கரசி இவர்களின் மகனுமான சிரஞ்சீவி. **G. மதுசூதனன்,** M.C.A., என்பவருக்கும் கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், வையூர் கிராமம், தெய்வத்திருவாளர்கள் குணாலுட வடிவேல் பிள்ளை – சாரதாம்பாள் இவர்கள் மகன் வழி பெயர்த்தியும், கள்ளக்குறிச்சி மாவட்டம் வானாபுரம் வட்டம் மேலப்பழங்கூர் கிராமம் தெய்வத்திருவாளர்கள் கார்குட M.P. சதாசிவம் பிள்ளை – மரகதம் அம்மாள் இவர்கள் மகள்வழி பெயர்த்தியும், வையூர் கிராமம் குணாலுட திரு. V. சரவணன் பிள்ளை – ராஜலெட்சுமி இவர்கள் மகளுமான திருவளர்ச்செல்வி **S. சங்கவி,** B.Sc., என்பவருக்கும் சிதம்பரம் கண்ணங்குடி ரோடு "ஆருத்ரா மஹாலில்" **28.08.2025** வியாழக்கிழமை அன்று திருமணம் நடைபெற்றது. இத்திருமணத்திற்கு வந்திருந்து ஆசீர்வதித்து வாழ்த்திய அனைத்து நல் உள்ளங்களுக்கும் நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**மணமகள் பெற்றோர்** **மணமகன் பெற்றோர்**

# சதாபிஷேக சாந்தி விழா

சிதம்பரம் கீழ வீதி மெ.செ. திருமண மண்டபத்தில் **(M.S. Hall) 10–09–2025** புதன்கிழமை ரேவதி நட்சத்திரத்தில் காலை **9.00** மணியிலிருந்து **11.00** மணிக்குள் எங்களது பெற்றோர்

திரு. **சண்முகநாதன்** – திருமதி. **தேன்மொழி**

அவர்களின் 80–ஆவது வயதை முன்னிட்டு சதாபிஷேக சாந்தி விழா சிறப்பாக நடைபெற்றது.



உறவினர்களும், நண்பர்களும் குடும்ப சகிதமாக வந்து இருந்து வாழ்த்தியும் தம்பதிகளின் ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டு, எங்களை கௌரவித்தமைக்கு எங்களின் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.



இங்ஙனம்

திரு. & திருமதி. **S. செந்தில்நாதன் – S. லதா**

திரு. & திருமதி. **S. கார்த்திகேயன் – K. பத்மினி**

திரு. & திருமதி. **K. சிவராமசேது – S. மீனாட்சி**

தங்கள் ஆசீர்வாதம் வேண்டி

**S. சந்தோஷ்**

**S. ஹரிணி**

**S. ஹரிஷ் ராகவ்**

**K. ஸ்ருதி**

# டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது பெற்றதுக்கு பாராட்டு விழா





05.09.2025 அன்று சென்னை, அறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலக வளாகத்தில் நடைபெற்ற **டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது** வழங்கும் விழாவில் துணை முதலமைச்சர் திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்களிடம் விருது பெற்ற தருணம். அன்று மாலை 8.00 மணிக்கு ஜெயங்கொண்டம் நகர கார்காத்தார் சங்க கூட்டத்தில் கலந்து கொண்டு சங்க நிர்வாகிகளிடம் வாழ்த்து பெற்ற தருணம். என்னை டாக்டர் இராதாகிருஷ்ணன் விருதுக்கு தேர்வு செய்து கௌரவித்த தமிழக அரசுக்கும், பாராட்டுதெரிவித்த நமது கார்குலத்திற்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**T.S. ஆறுமுகம் பிள்ளை,** ஆசிரியர்

வேலாயுத நகர், ஜெயங்கொண்டம்

80126 68786

# நங்கநல்லூர் வட்டார கார்காத்தார் சமூக நலச்சங்கம்
# சிறப்பு சுற்றுலா 28.08.2025 - 31.08.2025












# மணமகன் / மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | **செல்வி G. காவ்யா** |
| படிப்பு | B.Tech. (ECE) |
| பிறந்த தேதி | 11.06.2002 |
| உயரம் | 158 cm |
| நட்சத்திரம் | மிருகசீரிஷம் 3 பாதம் |
| கோத்திரம் | நெப்புக்குட |
| பூர்வீகம் | கண்ணாங்குடி (சிதம்பரம்) |
| தகப்பனார் | **S. கணேசன்,** ஆசிரியர் (ஓய்வு) |
| தாயார் | **V.T. சுமதி,** பட்டதாரி ஆசிரியை<br>பாய்லர் பிளாண்ட் ஆண்கள்<br>மேல்நிலைப் பள்ளி |
| முகவரி | B2/394F, BHEL Township.<br>Kailsapuram, Trichy - 620 014.<br>Cell : 94438 19110, 94438 60656 |



| | |
|---|---|
| பெயர் | **செல்வி ஹரிபிரியதர்ஷினி** |
| படிப்பு | M.Tech. in Robotics & Automation, MBA., |
| வேலை | Sr. Validation Engineer, TATA Elxsi, Bangalore<br>Rs. 6.5 Lakhs / PA |
| பிறந்த தேதி | 18.09.1999 |
| உயரம் | 152 cm |
| நட்சத்திரம் | மூலம் |
| கோத்திரம் | பல்லவராய |
| பூர்வீகம் | காட்டுமன்னார்கோவில் |
| தகப்பனார் | **அறிவழகன்** |
| தாயார் | **கற்பகம்** (திருச்சி) |
| முகவரி | C1 D, TAQA Neyveli<br>Residential Housing Colony,<br>ஊமங்களம், நெய்வேலி<br>கடலூர் மாவட்டம் - 607 804.<br>Cell : 94871 52757, 79040 63993 |



| | |
|---|---|
| பெயர் | **செல்வன் இளஞ்செழியன் .E** |
| படிப்பு | B.Tech (IT), MBA |
| வேலை | Veranda Race (Associate Partner & Branch Manager)<br>Rs. 7,60,000 / PA |
| பிறந்த தேதி | 07.12.1996 |
| உயரம் | 186 cm |
| நட்சத்திரம் | சுவாதி |
| கோத்திரம் | பேரூட |
| பூர்வீகம் | மேல ஐயனார்குடி (மாந்தை) |
| தகப்பனார் | **இளங்கோவன் V.,** விவசாயம் |
| தாயார் | **சுமதி .E** (மண்ணிப்பள்ளம்) |
| முகவரி | செட்டி தெரு, மேல ஐயனார்குடி,<br>மாந்தை & PO, குத்தாலம் (Tk.),<br>மயிலாடுதுறை (Dt.)- 612 203.<br>Cell : 94426 55690, 73387 57690 |



# மணமகன் தேவை

| | | |
|---|---|---|
| பெயர் | : | செல்வி . M. அபிநயா |
| படிப்பு | : | B.E., (Bio Medical Engineering) |
| வேலை | : | Medical Coder |
| ஊதியம் | : | 3L /- P/A |
| பிறந்த தேதி | : | 19.03.1998 |
| உயரம் | : | 5"6' |
| நட்சத்திரம் | : | பூசம் |
| கோத்திரம் | : | வேளாண் |
| தகப்பனார் | : | இரா. மருதநாயகம் Retd HOD in Tamil Dept. DAAC. |
| பூர்வீகம் | : | மயிலாடுதுறை |
| முகவரி | : | 108, அப்துல் கலாம் சாலை, மதுராநகர், சேந்தங்குடி, மயிலாடுதுறை-609 001. |
| செல் | : | 9443853754. 8825813522. |



| | | |
|---|---|---|
| பெயர் | : | செல்வி . R. சௌந்தர்யா |
| படிப்பு | : | B.Tech., (IT) |
| வேலை | : | Infosys Technology Analyst |
| ஊதியம் | : | 8L /- P/A |
| பிறந்த தேதி | : | 19.11.1999 |
| உயரம் | : | 155 Cm |
| நட்சத்திரம் | : | உத்திரட்டாதி |
| கோத்திரம் | : | காளிங்கராய |
| தகப்பனார் | : | மு. ராஜன் |
| பூர்வீகம் | : | இராதாநல்லூர் |
| தாய் | : | ரா.நளினி |
| பூர்வீகம் | : | ஹரிஹரன்கூடல் |
| முகவரி | : | 3/65, உடையார் தெரு, மேலப்பெரம்பூர், பெரம்பூர். தரங்கம்பாடி தாலுக்கா, மயிலாடுதுறை-609402. |
| செல் | : | (W) 8807503760 / (W) 9486200776 |
| விருப்பம் | : | (ITவேலை மட்டும்) வயது (1995 க்கு பின் உள்ள வரன்) |



# மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | செல்வன் K.V. அரவிந்த் |
| படிப்பு | M.S.(Ortho) IIIrd Year, Madurai Medical College |
| வேலை | Rs. 60,000/- (Stipend) |
| பிறந்த தேதி | 31.08.1996 |
| உயரம் | 171 cm |
| நட்சத்திரம் | ரேவதி |
| கோத்திரம் | காரலுட |
| பூர்வீகம் | ஓமாம்புலியூர் |
| தகப்பனார் | ந. குமார், வட்டார கல்வி அலுவலர்,<br>குத்தாலம், மயிலாடுதுறை மாவட்டம் |
| தாயார் | விஜயலெட்சுமி (தஞ்சாவூர்) |
| முகவரி | 15, முத்தமிழ் வீதி, பெரியார் நகர் வடக்கு,<br>காட்டுமன்னார்கோவில் - 608 301.<br>கடலூர் மாவட்டம்.<br>Cell : 97876 47217 |
| விருப்பம் | M.B.B.S. படித்து, MS / MD படிக்கும் வரன். |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் ARUN KUMAR M |
| படிப்பு | M.Sc Cyber Forensic and Information Security |
| வேலை | Assistant Manager, Gupshup Technologies, Chennai<br>Rs. 15 Lakhs / PA |
| பிறந்த தேதி | 29.01.1996 |
| உயரம் | 165 cm |
| நட்சத்திரம் | Karthigai 3rd Patham |
| கோத்திரம் | Thenavaraya |
| தகப்பனார் | Mathiyalagan S, Gramodyog Stores, Chennai |
| தாயார் | Sivakama Sundari M, Home Maker |
| முகவரி | 3/731, Theruveedhi Amman Kovil Street,<br>Gerugambakkam,<br>Kovur,<br>Chennai – 600 128.<br>Cell : 94446 31446, 85310 76122<br>90872 95484 |
| விருப்பம் | நன்கு படித்து சென்னையில் பணிபுரியும் வரன். |



# மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | செல்வன் சு. சிவராம் |
| படிப்பு | B.E., |
| வேலை | Software Engineer - Blue Optima, Software Development Metrics, Vakil Square, Bangalore Rs. 32 Lakhs / PA |
| பிறந்த தேதி | 04.01.1999 |
| உயரம் | 170 cm |
| நட்சத்திரம் | ஆயில்யம் |
| கோத்திரம் | பெரும்பட்டரையர் |
| பூர்வீகம் | கண்ணாரக்குடி (திருப்பனந்தாள் அருகில்) |
| தகப்பனார் | இரா. சுவாமிநாதன், ஆசிரியர், நகர மேல்நிலைப் பள்ளி, கும்பகோணம். |
| தாயார் | சு. சண்முகவள்ளி (விக்கிரமங்கலம்) |
| முகவரி | 1/28, முராரி காலனி, சர்வமானியத் தெரு, சுவாமிமலை, கும்பகோணம், தஞ்சாவூர் - 612 302. Cell : 94424 21933, 93613 59150, 83001 82875 |
| விருப்பம் | பெங்களூரில் கணினி துறையில் பணியாற்றும் வரன். |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் மனோஜ்குமார் .R |
| படிப்பு | B.E. (Mechanical) |
| வேலை | Saudi Arabian Oil Company (Saudi Aramco) Rs. 8,40,000 / PA |
| பிறந்த தேதி | 20.09.1992 |
| உயரம் | 180 cm |
| நட்சத்திரம் | திருவாதிரை |
| கோத்திரம் | மணக்குட |
| பூர்வீகம் | தலக்குளம் |
| தகப்பனார் | ரவீந்திரன் R. (Late), NLC (Rtd.) |
| தாயார் | மலர்விழி .R |
| முகவரி | Y1 Block - 6, Akash Ganga Apartment, Sai Baba Nagar, Thangam Avenue, Pallikaranai, Chennai - 600 100. Cell : 94860 84847, 8220 377100 |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் B. Amuthan |
| படிப்பு | B.E. (EEE) |
| வேலை | Senior Software Developer at Workday Inc (MNC) - Chennai Rs. 50 Lakhs / PA |
| பிறந்த தேதி | 15-11-1996 |
| நட்சத்திரம் | பூராடம் |
| கோத்திரம் | காருட |
| பூர்வீகம் | மணக்குடி, மயிலாடுதுறை |
| தகப்பனார் | A. Balasubramanian |
| தாயார் | B. Alamelu |
| முகவரி | Plot No. 26, Ground Floor, Sairam Nagar, 1st Main Road, Medavakkam, Chennai - 600 100. Cell : 81484 55898, 81243 94390 |
| விருப்பம் | சமபடிப்பு & பணியில் உள்ள வரன் |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் I. நடராஜன் |
| படிப்பு | B.E, MBA |
| வேலை | HR. Playroll Admin. Work, Private Company Rs. 30,000 / PM |
| பிறந்த தேதி | 23.03.2000 |
| உயரம் | 5' - 6" |
| நட்சத்திரம் | விசாகம் |
| கோத்திரம் | கலிங்கராய |
| பூர்வீகம் | கால்நாட்டாம் புலியூர் (சிதம்பரம்) |
| தகப்பனார் | C.N. ஐய்யப்பன் |
| தாயார் | I. நளினி |
| முகவரி | T-76, Kambar Street, Thiru Nagar, Jafferkhanpet, Ashok Nagar, Chennai - 600 083. Cell : 98652 18696, 97909 04055 98402 71938 |



# KBF Biz-Connect KARKATHAR BUSINESS FORUM

(கார்காத்தார் தொழில் முனைவோர் பேரவை)

CHIEF GUEST - MR. VENKATRAJ

VP & HEAD - SALES & MARKETING - RANE MADRAS ( ENGINE COMPONENT DIVISION )

TOPIC : INNOVATE TO ELEVATE

MONTHLY MEETING - 'HAPPY TOWERS' MARUTHI POWER CONTROL SYSTEMS, CHENNAI ON SATURDAY 20/09/25



MR. BALAMURUGAN
ADYA INTERIORS



MR. SURESH
UNICORE CONSTRUCTIONS



MR. SARAVANAN
UNICORE CONSTRUCTION



MR. MUTHUKUMAR



MR. GOPI
MARLEY HYLS FANS



MR. SUDHAKAR
EXULTANT INTERIORS & FABRICATORS



| President | Secretary | Treasurer |
| --- | --- | --- |
| M.Balamurugan | N.Ponnambalam | V.Kannan |
| 98404 08549 | 98409 97878 | 98413 01835 |



MR. SUNDAR
SPARKLE MAINTANANCE SOLUTIONS
MECHINE MAINTAINENCE



MR. KARTHIKEYAN
NAMRATHAA CONSTRUCTIONS



MR. GOVIND
HCL TECHNOLOGIES



MR. VENKATRAJ
CHIF GUEST



MR. MANIKANDAN
AMMAN EXPORTS
TILE/MARBLE/GRANITE



MR. PANNERSELVAM
PENTA POWER SOLUTIONS
SOLOR/UPS/INVERTORS



MR. RAJASHEKAR
SIVA FORGINGS



MR. BALAMURUGAN
ANANDHAM FOODS
SWEETS & SAVORIES



MR. RAJA SEKARAN
PASIKKU RUSIKKU
CATERING



MRS. JAYANTHI
TEJOMAYA SOLUTIONS
GENERATOR SALES & SERVICE UPTO 200KVA
CAN CONNECT TO ROYAL ENFIELD & TVS COMPANIES



MRS. KALAIYARASI
SIVA FORGINGS



MRS. GEETHA
SUNSHINE ENTERPRISES
TUPPERWARE PRODUCTS



DR. ASOKAN
ROHINI HERBALS - HERBAL PRODUCTS
SIDDHA,HEALTH SUPPLIMENTS & PRODUCTS



MRS. REVATHY
BALAJI FOUNDATIONS
BUILDING CONSTRUCTION & CIVIL WORKS



MR. PONNAMBALAM
FOTO SPACE - PHOTO & VIDEOGRAPHY
INDUTRY PRODUCT PHOTOGRAPHY,
WEDDING & ALL FUCTION COVERAGE



MR. ARUNACHALAM
MAGNUM CNC



MR. ANAND



MR. MURUGESH
SRI KANDAN TRADARS - CEMENT WHOLESALE &
RETAIL/REAL ESTATE CONSULTATION



MR. VAIRAMUTHU
DEZIRE NATURAL, SUGAR FREE SWEETS



MR. KANNAN
BALAJI FOUNDATIONS
BUILDING CONSTRUCTION & CIVIL WORKS

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் :
20.03.1945

மறைவு :
02.09.2025

திரு. **ந. சௌந்தரராஜன்** அவர்கள்

ATO/TNEB/Retd.

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி, சன்னதி தெருவில் வசித்து வந்த தெய்வத்திருவாளர்கள் **நடேசன் பிள்ளை – மதுரத்தம்மாள்** அவர்களின் மூத்தமகன் திரு. **ந. சௌந்தரராஜன்** அவர்கள் 02.09.2025 அன்று சிவலோக பதவி அடைந்தார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

வள்ளலாய் வாழ்ந்து
தூக்கத்தில் உயிர் நீத்தாய்
எங்களை மீளா
துக்கத்தில் ஆழ்த்திவிட்டு சென்றுவிட்டாய்.

என்றும் தங்கள் நினைவில் வாழும் :

மனைவி. **S. இந்திராணி**
சகோதரர். **N. சுப்ரமணியன்**
(ஆசிரியர் ஓய்வு)
**N. பானுமதி சுப்ரமணியன்**
(ஆசிரியை ஓய்வு)

மகன். **S. ராம்மோகன்,** B.E., NLC. Neyveli
மருமகள். **R. ஞானம்,** D.E.C.E.,
பேத்திகள் :
**R. நந்தினி,** B.E., - **N. அகில் ஆனந்த்,** M.Sc., Ph.D.,
**R. அக்ஷயா,** B.Tech.,
கொள்ளுபேத்தி. **A. அனன்யா**

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் :
**20–10–1931**

மறைவு :
**18–09–2025**

## திரு. G. கார்த்திகேயன் பிள்ளை

குத்தாலம் தாலுக்கா திருவாலங்காடு கிராமம் அமரர்

திரு. **G. கார்த்திகேயன் பிள்ளை** SQUADRON LEADER (Retd), INDIAN AIR FORCE அவர்கள் **18–9–2025** வியாழக்கிழமை அன்று மதியம் **12** மணி அளவில் சிவலோக பதவி அடைந்தார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

எங்கள் துயரத்தில் பங்கேற்று ஆறுதல் கூறிய அனைவருக்கும் நன்றி.

மனைவி : **காந்திமதி.**

மகன் – மருமகள் : **K. சுரேஷ் – லதா நடேசன்**

மகள்கள் : **சசிகலா, நிம்மிகலா**

மருமகன்கள் : **S. செல்லப்பா, Lt. Col. N. கண்ணன்,** Indian Army (Retd.)

பேரன்கள் : **ராகுல் சுந்தர் - துர்கா லட்சுமி, அருண் கண்ணன் – ஆனந்தி, விக்னேஷ் சுரேஷ்**

கொள்ளு பேரன்கள் : மாஸ்டர் **ரித்விக் ஸ்மரன்,** மாஸ்டர் **ஆரவ் அருண்.**

## இணையதள வங்கிச் சேவை
## ON LINE BANKING

இப்போது நடப்பது கலியுகம் என்றாலும் நம் மக்களைப் பொறுத்த வரை இது ஒரு அவசர யுகம் தான் எல்லோருமே சுறுசுறுப்பாக செயல்பட்டுக் கொண்டிருப் பதாகச் சொல்வார்கள். அன்றாடம் நாம் பேசும் பல நண்பர்களில் பாதி பேராவது" அதற்கெல்லாம் எனக்கு நேரம் எங்கே இருக்கிறது அதனால் தான் இப்படிச் செய்து விட்டேன் நாம் கைபேசியில் தொடர்பு கொள்ளும் நபர்களில் பாதி பேர் எண்கள் பிசியாக இருப்பதாக பதில் வரும் மென்று தின்ற காலம் போய் நின்று திங்கும் காலம் வந்து விட்டது ஆம் உணவகங்களுகுப் போய் ஆற அமர அமர்ந்து சாப்பிட்ட காலம் போய் ஃபாஸ்ட்புட் எனப்படும் அமர நாற்காலிகள் கூட இல்லாத உணவுக்கூடங்களில் ஒருகையில் அலைபேசியைக் காதில் வைத்துக் கொண்டு நின்று கொண்டே சாப்பிடும் அவசர காலம் இது. வெளியில் சென்றிருந்தால் வீட்டுக்குத் திரும்பி வந்து தொலைபேசியில் பேசத்தேவை இல்லாமல் இருக்கும் இடத்திலிருந்தே கைபேசியில் பேசும் அவசர யுகம். அதே போல் வீட்டிலிருந்து சற்று தொலைவில் உள்ள வங்கிக்கு அது திறந்திருக்கும் நேரத்தில் சென்று அங்கிருக்கும் மக்கள் கூட்டத்தில் காத்திருந்து செய்யும் பணப் பரிவர்த்தனைகளைத் தவிர்க்க வீட்டிலிருந்த படியே நினைத்த நேரத்தில் பணப்பரிவர்த்தனை செய்து கொள்ளும் வசதிதான் ஆன்லைன் பேங்கிங் எனப்படும் இணைய தள வங்கிச் சேவை. இன்றைய அவசர யுகத்தில் அதிலும் ரொக்கப் பரிவர்த்தனைகளைத் தவிர்த்து வங்கிக் கணக்கு மூலம் பரிவர்த்தனை செய்யுங்கள் என்று அரசு வற்புறுத்தும் இந்தக் காலத்துக்கு அவசிய தேவை தான் ஆன்லை பேங்கிங் எனப்படும் இணையதள வங்கிச் சேவை ஆகும். அந்த இணைய தள சேவை என்றால் என்ன ? அது எவ்வாறு செயல் படுகிறது? அதில் உள்ள நன்மை தீமைகள் என்ன? என்பதை எல்லாம் இக்கட்டுரையில் பார்ப்போம்.

**இணைய தள வங்கிச் சேவை என்றால் என்ன?**

ஆன்லைன் பேங்கிங் நெட் பேங்கிங் என்றும் சொல்லப்படும் இணைய தள வங்கிச் சேவை கடந்த 10 ஆண்டுகளில் மிகப் பிரபலமாகியுள்ளது. இணைய தள வங்கிச் சேவை என்பது நாம் வீட்டிலிருந்த படியே வீட்டில் உள்ள கம்ப்யூடர் என்னும் கணினி, அல்லது லேப்டாப் என்னும் மடிக் கணினி அல்லது டாப்லெட் என்னும் கைக்கணினி அல்லது மொபைல் என்னும் கைபேசி மூலம் நம்முடைய வங்கிக் கணக்கில் பணப்பரிவர்த்தனையோ அல்லது தகவல்கள் தெரிந்து கொள் வதுதான் இந்த சேவை பெரும்பாலும் இலவச சேவைதான் என்பதுடன் மிக விரைவாகவும் செய்து முடிக்க முடியும்

**எப்படி தொடங்க முடியும் ?**

பெரும்பாலான வங்கிகள் வாடிக்கையாளர்களுக்கு இணைய தள வங்கிச் செவையை அளிக்கின்றன வாடிக்கையாளர்கள் வங்கியின் வெப் சைட் என்னும் வலைதளத்தைப் பயன் படுத்தி இணைய தள தொடர்பு கொள்ள முடியும் அல்லது வணிக ரீதியில் செயல் படும் குயிக்கென் அல்லது மணி பணம் போன்ற அமைப்புக்கள் மூலம் இணைய தள சேவை பெற முடியும்.

இண்டர்னெட் என்னும் இணைய தள தொடர்பு உள்ள வாடிக்கையாளர்கள் முதலில் சம்பந்தப்பட்ட வங்கியில் தங்கள் பெயரைப் பதிவு செய்து கொண்டு தங்களுக்கு ஒரு பாஸ்வொர்டு என்னும் கடவுச் சொல்லைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும் பதிவு செய்து கொண்டவுடன் வங்கி அந்த வாடிக்கையாளருக்கு இணைய தள சேவைக்கு என ஒரு எண்ணைத் தரும். அந்த எண்ணும் வாடிக்கையாளரின் வங்கிக் கணக்கு எண்ணும் ஒன்றாக இருக்காது. இணைய தள சேவைக்குக் கொடுக்கப்படும் அடையாள எண்ணில் பல வாடிக்கையாளர்கள் இருக்கக்கூடும்.

**என்னென்ன சேவைகள் பெற முடியும் ?**

இணைய தள வங்கிச் சேவை மூலம் வாடிக்கையாளர்கள் தங்கள் வங்கிக் கணக்குகளை மேற்பார்வை இட முடியும். நடை பெற்றுள்ள நடவடிக்கைகளை பதிவிறக்கம் பண்ணி அதன் நகலை அச்சிட்டுக் கொள்ள முடியும். தங்கள் கணக்கிலிருந்து மற்றவர்களின் வங்கிக் கணக்கிற்கு பணம் மாற்ற முடியும். தொலை பேசி மின்சாரம் போன்றவைகளின் கட்டணங்களைச் செலுத்த முடியும். வைப்புத்தொகை போன்ற முதலீடுகளை நிர்வகிக்க முடியும்; காசோலை புத்தகம் தேவைப்பட்டால் வங்கிக்கு இதன் மூலம் கோர முடியும்.

**பாதுகாப்பு நடவடிக்கைகள்**

இணைய தள வங்கிக் கணக்குகளின் பாதுகாப்புக்கு வங்கிகள் பல நடவடிக்கைகள் எடுக்கின்றன.

" வங்கிக் கணக்குகள் அப்போதைக்கப்போது வங்கியால் சரி பார்க்கப்பட்டு புதிதா ஏதேனும் நடவடிக்கைகள் தென்பட்டால் உடனுக்குடன் தெரிவிக்கப்படும்.

" வங்கியிலிருந்து வந்ததாகக் கூறப்படும் கைபேசியில் வரும் செய்திகளுக்கு பதில் அளிக்க வேண்டாம் என்றும் உங்கள் கணக்கு எண் பற்றிய விபரம் மற்றும் பாஸ்வொர்டு எனப்படும் கடவுச் சொல்லை யாரிடமும் கூற வேண்டாம் என்றும் வாடிக்கையாளர்கள் அறிவிறுத்தப் படுகிறார்கள்'.

" ஒவ்வொரு முறையும் கணினியிலோ மடிக்கணி னியிலோ இணைய வங்கி நடவடிக்கை செய்து முடித்தவுடன் அதனை அப்படியே விடாமல் லாக் அவுட் என்னும் இணைய தளத்திலிருந்து வெளியேறு மாறு வாடிக்கையாளர்கள் அறிவுறுத்தப்ப்டுகிறார்கள்.

" கூடிய வரையில் பொது இடங்களைத் தவிர்த்து வீடு அலுவலகம் போன்ற தனியான பாதுகாப்பான இடங்களில் இருக்கும் போது மட்டுமே இந்த வகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

" கணினி வைரஸ் என்னும் நச்சு நிரலால் பாதிக்காமல் இருக்க நடவடிக்கை மேற் கொள்ளப்படவேண்டும்.

" கடவுச் சொல்லை பாஸ்வொர்டு தேர்ந்தெடுக்கும் போது கவனத்துடன் தேர்ந்தெடுக்க வேண்டும்.

" ஒருவேளை நீங்கள் இணையதளத்தில் தவறான தகவல்களை கடவு சொல் போன்றவற்றை பதிவு செய்தால் உங்களால் வங்கிக் கணக்கைத் தொடர்பு கொள்ள முடியாது அவ்வாறு 3 முறை தவறாக முயற்சித்தால் சில வங்கிகள் பாதுகாப்பு கருதி அவற்றை முடக்கி விடும். பிறகு நீங்கள் வங்கியைத் தொடர்பு கொண்டுதான் திரும்பவும் தொடர முடியும்.

**இணைய தள வங்கிக் கணக்கில் உள்ள சாதகங்கள்**

இணையதளவங்கிக்கணக்கில் பலநன்மைகள் உள்ளன. அவை என்ன வென்று பார்ப்போம்.

" முதல் மற்றும் முக்கியமான நன்மை வசதி தான். வங்கியின் அடிப்படை பணிகளாகிய மின்சாரம் மற்றும் தொலைபேசிக் கட்டணங்களைச் செலுத்துதல் மற்றும் நம்முடைய வங்கிக் கணக்கிலிருந்து மற்றவர்கள் கணக்கிற்கு பணத்தை மாற்றுவது போன்ற செயல்களை வங்கிக்குச் செல்லாமல் நாம் இருக்கும் அலுவலகம் அல்லது வீட்டிலிருந்த படியே நினைத்த போதே அதாவது வாரத்தின் 7 நாட்களிலும் ஒரு நாளின் 24 மணி நேரத்திலும் செய்து கொள்ளலாம்.

" நாம் செலுத்தும் கட்டணத்தொகையோ அல்லது மற்றவர்கள் கணக்கிற்கு மாற்றும் தொகையோ உடனடியாகவே அந்த நிமிடமே அவர்கள் கணக்கிற்கு சென்று விடும்.

" நிரந்த வைப்புக் கணக்குகளை இணைய தளம் மூலம் தொடங்கவும் முடிக்கவும் செய்யலாம்.

" புகை வண்டி பேருந்து விமான பயணத்துக்கான பயண டிக்கெட்டுகளை இணைய தளம் மூலம் பதிவு செய்யலாம்.

" வங்கியின் கடன் விண்ணப்ப மனுக்களையும் இதன் மூலம் உடனடியாக அனுப்பலாம்.

" வங்கிக் கணக்கில் உள்ள மிகுதித் தொகை எவ்வளவு என்பதை உடனுக்குடன் பார்த்து அறிந்து கொள்ளலாம்.

" எந்த ஊரில் இருந்தாலும் எந்த நேரத்திலும் உங்கள் வங்கி சேவையை பெற முடியும்.

" இணைய தள வங்கிச் சேவை பெறுவதால் வங்கிக்கு காகிதச் செலவு போன்றவை மிச்சமாகும் வங்கிப் பணியாளர்கள் நேரமும் மிச்ச மாவதால் அதனை அவர்கள் பயனுள்ள வேறு பணிகளில் கவனம் செலுத்தலாம்.

" ஷாப்பிங் எனப்படும் பொருட்கள் வாங்குவது அவற்றுக்கான விலையினைக் கொடுப்பது எல்லாமே வீட்டிலிருந்த படியே இணைய தள வங்கிச் சேவை மூலம் சாத்தியமாகிறது.

" இணைய தளத்தில் பெரும்பாலான தளங்கள் எளிதாகவே இருப்பதால் புதிதாக கணினி பயன் படுத்துபவர்கள் கூட எளிதில் கற்றுக் கொள்ளலாம் மேலும் வங்கி அலுவலர்களும் வழி காட்டுதலைச் செய்து உதவுவார்கள்.

**இணைய தள வங்கிச் சேவையில் உள்ள பாதகங்கள்**

எல்லா சேவைகளிலும் உள்ளது போல் இதிலும் நன்மைகள் போல் தீமைகளும் இருக்கத்தான் செய்கின்றன. அவை என்னவென்று பார்ப்போம்.

" கணினிபயன்பாட்டில் பழக்கமோ அனுபவமோ இல்லாத புதியவர்கள் இணைய தள வங்கிச் சேவை யின் துவக்கத்தில் சற்று சிரமப்படக்கூடும்.

" இணைய தள வங்கிச் சேவையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலவிதமாக முன்னேற்றம் அடைந்த

போதிலும் கணினியில் ஊடுருவி இடைஞ்சல் செய்யப்படக்கூடிய வாய்ப்பையும் மறுக்க இயலாது.

" அங்கீகாரம் இல்லாதவர்கள் உங்கள் கனக்கில் புகுவதைத் தடுக்க பொது இடங்களில் உள்ளா ஓய் ஃப யைப் பயன் படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

" மேலும் இணையதள வங்கிச் சேவை கணினியில் நமக்குக் கிடைக்கும் இணைய சேவையைச் சார்ந்துள்ளதால் பொறுப்புள்ள பாரம்பரியம் உள்ள நிறுவனங்களின் இணைய தொடர்பைப் பெற வேண்டும்.

" வாடிக்கையாளர் வங்கிக்கு நேரில் செல்லும் போது வாடிக்கையாள்ர் சேவை அதிகாரிகளின் அன்பான உதவியைப் பெற முடியும் இணையதள வங்கியில் அத்தகை அன்பான சேவையை நேரடியாக பெற முடியாது.

**மூன்றாவது பரிமாணம்**

கறுப்புப்பணத்தை மாற்றும் முயற்சியைத் தடுக்க அரசின் கொள்கையான கேஷ் லெஸ் ட்ரான்சாக்ஷன் என்னும் ரொக்கம் இல்லா நடவடிக்கையின் முதல் பரிமாணம் தான் க்ரெடிட் /டெபிட் கார்டுகள் எனப்படும் கடன் அட்டைகள். இரண்டாவது பரிமாணம் தான் இப்போது நாம் பார்த்த இணைய தள வங்கிச் சேவை அதன் மூன்றாவது பரிமாணம் மொபைல் பாங்கிங் என்னும் கைபேசி வங்கிச் சேவை. அந்த அலை பேசி / கைபேசி வங்கிச் செவை பற்றி பிரிதொரு சந்தர்ப்பத்தில் பாரப்போம்.

குறிப்பு வாடிக்கையாளர்களின் நேரத்தையும் சிரமத்தையும் பெருமளவு குறைக்கும் இணைய தள வங்கிச் சேவையைப் பற்றி அறியாதவர்கள் ஓரளவு தெரிந்து கொள்வதற்காக எழுதப்பட்ட கட்டுரை. மேற் கொண்டு விபரம் தேவைப்படுபவர்கள் தங்கள் வங்கியைத் தொடர்பு கொண்டு பெறுவது பயனுள்ளதாக இருக்கும்.

விக்கிபீடியா, இன்வெஸ்டோபீடியா.காம், இன்வெஸ்டிங் ஆன்ஸ்வர்ஸ்.காம் மணி அட்வைஸ் சர்வீஸ் .ஓ ஆர் ஜி ஃபைண்ட்ஸ்.காம் போன்ற இணைய தளங்களிலிருந்து தொகுத்து வழங்கியவர் மேலையூர் ச.அன்பழகன், துரைப்பாக்கம், சென்னை 97. போன் **98413 73184**

## கல்லணைக் கவியரங்கம்!

தலைப்பு : **“காணி நிலம்”**

மெய்யாத்தூர் சொ. வேல்முருகன்.

(MELODRAM – இசைநாடகம் என்று விமர்சிக்கப்பட்டு “கரிகால் சோழன் நினைவு – கவிமுரசு” என்று விருது வழங்கப்பட்டது)

அமைப்பு : தமிழ்த்தாய் அறக்கட்டளை , தஞ்சை.
இடம் : கரிகால் சோழன் மணிமண்டபம், கல்லணை.

நாள் : 02–08–2025

சிறப்பு விருந்தினர்கள்

**தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர்**
**மற்றும்**
**திருவையாறு சட்டமன்ற உறுப்பினர்**

**காணி நிலம் :**

‘கரிகாலன் இனத்தோரின்
கடலாட்சி முடிந்ததனால்
கண்ணீரே மீனவப் பெண்
கதையாகிப் போனதம்மா’

என்று “நெய்தல்” நிலத்தைப்
பாடிடவே ஏடெடுத்தேன் !

மனம் என்னவோ
இந்தக் கரிகாலன் அணையைக்
கண்டவுடன்

அது வளர்த்து ஆளாக்கிய
எனது “காணி நிலத்தையே”
சுற்றிச் சுற்றி வந்தது

என் வயலுக்குப் பாலூட்ட
தன் மார்பினில் நீர்தேக்கி நிற்கும்
இந்தக் “கல்லணை” வாசலில்

அது வளர்த்திட்ட
என் மருதநிலத்தினை
நன்றி உணர்வோடு
இங்கே நான் பாடாமல்
யார் பாடுவது
என்றே ‘மருதம்’ பாட
முனைகிறேன் !

என் இளைமக்கால
இருபது வயது வரை
நான் நீந்தி விளையாடிய
நதி நீர் இது !

‘வீராணம்’ ஏரி
வழிய வழிய
ஓடிவந்து

எங்களுக்கு
விளைச்சலை
அள்ளித் தந்துவிட்டு

அதை
வெள்ளத்தின்றும்
காப்பாற்றி நிற்கும்
அணை இது!

மாடு கட்டிப் போரடித்தால்
மாளாது செந்நெல் என்று
யானை கட்டிப் போரடித்த
களம் எங்கள் களம்!

அது ஒரு
வசந்த காலம்!
வாழ்வியல் கண்ட
வண்ணக் கோலம்!

என்னவோ பின்னர்
கடன் சுமையே
தொடர்ந்த நிலை
அந்த வயல் வாழ்வினைத்
துறந்து வயிற்றுப் பிழைப்பிற்காக
புலம் பெயரும் நிலை!

தாய் மடிபோல்
என் மண்ணைத்
தாங்கிப் பிடிக்கும்
இந்தத் தமிழ் நதிக்கரையினில்

நான் இத்தனை நாள்
தேக்கிவைத்திருந்த
எனது சோகம்
கரைக்க வந்துள்ள
என் கதை கேளுங்கள்!

நீரோடை நிலங்கிழிக்க
நெடுவயல்கள்
வளங்கொழிக்க
பாலைவனங்களைப்
பசுஞ்சோலையாக்கிய
மருத நிலக்காரன்தான் நான்!

கற்பிளந்து காடு திருத்தி
வலிமையோடு
கருவி பிடித்த கைகளே
எனது கைகள்!

வாய்க்கால்களை
வகைப்படுத்தி
நெற்சேர
உழுது உழுது
நிறை உழைப்பைத் தந்த
தோள்களே எனது தோள்கள்!

நீர் பாய்ச்சி
நாற்று நட்டு
நெல்மணிகளைக்
கண்மணிகளாய்
காத்து நின்ற
கண்களே எனது கண்கள்!

பிறருக்கு ஊதியம்
வழங்கிய
ராஜ வாழ்க்கையிலிருந்து
பிறரிடம் ஊதியம்
பெறுகின்ற நிலை!

பாரதமே!
என் அருமை பாரதமே!
உழுதுண்டு வாழ்வோர்க்கு
உலகு தரும் பரிசு இதுதானா!

குடும்பத்தின்
'முதல் பட்டதாரி' என்று
என்னதான் நான் இன்று
கொண்டாடப் பட்டாலும்

பாரம்பரியத்தின்
'கடைசி விவசாயியோ'
என்ற கவலையே
நெஞ்சில் கனக்கிறது!

இருந்தும்
காத்திருக்கிறேன்
அந்தக் கம்பீர வாழ்க்கையை
மீட்டெடுக்க!

முண்டாசுக் கவிஞன்
பாடிய அந்தக்
'காணி நிலமே'
எனது கனவு ராஜ்யமாக

வள்ளுவன் குறளுக்கு
வாகை சூடி
வாழும் மனிதர்க்கு
சோறு படைப்பேன்!
வளரும் பயிரோடு
உயிர் வளர்ப்பேன்!

இது சத்தியமாகட்டும்!
இனிமேலாவது
சாத்தியமாகட்டும்!
நன்றி! வணக்கம்!

மெய்யாத்தூர் சொ. வேல்முருகன்
9578286891

## மினிமலிசம் (Minimalism)

Dr. D. Kalyanakumar - Trichy-18.

நிறைவைத் தரும் நிஜ வாழ்க்கை! "எங்கப்பா என்னைவிட குறைவாகத்தான் சம்பாதிச்சார். வீட்ல நாங்க நாலு பிள்ளைங்க நாலு பேரையும் நல்லாப் படிக்க வச்சு, அவங்களுக்கு வேண்டியதை எல்லாம் பண்ணிட்டு, கொஞ்சம் பணமும் சேமிச்சு சொந்தமா ஒரு வீட்டையும் கட்டிட்டு கடன் இல்லாம நிம்மதியா வாழ்ந்தார். ஆனா, நான் அவரைவிட அதிகமா சம்பாதிக்கிறேன் ஹவுஸிங் லோன், கார் லோன், கிரெடிட் கார்ட்னு ஏகப்பட்ட கமிட்மென்ட்ஸ் வேலை டென்ஷன், ப்ரஷர்னு என்னால அவரைப்போல நிறைவா ஒரு வாழ்க்கையை வாழ முடியல.... "இப்படிப் புலம்புகிற இந்தத் தலைமுறை இளைஞர்களை இப்போதெல்லாம் அடிக்கடி சந்திக்க முடிகிறது.

இன்றைய தலைமுறைக்கு எவ்வளவு சம்பாதித்தாலும், ஐபோன், பி.எம். டபிள்யூ கார், லக்ஸரி அபார்ட்மென்ட் என எது இருந்தாலும் உண்மையான மகிழ்ச்சி இல்லை என்கிற குறை இருந்து கொண்டே இருக்கிறது. அதைப்போக்கிக்கொள்ள மாரத்தான் ஓடுகிறார்கள். பார்ட்டிகளில் ஆடுகிறார்கள். நிறைய செலவழித்து இன்டர்நேஷனல் டூர்கூட போகிறார்கள். மகிழ்ச்சி எங்கிருக்கிறது என்பது மட்டும் புரியவேயில்லை. இப்படிப்பட்ட இளைஞர்களில் இருவர்தான் ஜோஷுவா பீல்ட்ஸும், ரியான் நிகோடெமெஸும். அமெரிக்காவை சேர்ந்த ஜோஷுவா ஃபீல்ட்ஸும், ரியான் நிகோடெமஸும் நெருங்கிய நண்பர்கள். ஜோஷுவா, ரியான் இருவரும் இணைய பிரபலங்கள். இவர்கள் இருவரும் அதிக ஊதியம் தரும் பெருநிறுவனப் பணிகளை விட்டு விட்டு வேண்டுமென்றே நிறைவான வாழ்க்கையை வாழ்வதற்கான ஒரு வழியாக மினிமலிசத்தை ஏற்றுக்கொண்டனர். இவர்கள் பல நூல்களை எழுதியுள்ளனர். மினிமலிசத்துடன் தங்களின் அனுபவங்களைப் பற்றி உலகெங்கிலும் பல நிகழ்ச்சிகளில் பேசி வருகின்றனர். 2009–ல் இருவருமே நிறைய சம்பாதிக்கிற ஹைக்ளாஸ் ஐ.டி பசங்க! தங்களுடைய 30–வது வயதில் ஆறு இலக்க சம்பளம், காஸ்ட்லி கார்கள், சகலவசதி வீடுகள், பார்ட்டி கொண்டாட்டம் என வாழ்வில் எல்லாமே ஓகேதான் ஆனால், ஏதோ குறைவதை உணர்கிறார்கள். வெற்றிடம் இருந்துகொண்டே இருக்கிறது.

வாரத்தில் 80 மணி நேரம் உழைப்பதும், உழைத்த பணத்தில் எதை எதையோ வாங்கி வாங்கிக் குவிப்பதும்மகிழ்ச்சியில்லைஎன்பதைஉணர்கிறார்கள். மகிழ்ச்சி என்பது நுகர்வு கலாசாரத்தில் இல்லை என்பதை புரிந்து கொண்ட நொடியில் "மினிமலிசம்" என்கிற கான்செப்ட் பிறக்கிறது. இன்று நம்மைச் சுற்றி நுகர்வுக் கலாசாரம் பெருகிவிட்டது. பொருள்களை வாங்குவதுதான் மகிழ்ச்சி, அதுவே சாதனை என்கிற கருத்து பரவி வருகிறது உண்மையில், பொருள்களை வாங்குவதில் மகிழ்ச்சியில்லை. அதை எந்த அளவுக்குப் பயன்படுத்துகிறோம் என்பதில் தான் இருக்கிறது என்பதையே மறந்து கொண்டிருக்கிறோம். இந்த மனநிலைகளுக்கு எதிராகக் கிளம்பியவர்கள்தான் ஜோஷுவாவும், ரியானும் 2009 தொடங்கி மினிமலிச வாழ்வை வாழும் இவர்கள், இன்று உலகெங்கும் இருக்கிற பல்வேறு பல்கலைக் கழகங்களில் மினிமலிஸ வாழ்வுமுறை பற்றி பாடமெடுக்கிறார்கள். லட்சக் கணக்கானோர் இவர்களுடைய மினிமலிச வாழ்க்கை முறையை நோக்கி நகர ஆரம்பித்திருக்கிறார்கள். மினிமலிசம் என்பது அவசியமானவற்றுடன் அளவாக வாழ்வது உடலில் தேவையில்லாத கொழுப்பு சேர்ந்தால், நோய்கள் எப்படி வருமோ அதுபோலதான் வாழ்க்கையில் தேவையில்லாத பொருள்கள் சேர்வதும் இட நெருக்கடியில் தொடங்கி பணநெருக்கடி வரை அனைத்திற்கும் காரணமாக இருப்பது இந்த அவசியமில்லா நுகர்வுதான்.

நம்முடைய பெற்றோர்களும் முன்னோர்களும் அப்படித்தான் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். வீட்டில் தேவையில்லாமல் ஒரு பல்ப் எரிந்தால்கூட ஓடிச்சென்று அணைக்கிற பெரியவர்களை இப்போதும் நம் வீடுகளில் காண முடியும். அதுதான் நம்ம வீட்டு மினிமலிசம் இதுபோன்ற சின்னச் சின்ன சேமிப்புகளின் வழிதான் அவர்கள் தங்களுடைய நிம்மதியான வாழ்வைக் கட்டமைத்தார்கள். உலகின் மிகப்பெரிய கோடீஸ்வரர்கள் என அறியப்படுகிற பலரும்கூட மினிமலிஸ்டுகள்தான். வாரன் பஃபெட் நல்ல உதாரணம்.



# மணமகன் / மணமகள் தேவை

**முக்கிய குறிப்பு :** எங்களுக்கு வரும் விபரங்களின் அடிப்படையில் இப்பகுதியில் வரும் விளம்பரங்கள் தொகுக்கப்படுகின்றன, கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்களைச் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

| பெயர்<br>நட்சத்திரம் | பிறந்த தேதி<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **B 1/10** செல்வி **V. Saranya**<br>Sathayam<br>காலிங்கராய<br>பூர்வீகம் : அருகேரி<br>விருப்பம் : சமமான கல்வி, நல்ல பணியில் உள்ள வரன் | **10.08.98**<br>157 cm | M.Sc., Ph.D.,<br>(Physics) | | திரு. Venkatesan,<br>202/1, Main Road, Arugeri,<br>Kothattai Post, Thittagudi Taluk,<br>Cuddalore - 606 111.<br>Cell : **97860 56161** |
| **B 2/10** செல்வி **K. அகிலா**<br>திருவாதிரை பாகம் 3<br>விஸ்வராய<br>பூர்வீகம் : கார்மாங்குடி<br>விருப்பம் : படித்து வேலையில் உள்ள மணமகன் | **08.08.99**<br>160 cm | B.Sc. (Bio-Chemistry)<br>D.M.L.T., | Lab Technician<br>சீனிவாசன் மெடிக்கல் காலேஜ்,<br>சிறுவாச்சூர் | திரு. K. கதிர்வேல்,<br>1/264, ஆத்தூர் சாலை,<br>கார்மாங்குடி, ஸ்ரீமுஷ்ணம் Tk.,<br>கடலூர் Dt.,<br>Cell : **98436 83721, 98434 41834** |
| **B 3/10** செல்வி **G. மகாலட்சுமி**<br>மகம்<br>கனகராய<br>பூர்வீகம் : சிதம்பரம்<br>விருப்பம் : நல்ல பணியில் உள்ள வரன். | **15.11.95**<br>165 cm | B.E. (EEE) | Software Company | திரு. R. ஞானசம்மந்தம்,<br>No. 35, ஷர்மிளா அவென்யு,<br>விபிஷ்ணபுரம், அம்மாபேட்டை,<br>சிதம்பரம் – **608 401.**<br>Cell: **99769 97310,90954 68213** (W) |
| **B 4/10** செல்வி **U. ஜெகதீஸ்வரி**<br>திருவாதிரை<br>வில்வராய<br>பூர்வீகம் : திருவாரூர் | **27.1.2002** | B.Com.,<br>MBA., | HR CAD,<br>MACRO | திரு. K. உமாபதி,<br>**39/40**, மாறன் நகர்,<br>பள்ளிப்படை, வண்டிகேட்,<br>சிதம்பரம் – **608 001.**<br>Cell: **97913 47079** |
| **B 5/10** செல்வி **R. சுபஸ்ரீ**<br>அஸ்வினி<br>கொங்கராய<br>பூர்வீகம் : பெண்ணாடம்<br>விருப்பம் : அரசு / வங்கி / IT துறையில் பணிபுரியும் வரன் | **09.09.98**<br>160 cm | M.E.(Ph.d.) | Asst. Professor (IT)<br>Rajalakshmi Engg. College, Chennai | திரு. P.G. ராமமூர்த்தி,<br>ராணி மெடிக்கல்ஸ்,<br>**150**, மெயின் ரோடு,<br>பெண்ணாடம் – **606 105.**<br>கடலூர் மாவட்டம்<br>Cell : **99761 77910** |
| **B 6/10** செல்வி **S. பரிபூரணி**<br>பூராடம் 4ம் பாதம்<br>குருகுலராய<br>பூர்வீகம் : ஆத்தூர் – சேலம்<br>விருப்பம் : சமபடிப்பு, அரசு வேலை | **01.04.97**<br>165 cm | M.Sc.,<br>Ph.D.,<br>(Agriculture) | Asst. Professor<br>(Private Agri College) | திரு. K. செல்வம்,<br>**21/220**, காந்தி நகர்,<br>ஆத்தூர் – **636 102.**<br>சேலம் மாவட்டம்<br>Cell : **94421 62145** |
| **B 7/10** செல்வி **B. சுதாபிரியதர்ஷினி**<br>பூரட்டாதி<br>அங்கனுட<br>பூர்வீகம் : புதுத்துறை – சீர்காழி<br>விருப்பம் : பணியில் உள்ள நல்ல வரன் | **8.5.2002**<br>155 cm | B.E. (ECE) | மென் பொறியாளர்,<br>ரூ. 7லட்சம்/வருடம் | திரு. S. பரணிதரன்,<br>மனை எண். **24**, சுதா பவன்,<br>கற்பக விநாயகர் நகர்,<br>திட்டை ரோடு தென்பாதி,<br>சீர்காழி – **609 110.**<br>Cell : **94883 77678, 94427 41515** |

| பெயர் நட்சத்திரம் | வயது உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **B 8/10** செல்வி **ரெ. சங்கீதப்பிரியா**<br>மூலம் பாதம் **1**<br>தென்னவராய<br>பூர்வீகம் : காவாலகுடி<br>விருப்பம் : நல்ல குணம், நிரந்தர வேலை<br>குறிப்பு : ராகு, கேது நிவர்த்தி செய்யப்பட்டது. | 28.12.97<br>5' - 2" | B.E.(CSE) | QA Engineer<br>Rs. 7 Lakhs/PA | திரு. V. ரெங்கசாமி பிள்ளை,<br>**455** A, மெயின் ரோடு,<br>காவாலகுடி, ஸ்ரீமுஷ்ணம் Tk.,<br>கடலூர் Dt., **– 608 702**<br>Cell : **96263 03880** |
| **B 9/10** செல்வி **M. பிரவீணா**<br>உத்திரம்<br>காளிங்கராய<br>பூர்வீகம் : கீ.ஆடூர் சிதம்பரம்<br>விருப்பம் : Software Professional India/ Abroad | 1.12.99<br>175 cm | B.Tech(CSE) | Sr. Software<br>MNC<br>Rs. 10 Lakhs/PA | திரு. S. Muralinarayanan,<br>22, VKA Nagar,<br>Ammapet,<br>Chidambaram - 608 401.<br>Cell : **94868 39645, 94432 62945** |
| **B 10/10** செல்வி **ரா. ரூபினி**<br>கேட்டை<br>ஆலத்துக்குட<br>பூர்வீகம் : கருப்பேரி<br>விருப்பம் : அரசு வேலை / வங்கி வேலை / தனியார் IT | 20.03.98<br>168 cm | B.E.<br>Electronics<br>& Instrum-<br>entation | Sr. Revenue Inspector<br>வருவாய்<br>கோட்டாட்சியர்<br>அலுவலகம், சீர்காழி<br>மயிலாடுதுறை Dt.,<br>Rs. 3,60,000/PA | திரு. சோ. ராமு,<br>**23** C, தாடாளன் வடக்கு வீதி,<br>சீர்காழி<br>Cell : **94435 68848, 77080 40460,**<br>**72006 69739** |
| **B 11/10** செல்வி **C. ரம்யா**<br>விசாகம் 1ம் பாதம்<br>தென்னவராய<br>பூர்வீகம் : திட்டக்குடி<br>விருப்பம் : சமபடிப்பு, IT துறை, சென்னையில் உள்ள வரன் | 11.7.2000<br>5' - 2" | B.Tech. | HCL சென்னை | திரு. R. சொக்கலிங்கம் பிள்ளை,<br>**4/20,** கேசவன் காம்ப்ளக்ஸ்,<br>வண்டலூர் ZOO,<br>சென்னை **– 600 048.**<br>Cell : **97916 29435** |
| **B 12/10** செல்வி **C. அனுப்பிரியா**<br>அவிட்டம்<br>தீத்தரிய<br>பூர்வீகம் : கருவாழக்கரை, மயிலாடுதுறை | 13.7.98<br>163 cm | B.E (EEE) | Amshuhu Itech<br>Solutions Pvt. Ltd.,<br>Sholinganallur,<br>Chennai | திரு. R. சந்திரசேகரன்,<br>**12**A, சேந்தங்குடி அக்ரஹாரம்,<br>பெரிய தெரு,<br>மயிலாடுதுறை<br>Cell : **87782 48421, 94424 19822** |
| **B 13/10** செல்வி **ஜெ. சுபஸ்ரீ**<br>அஸ்தம்<br>மாலுட<br>பூர்வீகம் : முடிகண்டநல்லூர்<br>விருப்பம் : சமபடிப்பு IT | 15.11.98<br>152 cm | B.E (CS)<br>MBA | Zafin Software<br>Centre<br>Chennai,<br>Rs. 9 Lakhs/PA | திரு. S. ஜெயராமன்,<br>**10**G, ஞானப்பிரகாசம் கிழக்குத் தெரு,<br>சிதம்பரம்,<br>கடலூர் மாவட்டம் **– 608 001.**<br>Cell : **94860 79885, 94869 35107** |



| பெயர்<br>நட்சத்திரம் | வயது<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **G 1/10** செல்வன் **S. கண்ணன்**<br>புனர்பூசம்<br>காங்கேயம்<br>விருப்பம் : நல்ல படித்த குணமுள்ள வரன் | 08.04.95<br>180 cm | M.Tech.<br>(EEE) | State Bank of India<br>Associate<br>Near Chidambaram | திரு. R. சண்முகம்,<br>238, காவேரி நகர், 10வது தெரு,<br>புதுக்கோட்டை ரோடு,<br>தஞ்சாவூர் – 6130 005.<br>Cell : **94866 34464, 97913 55093** |
| **G 2/10** செல்வன் **K. அரவிந்த்**<br>திருவாதிரை<br>காளிங்கராய<br>பூர்வீகம் : கருவாழகரை | 31.08.94<br>171 cm | B.E.(EEE), | AGILE Robots<br>Design Engineer<br>Rs. 80,000/PM | திரு. K. குமார்,<br>மேலத் தெரு, நெய்தவாசல் & PO,<br>பூம்புகார், சீர்காழி Tk.,<br>மயிலாடுதுறை மாவட்டம்–609 105.<br>Cell : **95149 72767, 90039 26091** |
| **G 3/10** செல்வன் **D. கல்யாணசுந்தரம்**<br>உத்திராடம்<br>காளிங்கராயர்<br>பூர்வீகம் : அருகேரி – பெண்ணாடம் | 22.09.96 | B.E.(Civil), | Junior Drafting<br>Officer (JDO)<br>Government Staff<br>Near GH Trichy<br>Rs. 6,00,000/PA | திரு. G. துரைசாமி,<br>திருவள்ளுவர் தெரு,<br>பெண்ணாடம்<br>Cell : **97157 04601, 97157 04600** |
| **G 4/10** செல்வன் **S. நவீன்**<br>விசாகம் 4ம் பாதம்<br>குளத்துட<br>பூர்வீகம் : செம்மங்குடி<br>விருப்பம் : படித்த பணியில் வரன் | 25.07.96<br>179 cm | B.E.,<br>(Mechanical) | Production Manager<br>KR Systems<br>Rs. 3 Lakhs / PA | திரு. N. செந்தில்குமார்,<br>1/99–1, கீழத் தெரு,<br>செம்மங்குடி, சீர்காழி Tk.,,<br>மயிலாடுதுறை<br>Cell : **90257 75389, 63825 70502** |
| **G 5/10** செல்வன் **சி. சிவானந்தம்**<br>உத்திரம்<br>முள்ளுட<br>பூர்வீகம் : வரிச்சிக்குடி, காரைக்கால்<br>விருப்பம் : பணியில் உள்ள வரன் | 21.06.99<br>170 cm | B.Tech (ECE),<br>M.Tech (NIS) | Network Engineer<br>(RAN) LMJ<br>Innovations Amentum<br>Bengalure | திரு. குமார் (எ) சிவ. சிதம்பரம்,<br>1, பங்களா தெரு,<br>தேவானூர் சாலை,<br>விரிச்சிக்குடி,<br>காரைக்கால் மாவட்டம்<br>Cell : **97873 10010, 91509 16765** |
| **G 6/10** செல்வன் **K. மணிவேல்**<br>கேட்டை<br>முதனுட<br>பூர்வீகம் : மதுராந்தகநல்லூர் (சிதம்பரம்)<br>விருப்பம் : படித்த பணியில் உள்ள வரன்/<br>பணிக்கு செல்ல விருப்பமுள்ள வரன் | 15.02.93<br>6' - 0" | B.E.,<br>(EEE), | Asst.<br>Commercial Tax<br>Rs 50,000/PM | திரு. T. கேசவன்,<br>5/234-2, நியூ அம்பேத்கர் நகர்,<br>ஜாகீர்ரெட்டிப்பட்டி,<br>சேலம் – 636 302.<br>Cell : **94422 59692** |
| **G 7/10** செல்வன் **பாலாஜி S.R.**<br>ரோகிணி<br>முதனுட<br>பூர்வீகம் : கோட்டவம் – காட்டுமன்னார்குடி<br>விருப்பம் : சமபடிப்பு. | 30.01.96<br>180 cm | B.Tech<br>MBA | Accenture<br>Chennai<br>Analyst<br>Rs. 9 Lakhs.PA | திரு. S. ராம்தாஸ்,<br>17, காமராஜ் வீதி,<br>தாகூர் நகர், லாஸ்பேட்,<br>புதுச்சேரி – 605 008.<br>Cell : **94425 80571, 86108 73478** |
| **G 8/10** செல்வன் **ச. நட்ராஜ்**<br>அனுஷம் 2ம் பாதம்<br>குழுமுட<br>பூர்வீகம் : தண்டேஸ்வரநல்லூர் –<br>காட்டுமன்னார்கோவில் Tk. | 19.02.98<br>5' - 8" | B.E.<br>(Civil) | Business /<br>Lorry Transport<br>Rs. 50,000/PM | திரு. R. சந்திரகுமார்,<br>41/1, புதுத் தெரு, சேத்தியாத் தோப்பு,<br>காட்டுமன்னார்கோவில் Tk.,<br>கடலூர் Dt..<br>Cell : **98650 65892, 63811 71743** |

| பெயர் நட்சத்திரம் | வயது உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **B 9/10** செல்வன் **ச. ஆனந்தகுமார்**<br>உத்திரம்<br>ஆவுட<br>பூர்வீகம் : சிதம்பரம் | 23.03.97<br>6' - 1" | BCA | Deputy Manager - Sales<br>DAC Developers Pvt. Ltd.,<br>Rs. 10 Lakhs/PA | திரு. சந்தானம் பிள்ளை,<br>ஆனந்த பிரமிளம்,<br>4, காளிதாசர் தெரு,<br>கிழக்குத் தாம்பரம், சென்னை<br>Cell : **99408 61923, 95001 99331, 73582 23877, 89400 47753** |
| **B 10/10** செல்வன் **S. முத்துவேல்**<br>திருவோணம்<br>நெப்புகுட<br>பூர்வீகம் : கூடலூர் | 25.05.89<br>5' - 4" | | Design Engineer - GTS Inds.<br>Chennai<br>Rs. 30,000/PM | திரு. G. செல்வம் பிள்ளை,<br>**120/1,** பெருமாள் கோவில் தெரு,<br>கூடலூர் & PO, திட்டக்குடி Tk.<br>கூடலூர் Dt. **– 606 111.**<br>Cell : **95243 25807** |
| **B 11/10** செல்வன் **L. முத்துக்குமரன்**<br>திருவோணம்<br>வங்காரமுடையான்<br>பூர்வீகம் : கோடாலிகருப்பூர்<br>விருப்பம் : ஏற்ற வரன் | 17.10.91<br>5' - 6" | B.E. (ECE) | மேலாளர்<br>தனியார் நிறுவனம்<br>ஜெயங்கொண்டம்<br>Rs. 25,000/PM | திரு. J. கல்யாணசுந்தரம் **(லேட்),**<br>K.கல்யாணி<br>**28,** தெற்கு வெள்ளாழத் தெரு,<br>ஜெயங்கொண்டம், அரியலூர் Dt.<br>Cell : **99656 71981** |
| **G 12/10** செல்வ **S. ரவீன்குமார்**<br>சதயம் 1ம் பாதம்<br>கனகராய<br>பூர்வீகம் : திருநெல்வேலி<br>விருப்பம் : பணிபுரியும், பணிபுரிய விருப்பமுள்ள வரன். | 21.11.93<br>175 cm | M.Tech.. | Senior Engineer, VLSI<br>Multicoreware Inc.<br>Uhnder inc<br>Rs. 22 Lakhs/PA | திரு. A. சங்கர்<br>28 & 29, VGN Highness,<br>Vikramaditya Street,<br>Iyyappanthangal, Chennai - 600 056.<br>Cell : **78459 14635, 86670 33721, 94447 48490**<br>E-mail : spvrk1956@gmail.com |


## குரோம்பேட்டை கார்காத்தார் சங்கம்

### 18-வது ஆண்டு மங்கல சந்திப்பு

கார்குல சொந்தங்களே, வணக்கம்.

குரோம்பேட்டை சங்கம் இது வரை 17–மங்கல சந்திப்புகள் மூலம் சுமார் 500க்கும் மேற்பட்ட திருமணங்கள் நடைபெற உதவியுள்ளது. **18வது மங்கல சந்திப்பு வரும் 28–12–2025 அன்று குரோம்பேட்டையில் நடைபெற உள்ளது.** அதற்கான பதிவுகள் தீபாவளி தினத்தன்று (20.10.2025) முதல் வாட்சப் மூலம் பெறபட உள்ளது.

**மேலும் விவரங்களுக்கு 94888 18162**

**என்ற வாட்சப் எண்ணில் தொடர்பு கொள்ளவும்.**

இங்ஙனம்

**குரோம்பேட்டை கார்காத்தார் சங்கம்**



# சிறுவர் பகுதி

தயாரிப்பு **தஞ்சை தியாகு**
அலைபேசி: 94437 00375
Email: thiagu1943@gmail.com



ஒரு மனிதன் செய்யக்கூடிய மாபெரும் குற்றம் மகிழ்ச்சியற்றவனாக இருப்பதுதான்.

## நன்றி சொல்லுங்கள்

குறை சொல்பவர்களுக்கு
நன்றி சொல்லுங்கள்
ஏனென்றால்
உங்களை நீங்களே
செதுக்கிக் கொள்வதற்கு
அவர்கள்தான்
உளி கொடுக்கின்றனர் !

குறை சொல்பவர்கள்
உங்கள் வாடிக்கையாளர்களாக இருந்தால்
உங்கள் வளர்ச்சிக்கு
அவர்கள் வழி சொல்கின்றனர் !

குறை சொல்பவர்கள்
உங்கள் நண்பர்களாக இருந்தால்
உங்களை நல்வழிப்படுத்த
அவர்கள் முயற்சிக்கின்றனர் !

குறை சொல்பவர்கள்
உங்கள் ஆசிரியராக இருந்தால்
உங்களைச் சிகரங்களாக்க
அவர்கள் சிரமம் எடுக்கின்றனர் !



குறை சொல்பவர்கள்
உங்கள் பெற்றோராக இருந்தால்
நீங்கள் அவையத்து முந்தியிருக்க
அவர்கள் விரும்புகின்றனர் !

குறை சொல்பவர்கள்
உங்கள் மேலதிகாரியாக இருந்தால்
உங்கள் முன்னனேற்றத்திற்குச்
சிறகுகள் தருகின்றனர் !

குறை சொல்பவர்கள்
உங்கள் போட்டியாளராக இருந்தால்
நீங்கள் வெடித்தெழுவதற்காக
அவர்கள் நெருப்புத் திரி வைக்கின்றனர் !

ஆம்....
குறை சொல்பவர்கள்
முன்னேற்றத்தின் திசையை நோக்கியே
உங்களை விரட்டுகின்றனர் !

ஆம்....
குறை சொல்பவர்கள்
முன்னேற்றத்தின் திசையை நோக்கியே
உங்களை விரட்டுகின்றனர் !

நன்றி ; கவிதாசன்,கோவை

## கணக்குப்புதிர்



1) ஓரிடத்தில் சில கோழிகள் இரைதேடிக் கொண்டிருக்க, சில நாய்கள் உலாவிக் கொண்டிருந்தன. இரண்டின் தலைகளையும் எண்ணிப் பார்த்தால்9,ஆனால் அதன் கால்களின் எண்ணிக்கை 26 ஆக இருந்தன. எனில், ஒவ்வொன்றும் எத்தனை ?

2) ஒருகடிகாரத்தின் நிமிட முள் ,ஒரு நாளில் எத்தனை முறை சுற்றுகிறது ?

3) ஒரு மைதானத்தின் முன்னுள்ள சாலையில் 10 மீட்டருக்கு ஒரு கம்பம் வீதம் 10 கம்பங்கள் இருந்தன. எனில், அந்த சாலையின் நீளம் எவ்வளவு ?



## வெற்றிக்கு மூலமந்திரங்கள்!

அதிகாலையில் எழுவது ,சுறு சுறுப்புடன் செயல்படுவது ,வேலைகளை ஒத்திப்போடாமல் உடனுக்குடன்முடிப்பது, தாமதத்தை வெல்வது, உடனுக்குடன் தொழிலில் ஈடுபடுவது என்பவையெல்லாம் வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்களின் மூலமந்திரங்கள்.



**இடுக்கண் அழியாமை**

**வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்**
**உள்ளத்தின் உள்ளக் கெடும்.**

வெள்ளம்போல அதிக அளவில் வரும் துன்பங்களையும் அறிவுடைய ஒருவன் தன்னுடைய ஊக்கத்தால் கடக்க முயன்று வெற்றி காணுவான்.



## விடுகதைகள்

1. ஊரெல்லாம் வம்பளப்பான். ஒரு அறையில் அடங்குவான்.
2. கடித்தால் கடிபடாதவன், பிடித்தால் பிடிபடாதவன், அவன்யார் ?
3. அறைகள் அறுநூறு, அத்தனையும் ஒரே அளவு. அது என்ன ?
4. மூன்று கண்கள் இருக்கும் இவனால் பார்க்கமுடியாது. இவன்யார் ?
5. வெள்ளை பிள்ளையார் கோயிலுக்கு பூட்டும் இல்லை, திறப்பும் இல்லை.
6. கண்ணால் பார்க்கலாம். கையால் பிடிக்கமுடியாது. இது என்ன ?
7. கண்டு பூ பூக்கும், காணாமல் காய் காய்க்கும். அது என்ன ?



### படிப்பதற்கு என்ன வேண்டும்?

ஆர்வம் வேண்டும். அக்கறை வேண்டும்.முயற்சி வேண்டும். பயிற்சி வேண்டும். எல்லாவற்றையும் விட மன ஒருமைப்பாடு வேண்டும். அலைபாயும் மனம் எதையும் சாதிக்காது. குவிந்த மனம்தான் வலிமையுடையது. – சுகிசிவம்

### முழுப்பூசணிக்காயை சோத்துல மறைச்சுட்டான்

ஒரு ஊரில் பணக்காரன் ஒருவன் இருந்தான்.அவன் வேறொருவரின் தோட்டத்தில் இருந்த பூசணிக்காயை திருடி வந்துவிட்டான். இதை அந்தத் தோட்டக்காரன் பார்த்துவிட்டான். ஊரில் உள்ள நாலு பெரியவர்களைச் சந்தித்தான். பணக்காரன்கிட்ட பஞ்சாயத்துப் பேச அவர்களை அழைத்துச் சென்றான்.

பணக்காரன் வந்திருந்த ஊர்ப் பெரியவர்களுக்கு வடை, பாயாசத்தோடு தடபுடலாக விருந்து வைத்தான், அதைச் சாப்பிட்டு முடித்தவர்கள், இவ்வளவு செலவழிச்சு சாப்பாடு போட்ட பணக்காரன் நிச்சயம் பூசணிக்காயைத் திருடியிருக்க மாட்டான். அதற்கான அவசியமும் இல்லை என்று கூறிவிட்டுப் போய்விட்டார்கள்.

பஞ்சாயத்துப் பேச வந்த பெரியவங்களுக்கு சோத்தைப்போட்டு, பூசணிக்காய் திருடினதை பணக்காரன் மறைத்துவிட்டானே! அதுமுதல் முழுப்பூசணிக்காயை சோத்துல மறைச்சுட்டான் என்ற சொல் வழக்கில் வந்தது.

### சிரிக்கலாம் வாங்க!



1. நான் உங்களுக்கு பல் பிடுங்கினபோது வலித்ததா ?
   இல்லிங்க டாக்டர்...
   அப்புறம் ஏன் அழறீங்க ?
   இப்ப நீங்க பீஸ் புடுங்குனதுக்கு டாக்டர்.
2. போர்டு எழுத ரொம்ப பேரம் பேசுனது தப்பா போச்சு டாக்டர்...
   ஏன் என்ன ஆச்சு ?
   டென்டல் கிளினிக்கை மெண்டல் கிளினிக்குன்னு எழுதிட்டார்.
3. வலியே தெரியாம ஊசிபோட்டது தப்பா போச்சு டாக்டர்.
   ஏன் ? என்னவாம் ?
   ஊசியே போடலன்னு சொல்லி பீஸ் தரமாட்டேங்கிறார் டாக்டர்!

### பழமொழிகளில் சில

1.நண்பனைத் தேர்ந்தெடுப்பதில் நிதானமாக இரு.அவனை மாற்றுவதில் இன்னும் நிதானமாக இரு.
– ஸ்காட்டிஷ் பழமொழி

2.நல்ல மனிதர்களோடு நட்பு வைத்திரு.நல்ல மனிதர்களின் சாயலை அடையலாம். – சீனப் பழமொழி

3.ஒரு நல்ல நண்பனைப் பெறுவதற்கு ஒரே வழி .நீயும் நல்ல நண்பனாக இருப்பதுதான். – ஆங்கிலப்பழமொழி

4.குருடன் முடவனைத் தூக்கிக் கொண்டால் இருவரும் முன்னே போகிறார்கள். – ஸ்வீடிஷ் பழமொழி

5.நண்பனுக்கு உயிரைக் கொடுப்பது எளிது ஆனால் உயிரைக் கொடுப்பதற்கு நண்பன் கிடைப்பது அரிது.
– நெப்போலியன்

## பேச்சைக் குறைப்போம்!



பேசிய வார்த்தைக்கு நீ அடிமை.
பேசாத வார்த்தைக்கு நீ எஜமான்.
அதிகம் பேசினால் அமைதியை இழப்பாய் !
ஆணவப் பேச்சினால் அன்பை இழப்பாய் !
வேகமாகப் பேசினால் அர்த்தத்தை இழப்பாய் !
கோபமாகப் பேசினால் குணத்தை இழப்பாய் !
வெட்டியாகப் பேசினால் வேலையை இழப்பாய் !
வெகுநேரம் பேசினால் பெயரினை இழப்பாய் !
பெருமையாய் பேசினால் ஆண்டவனின் அன்பை இழப்பாய் ! – சுவாமி விவேகானந்தர்.

நேரத்தை மீண்டும் பெறமுடியாது என்பது பல்வேறு அரிய கண்டுபிடிப்புகளை நிகழ்த்திய அறிவியலார் ஒவ்வொருக்குமே தெரிந்தது.இது அவர்களின் வாழ்முறையை கவனித்தாலே தெரியும்..நேரத்திற்கு முக்கிய கவனம் செலுத்தினர். பேசும் நேரத்தில் ஏதேனும் கண்டுபிடிப்பை நிகழ்த்திவிடலாம் என்பதுதான் அவர்களது எண்ணமாக இருந்திருக்கிறது. ஆயிரக்கணக்கான கண்டுபிடிப்புகளை நிகழ்த்திய அறிவியல் வித்தகர் தாமஸ் ஆல்வா எடிசனிடம் அவரது சாதனையைப் பற்றி கேட்டபோது காது கேட்காத என்னிடம் பலர் உரக்கப் பேசப் பயப்பட்டு பேசமாட்டார்கள்.ஆதலால் எனக்கு நேரம் மிச்சமானது.அதிக நேரம் எனது ஆய்வுகளுக்கு கவனம் செலுத்தமுடிந்தது.அதிக அளவில் கண்டுபிடிக்க முடிந்தது என்றாராம்.தன் குறையையும் தனக்கு சாதகமாகக் கொண்டிருக்கிறார் பாருங்கள்! தமிழக அறிவியல் மேதை ஜி.டி.நாயுடுவும் அமைப்புக் கூட்டங்கள் எதிலும் பங்கேற்கமாட்டார். அதிகம் பேசமாட்டார்கள். செயல்வீரராக நிறைய கண்டுபிடித்தார்கள். உதாரணங்கள் கூறத்தேவையில்லை. பேச்சைக் குறைத்து செயல்வழி வெற்றிகளைக் குவிக்க இளைய சமுதாயத்துக்கு அன்பு வேண்டுகோள!

## பனிக்கட்டி

பிரடரிக் எனும் பேரரசன் ,மக்கள் நலனுக்கென பெரும்தொகை செலவிட்டார். இருப்பினும் மக்கள் வறுமையிலேயே வாடினர்.இதனை அறிந்தவர் தனது அரசவையைக் கூட்டி காரணம் அறிய முற்பட்டார். காரணத்தைக்கேட்டபோது வயதான ஓர் பிரபு எழுந்து நின்று இதற்கான பதிலை நான் கூறுகிறேன் என்று சொல்லிவிட்டு தனக்கு முன்பாக மேஜை மீதிருந்த ஓர் பனிக்கட்டியை எடுத்து பக்கத்தில் உட்கார்ந்திருந்த பிரபுவுடம் கொடுத்து ,இதை வரிசையாக கைமாற்றி மன்னரிடம் கொடுத்து விடுங்கள் என்றார்.

அந்தப்பனிக்கட்டி இப்படி மாறி மாறி கை பட்டுப்பட்ட இறுதியாக அரசனிடம் சேர்ந்தபோது இரண்டு சொட்டு தண்ணீர் மட்டுமே எஞ்சியிருந்தது.

அரசரும்உண்மையைஉணர்ந்தார்.இதைப்போலமக்களின்நலனுக்காக அரசுதிட்டமிடும்பெருந்தொகை சரியான கண்காணிப்பு, நேர் தொடர்பு இல்லாவிட்டால் வீணாகப் போய்விடும் என்பதை உணர்ந்தார் என்பதாகச் சொல்லப்படும் கதை இது.

## முத்தான வார்த்தைகள்

தேவைகள்: தோல்விதான் ஒருவனை வெற்றிக்குரியவனாக உயர்த்துகிறது.அவமானம்தான் ஒருவனை மானமுள்ளவனாக ஆக்குகிறது.வறுமைதான் ஒருவனை வளமுள்ளவனாக மாற்றுகிறது.அறியாமைதான் ஒருவனை அறிஞனாக வளர்க்கிறது.

துன்பத்திற்குக் காரணங்கள்: ஆசைமட்டும்தான் துன்பத்திற்குக் காரணம் என்றில்லை. பேச்சும் துன்பத்திற்குக் காரணமாகும்.பேச்சைக் குறைத்தால் துன்பம் தானாகக் குறையும்.அதிலும் பிறரைப் பற்றிப் பேசுவதைக் குறைத்தால் ,பேசாமல் விட்டால் துன்பம் அறவே நீங்கும்.

துன்பமே ஆசான்: துன்பம் வரும்போது தான் மனிதன் பண்படுகிறான்.துன்பமே பலருக்கு அறிவுகொடுக்கும் ஆசானாக விளங்குகிறது.

தலைவன்: எல்லோரிடமும் குறையும் உண்டு;நிறையும் உண்டு.நிறைகளைப் பாராட்டி குறைகளை மன்னித்து விடுபவனே நல்ல தலைவனாகிறான்.குறைகளை மட்டுமே பெரிது படுத்திக் காட்டுபவன் நல்ல தலைவனும் நாகரீக மனிதனும் அல்ல.

நேர்மை: நேர்மையான வழியில் வராத எதுவும் நிலைத்து நிற்பதுமில்லை.நிறைவைக் கொடுப்பதும் இல்லை.

**தாய்க்காக கண் கலங்கிய நேதாஜி**



மரணத்திற்கு பயப்படாத,துக்கம் கண்டு துவளாத அஞ்சாத வீரர் ,எவருக்கும் வளைந்து கொடுக்காத மனிதர்.எத்தனைத் தடைகள் வந்தாலும் எதிர் நீச்சல் போட்டு நேர்மையை நிலை நாட்டுபவர்.இப்படி எவ்வளவோ சொல்லிக்கொண்டே போகலாம். அத்தகைய நேதாஜி ஒரு முறை கண்கலங்கியிருப்பதைக் கண்டு அனைவரும் வியப்பில் ஆழ்ந்தனர்.

அவர் இந்தியாவிலிருந்து ரகசியமாக வெளியேறி பெர்லினில் எந்தவிதமான ஆபத்துமின்றி இருந்தபோது , அவர் விமான விபத்தில் இறந்துவிட்டதாக ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் ஒரு பொய்யான செய்தியை ஒலிபரப்பியது.அச் செய்தியைப் படித்ததும் நேதாஜி கண்கலங்கி அழுதார்.அஞ்சா நெஞ்சம் கொண்ட நேதாஜியா இப்படி அழுகிறார் என அனைவரும் வியந்ததோடு கேட்டும் விட்டனர்.நண்பர்களே ! நான் மரணத்தைக் கண்டோ,மரணம்பற்றிய செய்தியைக் கண்டோ நான் பயப்படவில்லை. ஆனால் வயது முதிர்ந்த எனது தாய் இச் செய்தியைக் கேட்டுத் துடி துடித்துப் போவார்களே.அதற்காகத்தான் கலங்கினேன்.நான் நலமாக சந்தோஷமாக இருக்கிறேன் என்பதை என் தாய்க்கு எப்படித் தெரிவிப்பது ? அதுவே என் கலக்கம் என்று காரணம் சொன்னார் அம் மாவீரர்.

---

**இவை தெரியுமா?**

**1. கம்ப்யூட்டர்**

கம்ப்யூட்டர் ஒரே நேரத்தில் முழுமையாக உருவாக்கப்படவில்லை. அமெரிக்காவைச் சேர்ந்த ஜே.ஜி. பிரெய்னெர்ட், ஜே.பி. எக்கெர்ட், ஜெ. டபிள்யூ.மவுச்லி ஆகியோர் 1942 ஆம் ஆண்டு எலக்ட்ரானிக் கம்யூட்டரை உருவாக்கினார்.

அமெரிக்காவின் சார்லஸ் பாப்பேஜ் டஜிட்டல் கம்ப்யூட்டரை உருவாக்கினார்.அவரது உதவியாளர் அடா லவ்லேஸ் என்பவரே முதன் முதலில் கம்ப்யூட்டர் புரோகிராம்களை உருவாக்கினார்.

இன்றைய நவீன கம்ப்யூட்டரை உருவாக்கிய பெருமை அமெரிக்காவின் ஜான் வான் நியூமான் என்பவரைச்சாரும்.அவர் அதை 1945ஆம் ஆண்டு உருவாக்கினார்.

**2. கம்ப்யூட்டர் பிரின்டர்**



1953 ஆம் ஆண்டு ரெமிங்டன் ராண்ட் என்பவரால் அதிவேகமான பிரின்டர் கண்டுபிடிக்கப்பட்டது.அமெரிக்காவின் ஜெராக்ஸ் பாலோ ஆல்ட்டோ ஆய்வுமையம் தொடர்ந்து பல ஆய்வுகளை மேற்கொண்டு ,1971 ஆம் ஆண்டு ஜெராக்ஸ் காப்பியர் பிரின்ட்டரைக் கண்டுபிடித்தது. இதை அடிப்படையாக வைத்து,ஜெராக்ஸ் பொறியாளர் காரி ஸ்டார்க் வெதர் என்பவர் லேசர் பிரின்டரை கண்டுபிடித்தார்.

1992 ஆம் ஆண்டு ஹெவ்லெட்பாக்கோர்ட் ஆகியோர் லேசர் ஜெட் 4 என்னும் லேசர் பிரின்டரை உருவாக்கி உலகிற்கு அளித்தனர்.

**குறைகளையும் நிறைகளாக ஆக்குங்கள்!**

வாய் பேசமுடியாத,காது கேளாத ஒரு இளைஞன் வேலைக்காக பல தேர்வுகளை எழுதினார். எழுத்துத்தேர்வில் வெற்றிபெற்றாலும் நேர்முகத்தேர்வில் வெற்றிபெற முடியவில்லை. ஒரு நேர்முகத்தேர்வினுக்குச் சென்றபோது ஒரு காகிதத்தில் தனக்குப்பேசமுடியாது,காதுகேட்காதுஎன்பதாகஒருபேப்பரில்எழுதிக்கொடுத்தார். அதனைப்படித்த தேர்வு அதிகாரி சற்று கோபமுற்று அந்தப் பேப்பரைக் கிழித்து ஒன்றை எழுதிக் கொடுத்தார். அதில் காது கேட்காது என்பதால் பக்கத்தில் உள்ளவர்களின் வீண்பேச்சைக் கேட்கமாட்டேன். வாய்பேசாது என்பதால் மற்றவர்களுடன் அரட்டை அடிக்கமாட்டேன் என்னுடைய வேலையை ஒழுங்காகச் செய்வேன் என்று எழுதிக் கொடுக்குமாறு எழுதியிருந்தார்.இளைஞருக்கு வேலையும் கிடைத்தது. இளைஞர்களே! நம்முடைய குறைகளையும்,நிறைகளாக்குங்கள் என்பதைத்தான் அவ்வதிகாரி செயல்படுத்தச் செய்தார்.

---

**கணக்குப்புதிர் விடைகள்:** 1) 5கோழிகள்; 4 நாய்கள் 2) 24 முறைகள் 3) 90 மீட்டர்விடுகதை

**விடைகள்** 1.நாக்கு 2.தண்ணீர் 3.தேன்கூடு 4.தேங்காய் 5.முட்டை 6.நிழல் 7. வேர்க்கடலை



## கந்த சஷ்டி விரதம் அனுஷ்டிக்கும் முறை.

தமிழ் கடவுளான முருகப் பெருமானுக்குரிய மிக முக்கியமான விரதங்களில் ஒன்று கந்த ஷஷ்டி விரதம். மாதந்தோறும் சஷ்டி திதி வந்தாலும் ஐப்பசி மாத வளர்பிறையில் வரும் சஷ்டிக்கு முந்தைய ஐந்து நாட்களுடன் துவங்கி, சஷ்டி திதி வரையிலான 6 நாட்கள் இருப்பது மகாகந்தசஷ்டி விரதமாக போற்றப்படுகிறது.

முருகப் பெருமான் சூரனை வதம் செய்து, தேவர்களை காத்த காலம் என்பதால் இந்த நாளில் நாமும் விரதம் இருந்து முருகனை வழிபட்டால், முருகப் பெருமான் நம்முடைய வாழ்க்கையில் இருக்கும் துன்பங்கள், துயரங்கள், கர்மவினைகள் அனைத்தையும் போக்கி, நம்மையும் காத்து அருள்வார் என்பது நம்பிக்கை. இந்த கந்த ஷஷ்டி விரதத்தை எந்தெந்த முறைகளில் எல்லாம் இருக்கலாம் என்பது பற்றி இங்கு தெரிந்து கொள்ளலாம்.

**கந்தசஷ்டி விழா 2025 :**

முருகப் பெருமானுக்கு இருக்கப்படும் விரதங்களில் மிக கடுமையானது கந்தசஷ்டி விரதம் தான்.முருக பக்தர்கள் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருக்கும் கந்த சஷ்டி பெருவிழா இந்த ஆண்டு அக்டோபர் 22–ம் தேதி துவங்க உள்ளது. கந்த சஷ்டி விழாவின் முக்கிய நிகழ்வான சூரசம்ஹாரம் அக்டோபர் 27–ம் தேதியும், வள்ளி – தேவசேனா சமேத முருகப் பெருமானுக்கு அக்டோபர் 28–ம் தேதி திருக்கல்யாண வைபவமும் நடைபெற உள்ளது.

**கந்த சஷ்டி விரதம் :**

முருகப் பெருமானுக்கு இருக்கப்படும் மிகவும் சக்தி வாய்ந்த விரதமாக கருதப்படுவது கந்தசஷ்டி விரதம். சிலர் 6 நாட்கள் இந்த விரதத்தை கடைபிடிப்பார்கள், சிலர் 7 நாட்கள் இந்த விரதத்தை கடைபிடிப்பார்கள். அவரவரின் விருப்பத்திற்கு ஏற்ப எத்தனை நாள் விரதம் இருப்பது முதலில் முடிவு செய்து கொள்ள வேண்டும். இந்த விரதத்தை கடைபிடிப்பதில் பல முறைகள் உள்ளன. இவற்றில் நம்முடைய உடல்நிலைக்கு எது ஏற்றதோ, அந்த முறையை தேர்வு செய்து விரதம் இருக்கலாம்.

**கந்த சஷ்டி விரதம் இருக்கும் முறைகள் :**

1. ஆறு நாட்களும் வெறும் தண்ணீர் மட்டும் எடுத்துக் கொண்டு விரதம் இருப்பது.

2.தினமும் ஒரு இளநீரை மட்டும் உணவாக எடுத்துக் கொண்டு விரதம் இருப்பது.

3.இறைவனுக்கு நைவேத்தியமாக படைத்த பால், பழங்களை மட்டும் உணவாக எடுத்துக் கொண்டு விரதம் இருப்பது.

4.இரண்டு வேளை சாப்பிட்டு, ஒரு வேளை உணவை தவிர்த்து விரதம் இருப்பது.

5.இருவேளை உணவை தவிர்த்து விட்டு, ஏதாவது ஒரு வேளை மட்டும் சாப்பிட்டு விரதம் இருப்பது.

6.கந்தசஷ்டி விரதத்திலேயே மிகவும் உச்சபட்சமாக கடுமையான முறையில் விரதம் இருப்பது என்றால் அது மிளகு விரதம் தான். பல ஆண்டுகளாக குழந்தை வரம் வேண்டி தவம் இருப்பவர்கள் முருகனை வேண்டிக்கொண்டு இந்த விரதத்தை இருப்பார்கள். அதாவது முதல் நாளில் ஒரு மிளகு மட்டும் சாப்பிடுவது, 2 வது நாளில் 2 மிளகு, 3 வது நாளில் 3 மிளகு என படிப்படியாக ஒவ்வொரு நாளும் எண்ணிக்கையை அதிகரித்துக் கொண்டே செல்வது.

7.சாப்பிடாமல் விரதம் இருக்க முடியாது என்பவர்கள், மற்ற நாட்களில் உணவு எடுத்துக்கொண்டும், சூரசம்ஹாரம் அன்று மட்டும் முழுவதுமாக உணவு எதுவும் எடுத்துக் கொள்ளாமல் விரதம் இருந்து மாலையில் சூரசம்ஹாரம் நிறைவடைந்த பிறகு இரவு உணவு சாப்பிட்டு, விரதத்தை நிறைவு செய்து கொள்ளலாம்.

– அர்ச்சனா சுவேதாரண்யம்,
பெசன்ட் நகர், சென்னை–90.
செல் : 9943702054




## முழங்கால் மூட்டுவலி
## (KNEE ARTHIRITIS)

"ஐயோ அம்மா"!! இந்த முழங்கால் மூட்டு வலியால் 10 அடி கூட நடக்க முடியலை. தூங்கும் போது தொடை, மூட்டு, கெண்டை தசை எல்லாம் குடைச்சல். மருந்து OINTMENT ஊசி எல்லாம் அந்த நேரத்துக்கு தான். கேட்டால் Dr. எலும்பு மூட்டு தேய்ந்துவிட்டது. Weight குறையுங்கள். Daily நடங்கள் என்கிறார். வலி இருக்கும் போது எப்படி நடப்பது ? வலி தீர வழி உள்ளதா ?

இந்த மாதிரி எத்தனை பேர் புலம்பி கேள்விப்பட்டு இருக்கிறீர்கள்.

35 வயதிற்கு மேலே மூட்டுவலி Common. அது எலும்பு தேயலால் வருவது. இளம் வயது விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உட்காயத்தால் மூட்டு வலி வர வாய்ப்பு அதிகம்.

பிசியோதெரபி என்கிற உடலியக்க மருத்துவத்தால் மருந்தின்றி, அறுவை சிகிச்சை இல்லாமல் சாதாரணமாக வயது மூப்பினால் வரும் முழங்கால் மூட்டு வலியை Step by Step சரி செய்ய முடியும். மேலும் பயிற்சிகளை பிசியோ தெரபிஸ்ட் மேற் பார்வையில் (Online - Off Line )பண்ணினால் பூரண குணமாகும்.

**முழங்கால் மூட்டு வலி ஏன் வருகிறது :**

1) Arthiritis எலும்பு தேய்மானம்.

2) அதிக உடல் பருமன்

3) விளையாட்டு மற்றும் விபத்துகளினால் உட்காயம்

4) Sedantry life style (நிறைய நேரம் உட்கார்ந்து வேலை செய்வது மற்றும் தேவையான உடற்பயிற்சி இல்லாமை.

**பிசியோதெரபியில் என்ன செய்யப்படுகிறது?**

முதலில் உடலியக்க மருத்துவர் Clinical examination / History கேட்டு பரிசோதனை செய்வார். வலி வேறு எதனால் எல்லாம் வருகிறது என்று கண்டுபிடித்து அதை சரி செய்ய மின்னியல் சிகிச்சை (Electro Therapy) 2 – 3 வாரம் கொடுக்க வலி, வீக்கம், பிடிப்பு, குடைச்சல் எல்லாம் 60 சதவீதம் குறைந்ததும், மருந்துவர் மேற்பார்வையில் (Online / Off line) தசைவலிமையை அதிகரிக்கும் சிறப்பு பயிற்சிகள் 3–6 வாரம் தொடர்ந்து பண்ணினால் Step by Step வலி காணாமல் போகும். தேவை நம்பிக்கை, பொறுமை, & தேர்ந்த பிசியோதெரபிஸ்ட் Dr. அறிவுரையை அப்படியே பின்பற்றும் மூட்டுவலி நோயாளி.

**DO'S & DON'T**

எதுவும் போட்டு தேய்க்க கூடாது, உருவக் கூடாது, Massage பண்ண கூடாது. குழந்தைகளை விட்டு மிதிக்க சொல்ல கூடாது. மருந்து கடையில் விற்கும் Set மாத்திரை என்று கேட்டு சாப்பிட கூடாது பின் விளைவுகள் (வயிறு புண் Ulcer, Gas Problem, சிறுநீரகம், மண்ணீரல் கெட வாய்ப்பு) அதிகம்.

வலி குறைந்தாலும் 3–4 வாரம் பயிற்சி பண்ணாமல் விட கூடாது. படிக்கட்டில் ஏறி இறங்குவது குறைக்கவும் கீழே உட்காருவது Indian Toilet, அதிக நேரம் நிற்பது நடப்பது குறைக்கவும். Bed Rest தேவை இல்லை வலி அதிகம் ஆகாத மாதிரி Rest எடுத்து Rest எடுத்து வேலை செய்யலாம். 3–4 வாரத்தில் 60% வலி குறையும். 30-40% மூட்டு தசைகளை வலிமை பெற பயிற்சி செய்தால் பூரண குணமாகும்.

மூட்டுவலி தீர பிசியோதெரபியில் வழி உள்ளது.

Dr. S. Vijaya, BPT
PHYSIOTHERAPIST.
9445331014
ONLINE Consultation & Physiotheraphy
Treatment for all pain available.

# திருவிளையாடற் புராணம் - 41

## விறகு விற்ற படலம்

சிவகாமியின் செல்வன். டாக்டர். தி. பாலசுப்ரமணின்.

வரகுண பாண்டியனின் வளமான ஆட்சிக்காலம். அப்பொழுது ஏமநாதன் என்றொரு யாழ்ப்பாணன், வடநாட்டிலிருந்து வெற்றி விருதுகளுடன் மதுரை வந்தடைந்தான். வரகுண பாண்டியனை வணங்கினான். அவனைப் புகழ்ந்து இன்னிசையால் அரசவையைப் பெரிதும் ஈர்த்தான்.

அவன் இசையைக் கேட்டு மகிழ்ந்த பாண்டியன் பொன், பொருள், ஆடை, அணிமணி எனப் பல பரிசுகளை வழங்கி தங்க ஒரு மாளிகையையும் வழங்கினான். தற்பெருமையும், மமதையும் செருக்கும் கொண்ட ஏமநாதன் தன்னோடு இசைபாட வல்ல யாழ்ப்பாணர் பாண்டிய நாட்டில் வேறு ஒருவரும் இல்லை போலும் என்று இறுமாப்புடன் பேசிவிட்டான்.

இதனை அறிந்த வரகுணன் பாணபத்திரரை அழைத்தான். நீ ஏமநாதனை இசையில் வெல்ல வேண்டும். இயலுமா என்றான். "தென்னவர் பெரும! உமது உள்ளக் கருத்தின் விருப்பம் ஈடேற கூடற் பெருமானின் திருவருளால் ஏமநாதனை வென்று அவன் செருக்கை அகற்றுவேன்" என்றார். "நாளை வந்து பாடுக!" என்று கூறி மன்னன் பாணபத்திரரை வீட்டிற்குச் செல்ல அனுமதித்தான்.

இதற்கிடையில் ஏமநாதனின் மாணவர்கள் சிலர் வீடுதோறும் சென்று மாத்திரை குறையாத அளவில் பாடிச் சென்றதைச் செவிமடுத்தார் பாணபத்திரர். அவர்களின் திறனை வைத்து ஏமநாதனின் திறனைக்கருதிய பாணபத்திரர் ஏமநாதனை வெல்வது எளிதல்ல என்று எண்ணி அஞ்சி திருக்கோயிலைச் சென்றடைந்தார். இறைவனிடம் முறையிட்டு விட்டு வீடு திரும்பினார். அடியவர் பாணபத்திரரின் இன்னலைக் களைய முடிவெடுத்த இறைவன் வயது முதிர்ந்த, இளைத்த வடிவெடுத்து, கந்தலை உடுத்தி அதில் கொடுவாளைச் செருகிக் கொண்டு, விறகுக் கட்டைகளைச் சுமந்து அலைந்து, இறுதியில் ஏமநாதன் தங்கி இருந்த வீட்டினை அடைந்தான். அங்கு உள்ள முன் புறத்திண்ணையில் அமர்ந்து இனிய இசையை சிறிதே எழுப்பிப் பாடினான்.

அவ்விசையினைச் செவிமடுத்த ஏமநாதன், இசை பாடிய விறகு வெட்டியை யார் என வினவினான். "நான் பாணபத்திரனின் அடிமை. அவரிடம் இசை கற்றேன். என் கற்றலின் நிறைவற்ற நிலையை அறிந்த அவர் 'நீ தசையெல்லாம் ஒடுங்க வயதிலே மிகவும் முதிர்ந்து விட்டாய். கற்க தகுதி உனக்கில்லை இனி என்று தள்ளிவிட்டார். விறகு வெட்டிப் பிழைக்கிறேன்" என்றார். உடனே ஏமநாதன் "ஏ விறகு மள்ளா! சற்று முன் நீ பாடிய அந்த இசையினை இன்னும் ஒரு தரம் பாடு" என்றான்.

விறகு வெட்டியாக வேடமிட்டு வந்த இறைவன் இனிய குரலில் சாதாரிப்பண்ணில் அமைந்த ஒரு பாடலைப் பாடினான். சாதாரிப்பண் – முல்லைப்பண். இது தேவகாந்தாரம் எனப்படும். எழுதிய ஓவியம் போல அசைவற்று இருந்து, அருவியின் ஓசை, முழவின் ஓசை, கஞ்சக் கருவிகளின் ஒலி, வலம்புரிச் சங்கு முழங்கும் ஓசை, வண்டுகளின் ரீங்கார ஒலி ஆகிய மிடற்றோசையின் குணங்களும், மூங்கிலினின்று விழும் இலையின் வீழ்ச்சி, மீன் கொத்திப் பறவை மீனின் மேல் விழும் வீழ்ச்சி, ஆகிய இவை போன்ற பாடலின் குணங்களும், தோன்றும்படி படுத்தல், நலிதல், எடுத்தல் முதலிய ஓசைகளில் துள்ளல், தூங்கல், மெலிதல் என்னும் இசைகள் சிறக்கச் செய்து அமுதம் போன்ற பாடலின் ஓசையும், இசையின் ஓசையும் வழுவாது யாவர்க்கும் இசை விருந்து அளித்தான் இறைவன். பாணர்களின் தலைவனாகிய பாணபத்திரனைக் காக்கும் பொருட்டும், பருந்தும் அதன் நிழலும் போல யாழின் இசை பின் தொடரப் பாடிய இனிய இசை உலகையே ஈர்த்தது. அனைத்தும் அசைவின்றி அடங்கின. இதனால் ஏமநாதனின் உள்ளம் உயிர் உடல் யாவும் உருகின. ஏமநாதன் மயங்கிவிட்டான். இறைவன் விறகு சுமையோடும் மறைந்தருளினான்.

பாணபத்திரனால் தள்ளப்பட்ட இம் முதிய விறகு வெட்டியின் இசை இதுவாயின், பாணபத்திரன் இசை எத்தன்மையதோ!" என்று அதிர்ந்தான். உடனே வடக்கு நோக்கிப் புறப்பட்டு ஓடிப்போய்விட்டான் ஏமநாதன். இறைவன் பாணபத்திரன் கனவில் தோன்றி "உன் வேண்டுதல் படியே யாம் செயல்பட்டு இசை பாடி ஏமநாதனிடமிருந்து உன்னைக் காத்தனம்" என்று அருளிச் செய்தான்.

கண்விழித்த பாணபத்திரன் மதுரை நாயகனை அடைந்து வணங்கி பின்னர் வரகுணபாண்டியனைப் பார்த்தார். இறைவன் கனவில் வந்து சொன்னதைச் சொன்னார். பாண்டியனின் ஏவலர்க்கும் விறகு வெட்டியின் பாடலைக் கேட்டு ஏமநாதன் நாட்டை விட்டு ஓடிப்போன செய்தியைக் கூறினார். இறைவனின் திருவிளையாடலை எண்ணிப் பாராட்டி மகிழ்ந்தான். பாணபத்திரரை யானை மீது அமர்த்தி நகர் வலம் செய்வித்து மரியாதை செய்தான். மகிழுமாறு வரிசைகள் நிறையக் கொடுத்தான். "உம் பொருட்டு சிவபெருமான் தோள் நோவ விறகு சுமந்து வந்து, பாடி ஏமநாதனின் செருக்கை அடக்கி ஓடவிட்டான். எனவே நீரே எம் தலைவர். நான் உமது அடிமை. இன்று முதல் சோமசுந்தரக் கடவுளைப் பாடுதலே உமது கடமை" என்று கூறி விடை கொடுத்தான். பாணபத்திரர் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தார்.

"செருக்குற்றோரை அச் செருக்கே தலை குனிய வைக்கும்" !

## ஸ்ரீ பக்த புரந்தரதாஸர் - பகுதி -3.

தினந்தோறும் நள்ளிரவில் புரந்தரி தன்னை நன்கு அலங்கரித்துக் கொண்டு, காலில் சலங்கை அணிந்து, கையில் வீணையை எடுத்துக்கொண்டு புறப்பட்டுச் சென்றதைக் கண்ட ஸ்ரீ ரகுநாதர், ஒரு நாள் புரந்தரியை வழி மறித்து எங்கு அனுதினமும் செல்கிறீர்கள் என வினவ, பரமபக்தனான அவரிடம், 'தான் கோவிலுக்குச் சென்று எம்பெருமானின் குண விசேஷங்களை பக்தியுடன் வாசிக்க தொடங்கியதும், மணிக்கதவங்கள் திறக்க, பரந்தாமன் வெளியே எழுந்தருளி எனது வீணை இசைக்கேற்ப பரதமாடுவார்; பின் அவர் வீணைமீட்ட, இந்த எளியவள் நடனமாடுவேன்' என்று புரந்தரி கூறவும், அவர் தானும் இந்த சேவையைத் தரிசிக்க கிருபை செய்ய வேண்டும் என வேண்டுகிறார். புரந்தரியும், அவரிடம் மண்டபத்திலுள்ள கற்தூண் மறைவிலிருந்த வண்ணம் பகவானைச் சேவித்துக் கொள்ளுங்கள் எனக் கூறுகிறாள். அது போன்றே பக்தி பரவசத்துடன் கண்டு களித்துக் கொண்டிருந்த ஸ்ரீ ரகுநாதரை தடுத்தாட்கொள்ளத் திருவுள்ளம் கொண்ட பகவான், வீணையை அபஸ்வரமாக மீட்ட, புரந்தரியோ அதைக்கூட உணராமல் களிநடனம் புரிய, பக்தரோ, நிறுத்துங்கள் இந்த அபஸ்வரத்தை! என்று கூறிய வண்ணம் தூண் மறைவிலிருந்து வெளியே வந்தார்.

வெளியே வந்ததும் சௌந்தர்ய அலங்காரத்தோடு ஜகஜ்ஜோதியாக காட்சியளித்த திருவேங்கடத்தானைக் கண்டு பக்தியில் மெய்மறந்து நிலத்தில் வீழ்ந்து நமஸ்கரித்து வணங்கினார். எம்பெருமானின் ஆக்ஞைப்படி ஸ்ரீ ரகுநாதர் வீணையை மீட்டி, அவர் இயற்றிய சுலோகங்களை மெய்யுருகப் பாட, எம் பெருமானோ பக்தனின் பாடலுக்குப் பதம் பிடித்து ஆடினார். பின் புரந்தரியிடம், ரகுநாதருக்கு ஞானோபதேசம் செய்யுமாறு பணித்ததுடன், இன்றிலிருந்து புரந்தரதாஸர் என்னும் திருநாமம் பெற்று, நாம சங்கீர்த்தனங்களால் பக்தியைப் பூவுலகில் பரப்புவதற்கு அருள் செய்து அந்தர்த்தியாமியானார். திருப்பதியில் பலகாலம் தங்கி, பின் மனைவி லட்சுமியுடன் திருத்தல யாத்திரையைத் தொடர்ந்தார். யாத்திரை முடிந்து திரும்பவும் வேமன்னபுரி வந்து, கிருஷ்ண பஜனை செய்வதும், புராண பிரவச்சனம் செய்வதுமாக வாழ்ந்து வந்தார். லஷ்மிபாய் தையல் வேலை செய்து குடும்பத்தை நடத்தி வரும் போது, அவர்கள் புதல்வி ருக்மணி புஷ்பவதியானதும் கேசவராவ் சாந்தி முகூர்த்தம் நடத்த நாள் குறித்ததுடன், புரந்தரதாஸரின் வறுமை நிலையை பற்றி கேள்விப்பட்டு ஏமாற்றம் அடைந்தார். எம்பெருமான் முன்போலவே அந்தணர் வேடம் பூண்டு செய்ய வேண்டிய சீர்வரிசைகளைக் குறைவின்றி அளித்து, அவ்வைபவத்தினை சிறப்பாக நடத்தினார். இதைக் கேள்வியுற்ற புரந்தரதாஸர் தமக்காக பகவான் நடத்தும் அற்புத திருவிளையாடலை எண்ணி அகமகிழ்ந்தார்.

ஒரு முறை அவரது இல்லத்தில் பஜனை நடந்தபோது, சில பக்தர்கள் சங்கீர்த்தனங்களை தாளம் தப்பி, சுருதி சேராமல் பாடவும், ஸ்ரீ புரந்ததாஸர் அவர்களை மிகவும் கடிந்து கொண்டார். அடியார்கள் மிகவும் மன வருத்தமடைய, அடியார்களுக்கு அடியவர்களான பக்தர்களுக்கு அபச்சாரம் செய்துவிட்டோமே என்று வருந்தினாலும், அவருக்கு வாய் பேச முடியாது போய் விட்டது. அப்போது அவருக்கு ஓர் உண்மை புலப்பட்டது. உலகில் எல்லோரும் சங்கீத வித்வான்களாக இருக்க இயலாது; ராகம், தாளம் தப்பினாலும் தோத்திரம் செய்யும் நாம உச்சாடனம் பெருமானுக்கு உகந்ததே! பக்தர்களுடைய அன்பும், பக்தியும் பெருமானுக்கு மகிழ்ச்சியே அளிக்கும் என உணர்ந்து வருந்தவும், அவரால் திரும்பவும் பேச முடிந்தது. இன்னொரு முறை தம் சீடர் அப்பண்ணாவிடம் ஒரு குடமும், ஒரு வராகனும் கொடுத்து, தந்தையின் திதிக்காக நெய் வாங்கி வருமாறு கூற, அவரை சுங்க சாவடி அதிகாரி வேடத்தில் வந்த பகவான், நெய்க்குடத்தை சுங்கவரி செலுத்தாததால் பறித்து விட்டார். ஆனால் அவரே சீடரின் வேடத்தில் நெய்க்குடத்தை கொண்டு போய் கொடுக்கவும், தாஸர் கூறிய மற்றொரு வேலையைக் காதில் வாங்காமல் இருந்ததால், ஆண்டவன் தலையில் பலமாகக் குட்டினார். குட்டை வாங்கிக் கொண்டு மறைந்தார் பகவான்! உண்மையான அப்பண்ணா கவலை தோய்ந்த முகத்துடன் வந்து சுங்க அதிகாரிகள் நெய்க்குடத்தைப் பறித்துக் கொண்டதைக் கூறியதும், தாஸருக்கு உண்மை புரிந்தது. பூரண ஞானிகளுக்குத் தேவையான பொறுமை தம்மிடம் இல்லையே என்று மிகவும் மனம் வருந்தினார்.

ஸ்ரீ புரந்தரதாஸரின் பெருமையை உலகறியச் செய்ய திருவுள்ளம் கொண்ட எம்பெருமான் ஒரு லீலை செய்தார். அவ்வூரில் வசித்து வந்த தேவதாசியான லீலாவதி, தாஸரின் பரம பக்தை.

ஒரு நாள் தாஸரின் ரூபத்தில், அவளது வீட்டிற்குச் சென்ற பகவான், அன்பளிப்பாக ஒரு பொற் காப்பை பலவந்தமாக கொடுத்து வந்தார். மறுநாள் பூஜைக்கு வந்த அர்ச்சகர், சுவாமி கைகளிலிருந்த ஒரு பொற் காப்பைக் காணவில்லை என தெரிவிக்க, பறை முழங்கி திருட்டினைத் தெரிவித்தனர். அதைக்கேட்ட லீலாவதி அரண்மனைக்குச் சென்று நடந்ததைக் கூறவும், புரந்தரதாஸர் கைது செய்யப்பட்டு, அரசவைக்கு கொண்டு வரப்பட்டார். அவர் குற்றச்சாட்டைக் கேள்வியுற்று, காப்பையும் திருடவில்லை; யாரிடமும் கொடுக்கவுமில்லை; இந்த அம்மணியை இதுவரை பார்த்ததுமில்லை என்று கூறியும், அரசன் தண்டனையாக 30 கசையடிகள் கொடுக்க ஆணையிட்டான். தாஸர் பண்டரிநாதனைத் தியானம் செய்ய, அசரீரியாக பெருமான், முதல் நாளிரவு காப்பிடப்பட்ட கதவுகள், மறுநாள் அர்ச்சகர் வந்து திறக்கும் வரை அப்படியே இருக்க, எப்படி தாஸர் திருடியிருக்க முடியும் ? பரமபக்தனான இவரின் புகழை உலகறியச் செய்யவே, யாம் இவரது உருவில் லீலாவதி வீடு சென்றோம் எனக் கூறவும், அரசன் தாஸரிடம் மன்னிப்பு கேட்க, லீலாவதி அவளுக்கு வைகுண்ட பிராப்தி வேண்டும் என வேண்டிப் பெற்றாள். மன்னர் தாஸருக்கு நிறைய பொன்னும், பொருளும் தானமாக கொடுத்ததுடன், அவர் நடத்தும் சத்விஷயங்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்தான்.

ஸ்ரீ புரந்தரதாஸர் ஏராளமான கீர்த்தனைகள் இயற்றினார். 'அனைவருமே அந்த பகவானின் சொரூபம்தான்' என்ற உணர்வுடனேயே வாழ்ந்து பூவுலகில்பக்தியைப்பரப்பினார். ''கர்நாடகசங்கீதத்தின் பிதாமகர்'' என அறியப்பட்டார். 'தாஸர்வாள்பதம்' என்றும் ''வேதவா நாமா'' என்றும் இசை உலகம் போற்றுகிறது. அவரது கீர்த்தனைகளான 'லம்போதர லகுமிகரா, அம்பாசுத அமர விநோத' 'கிருஷ்ணா நீ பேகனே பாரோ' இன்றும் நமது செவிகளில் தேனாக பாய்ந்து கொண்டிருக்கிறது.

ஸ்ரீ பக்த புரந்தரதாஸர் திருவடியே சரணம்.

மற்றொரு விட்டல பக்தருடன் அடுத்த மாதம் சந்திப்போம்.

– லலிதா வேலாயுதம்.

## யார்--- செய்த--- புண்ணியமோ...

நிகழ்வின் நிகழ்வில் யார் செய்த புண்ணியமோ என்பார்கள். புண்ணியத்திற்கு ஏற்ற பலன் பரிகாரம் செய்வதனால் கிடைப்பதில்லை. நிகழ்வில் முன்னோர்கள் கூறிய யார் செய்த புண்ணியமோ...

அடுத்தவர்களால்புண்ணியம்கிடைப்பதில்லை. இல்லத்தில் தெரிந்தோ, தெரியாமலோ திருமுறை பாராயணம் செய்வதனால் புண்ணியம் கிடைக்கும் என்று சான்றோர் சொல். திருமுறை பாராயணம் செய்வதில் பல வழிகளால் வழிபாடு உள்ளது. தீட்சை பெற்றும் திருமுறை பாராயணம் செய்வதும், செவியால் கேட்பதும் வழிபாட்டில் திருமுறை கோவில் வழிபாடு செய்வதாலும் புண்ணியம் வந்து சேரும். திருமுறை திருத்தல பதிகம் வழிபாடு உற்றார் உறவினர்களுக்கும், புண்ணியம் கிடைக்கும் என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசகர், சேக்கிழார் கூறிய வாக்கில். திருமுறை பாராயணம் செய்யும் போது கயிலாயம் சென்று வந்த உணர்வு வருதல் வேண்டும்.

சொல்லும் செயலும் வாக்கில் மேன்மையானவர்கள், என்று ஞானசம்பந்தர் சொல்லால் குருஞான சம்பந்தர் சிந்தனையில் திருமுறை ஓதாய் மனமே உனக் கென்னவாய் இதை விட புண்ணியம் தேடினாலும் கிடைக்காது.

ஸ்ரீநடராஜர்தரிசிக்கும்போது அருகில்இருக்கும் திருமுறையை கண்ணால் தரிசித்து வழிபடுங்கள் பாராயணம், செய்வதாகவும், செய்திருப்பதாகவும் புண்ணியம் கிடைக்கிறது. புண்ணியம் ஏழு தலைமுறை காக்கின்ற சுற்றும் சூழலும் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்.

– தொடரும்

வேளா. சோமசுவாமிநாதன்,

ஆச்சாள்புரம்.

9751730940



## நல்ல நண்பர் ஆவது எப்படி

* கொடுத்த வாக்கைக் காப்பாற்றுங்கள்.
* உங்களால் செய்யமுடியாத விஷயங்களை வாக்குறுதிகளாகத் தராதீர்கள்.
* எப்போதாவது எதையாவது செய்ய முடியாது போனால், அதற்கான உண்மைக் காரணத்தைச் சொல்லிவிடுங்கள்.
* ‘இதை இவர் எப்படியும் செய்வார்’ என்ற நம்பிக்கையை நண்பர்களுக்குக் கொடுங்கள்.
* பொய்யான நம்பிக்கை தந்து ஏமாற்றாதீர்கள்.
* தப்பு செய்தால் தயங்காமல் மனதார மன்னிப்பு கேளுங்கள்.
* உங்கள் தவறுக்கு மற்றவர்கள்மீது பழி போடாதீர்கள்.
* உங்கள் செயல்களில் நேர்மையாக இருங்கள்.
* உங்கள் வார்த்தைகளில் உண்மையாக இருங்கள்.
* எப்போதும் நண்பர்கள் அணுகமுடிகிறபடி எளிமையாக இருங்கள்.
* உங்கள் தேவைகளுக்கு நண்பர்களை கறிவேப்பிலை போல பயன்படுத்திக்கொள்ளாதீர்கள்.
* நட்பில் பெறுவதும் முக்கியம்; தருவதும் அவசியம். எப்போதும் பெற்றுக்கொண்டே இருக்காதீர்கள்.
* நட்புக்கு விசுவாசமாக இருங்கள். உங்களை நம்பிச் சொல்லும் ரகசியங்களைக் காப்பாற்றுங்கள்.
* நண்பர்களின் பிரச்சனைகளைப் புரிந்துகொண்டு பிராக்டிகலான தீர்வு சொல்லுங்கள்.
* சுயநலமற்று இருங்கள். நண்பர்களின் நலனை நீங்கள் பார்த்தால், உங்கள் நலனை அவர்கள் பார்த்துக்கொள்வார்கள்.
* எப்போதும் பேசுபவராக இருக்காமல், அவர்களின் பிரச்னைகள் அக்கறையோடு கேட்பவராகவும் இருங்கள்.
* இன்பங்களில் இணையாவிட்டாலும், துன்பங்களின்போது துணை நில்லுங்கள்.
* நண்பன் என்பவன் நல்ல ஆலோசகன். தேவைகளின்போது அதைச் செய்யுங்கள்.
* மன்னிப்பு கேட்பது போல மன்னிக்கவும் கற்றுக்கொள்ளுங்கள்.
* எப்போதும் தொடர்பில் இருங்கள்.

## தாய் தந்தையை மறக்காதீர்கள்

1) எதை மறந்தாலும் தாய், தந்தையை மட்டும் மறக்காதீர்கள். ஏன் என்றால் இவர்களின் உபகாரம் அளவில்லாதது. இதை என்றும் மறக்காதீர்கள்.

2) புண்ணியம் சம்பாதிக்க பூஜைகள் செய்வது அல்ல! புண்ணியநதிகளில் குளிப்பதும் அல்ல! தாய் தந்தையின் கண்களில் கண்ணீர் வர வைக்காதீர்கள்.

3) தங்கள் பாகத்தின், ஆகாரத்தை உங்களுக்கு ஊட்டி உங்களை வளர்த்திருக்கிறார்கள். இந்த பவித்ரமான அமுதத்தை கொடுத்தவர்கள் எதிரில் விஷத்தை கக்காதீர்கள்.

4) உங்கள் உடலின் தோலில் இருந்து காலணிகள் செய்து போட்டாலும் தாய், தந்தையின் கடனிலிருந்து மீட்க முடியாது.

5) நீங்கள் இலட்சம், கோடிகள் சம்பாதிக்கலாம். ஆனால் தாய், தந்தையர்கள் சந்தோஷமாக இருக்காவிட்டால், உங்கள் சொத்துக்கள் குப்பைக்கு சமம்தான். இந்த வார்த்தையை ஏற்றுக்கொள்ள மறக்காதீர்கள்.

6) ஈரமான இடத்தில் அவர்கள் படுத்து, உங்களை காய்ந்த இடத்தில் படுக்க வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட உயர்ந்த உள்ளம் கொண்டுள்ள தாய், தந்தையர் கண்களை கலங்க வைக்காதீர்கள்.

7) அரண்மனையை போல் வீடு, ஏராளமான ஐஸ்வர்யத்தின் சுகங்கள், வேலையாட்கள் வைத்து நீங்கள் தாய், தந்தையை பார்த்து கொண்டிருக்கலாம். ஆனால் அன்பு, பாசம், கௌரவம், பக்தியினால் அவர்களுடன் பேசாவிட்டால் சிறைவாசம் அடைந்தது போலாகும்.

8) பணம் இருந்தால் உலகத்தில் எல்லாம் கிடைக்கும். ஆனால் தாய், தந்தை கிடைக்கமாட்டார்கள். இப்படிப்பட்ட பவித்ரமான பாதங்களை வணங்குவதை மறவாதீர்கள்.

9) பெற்று வளர்த்து, பாதுகாத்த தாய், தந்தையை அவர்கள் வயதான காலத்தில் ஏதாவது முதியோர் இல்லத்தில் சேர்த்து அவர்களின் மனதை காயமாக்கி ராட்சசர்கள் ஆகாதீர்கள்.

10) நீங்கள் உங்கள் தாய் தந்தையரை எப்படி வைத்துக்கொள்கிறீர்களோ, அப்படித்தான் உங்கள் பிள்ளைகள் வயதாகும் பொழுது உங்களை வைத்துக்கொள்வார்கள் என்பதை புரிந்துகொண்டு மறக்காமல் செயல்படுங்கள்.

– ஆர். சண்முகவடிவேலு,

மே. தாம்பரம், சென்னை–45.

## வெற்றி தரும் பழக்க வழக்கங்கள்

மாணவப் பருவம் மகிழ்ச்சியான பருவம் மட்டுமல்ல, வாழ்வின் முக்கியமான பருவமும் அதுதான். மாணவப்பருவத்தில் சீராக படித்துவரும் மாணவர்களின் எதிர்காலம் பிரகாசமாக மாறி விடுகிறது. வேடிக்கையாக பொழுது போக்கி, கற்காமல் காலம் கடத்தியவர்களின் எதிர்காலம் கருகிவிடுகிறது. வேண்டாத பழக்கவழக்கங்களை கண்டு ஏங்கித் தவித்து வாழாமல், தாங்களும் ஏற்றமிகு வாழ்வு வாழ மாணவர்களின் சில அடிப்படையான பழக்க வழக்கங்களை வளர்த்துக் கொள்வது அவசியம். அவற்றை இங்கே அறிவோம்.

### சுறுசுறுப்பு

சோம்பலால் சாதனை வருவது இல்லை. சுறுசுறுப்பால் சாதிக்க முடியாதது இல்லை. மாணவர்களின் தோல்விக்கு அடிப்படை காரணங்களில் ஒன்று சோம்பேரித்தனம். பாடங்களை அன்றன்று படிக்காமல் சேர்த்து வைப்பது, ஆசிரியர்கள் பாடம் நடத்தும் போது கவனிக்காமல் இருப்பது, முக்கியமானவற்றை குறித்து வைத்துக்கொள்ளாமல் இருப்பது, பாட வேளையில் மற்ற சிந்தனையில் மூழ்கி இருப்பது என அத்தனை பழக்கங்களுக்கும் அடிப்படையாக இருப்பது அசட்டையான சோம்பேரித்தனம்தான். கடும் முயற்சி இல்லாமல் சோம்பலை ஒழித்துவிட முடியாது. சோம்பலை ஒழிக்காமல் சுறுசுறுப்பை பெற்றுவிட முடியாது. ஜெயித்தே ஆக வேண்டும். சாதித்தே தீர வேண்டும் என்ற ஆசையை மனதிற்குள் வளர்த்துக் கொண்டால் நிச்சயம் சோம்பல் ஒழிந்து சுறுசுறுப்பு பிறக்கும். வெற்றிக்கான வழிகளும் திறக்கும்.

### அதிகாலையை பயன்படுத்துவது

அம்மா எழுப்பும்போது வரும் அதிகாலை தூக்கம் இனிமையாக தோன்றுகிறதா ? அதைவிட இனிமையா–னது அதிகாலையில் எழுந்து படிப்பது. இது அறிவையும் பெருக்கும். ஆரோக்கியத்தையும் வளர்க்கும். மேலே சொன்ன சோம்பல் பழக்கம் தான் அதிகாலை எனும் அற்புத பொழுதை விழுங்கிவிடுகிறது.

பள்ளி முடிந்ததும் விளையாட்டு, டிவி. என்று பொழுது போக்கி போன் வழி இணைய பழக்கமும் தவிர்க்க முடியாத பழக்கமாக தொற்றிக் கொண்டுள்ளது. இணையத்தில் கல்வி சம்பந்தமாகத் தான் பார்க்கிறேன் என்று கூறிக்கொண்டு, சமூக வலைத்தலங்களில் உரையாடியபடியே படிப்பது பலரது வாடிக்கையாக உள்ளது. வேண்டாத தளங்களில் பொ–முதுகளை வீணடிப்பவர்களும் உண்டு. இப்படி ஏதோ–தோ கூறிக்கொண்டும், செய்து கொண்டும் படிப்பை கெடுத்துக்கொள்வது எதிர்காலத்தை பாழாக்கிவிடும். படிக்கும் வேளையில் இது போன்ற செயல்களை தவிர்த்து முழு கவனம் செலுத்தும் பழக்கத்தை கொண்டு வந்தால் வெற்றி நிச்சயம்.

### விழிப்புடன் இருப்பது

பள்ளிக்கு ஏன் வந்திருக்கிறோம், நம் வேலை என்ன, கல்வியால் என்ன பயன், எதிர்காலத்தில் என்ன கற்க வேண்டும், எந்த துறைக்குச் செல்ல வேண்டும், வாழ்க்கையை எப்படி அமைத்துக்கொள்ள வேண்டும். நமக்கு என்ன இடையூறுகள் உள்ளன. நமக்கு என்ன தேவை இருக்கிறது என்பது போன்ற விஷயங்களில் தெளிவாகவும், விழிப்பாகவும் இருக்கும் மாணவர்கள் குறிக்கோளை தவறவிடுவதில்லை. விழிப்பின்றி பாட வேளையை புறக்கணிப்பது வீட்டுப்பாடங்களை குறை வைப்பது, வேடிக்கையாக பொழுது போக்குவது என அசட்டையாக இருப்பதால் கெடுவது உங்கள் எதிர்காலம் தான் என்பதை யோசித்தால் நிச்சயம் நீங்களும் அதிலிருந்து விடுபட்டு வெற்றி பெறுவீர்கள்.

---

## செவ்வாழையின் சிறப்பு.

எல்லாவகை வாழைப்பழங்களுமே எண்ணற்ற சத்துக்கள் கொண்டவையாகும். சிலவற்றில் உயிர்ச்சத்தும், சிலவகைகளில் சுண்ணாம்புச்சத்து, இரும்புச்சத்துபோன்றவைகள்உள்ளன. ஆனால்பலரும் அரிய வகையில் உண்ணக்கூடிய செவ்வாழையில் பல மருத்துவக் குணங்கள் உள்ளது. இதில் உள்ள பீட்டா கரோட்டின் கண்நோய்களை குணமாக்கும். இதில் உயர்தர பொட்டாசியம் உள்ளது. சிறுநீரகத்தில் கல் ஏற்படுவதைதடுக்கிறது. இதில்வைட்டமின் 'சி' அதிகம் உள்ளது. செவ்வாழையில் ஆண்டிஆக்ஸிடெண்ட் உள்ளது. இதில் 50 சதவீதம் நார்ச்சத்து காணப்படுகிறது. மாலைக்கண் நோய் உள்ளவர்கள் தினம் இரவு ஆகாரத்துக்குப் பின் தொடர்ந்து 40 நாட்கள் செவ்வாழை சாப்பிட்டால் இந்நோய் நீங்கிவிடும். பல்வலி, பல்லசைவு போன்றவற்றையும் செவ்வாழைப்பழம் குணமாக்கிவிடும். தொடர்ந்து 21 நாட்கள் செவ்வாழைப்பழம் சாப்பிட்டுவர ஆடிய பல் கூட கெட்டிப்படும்.

சொறி, சிரங்கு, தோலில் வெடிப்பு போன்ற சரும வியாதிகளுக்கு செவ்வாழை சிறந்த நிவாரணம் தரும். சரும நோயும் குணமாகும். நரம்புத்தளர்ச்சியால் பாதிக்கப்பட்டவர்கள் தினசரி இரவு செவ்வாழை சாப்பிடுவதால் நரம்புகள் பலம் பெறும். ஆண்மைத்தன்மை சீரடையும். தொற்றுநோய் கிருமிகளைக் கொல்லும் அரிய சக்தி இப்பழத்திற்கு உண்டு. அஜீரணக்கோளாறு நீங்கும். மலச்சிக்கல், மூலநோய் குறைபாடு உடையவர்கள் தினம் ஒரு பழம் சாப்பிட்டுவருவதுநலம்பயக்கும். ஜீரண சக்தி பெருகும். கல்லீரல் வீக்கம், சிறுநீர் கோளாறை சீராக்கும். மேலாக தினம் ஒரு பழம் வீதம் சாப்பிடுவதால் கண் பார்வை தெளிவடையும்.

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் :
01.06.1935



மறைவு :
23.09.2025

## திரு. K. இராமலிங்கம் பிள்ளை

(Asst. Audit Officer (Retd) AG's Office, Chennai)
D83, சன்னிவேல் அடுக்குமாடி குடியிருப்பு, அயனாவரம், சென்னை – 600 023.

பூர்வீகம் பூவிழுந்தநல்லூர், சென்னை அயனாவரத்தில் வசித்து வந்த எங்கள் தந்தையார் திரு. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் விசுவாவிசு ஆண்டு, புரட்டாசி மாதம் 7ஆம் நாள் **(23.09.2025)** செவ்வாய்கிழமை மதியம் 12.40 மணியளவில் சிவலோக பதவியடைந்தார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

என்றென்றும் நீங்கா நினைவுகளுடன்

**மனைவி காந்திமதி இராமலிங்கம்**

**மகள்கள் - மருமகன்கள்**

**உமாதேவி சுவாமிநாதன்**
**Dr. R.P. சுவாமிநாதன்**, M.D.,
(Former Director of JIPMER)

**கலைச்செல்வி கார்த்திகேயன்**
**Dr.S. கார்த்திகேயன்**, Ph.D.,
(Former HOD of Economics (Retd.)
Presidency College, Chennai)

**பேத்திகள்**

**Dr. வித்யாலெக்ஷ்மி விவேக்**

**சந்தியா அருண்குமார்**

**கொள்ளுபேத்திகள்**
**அக்ஷரா விவேக்**
**தியா விவேக்**

**கொள்ளுபேரன்**
**பிரஜித் அருண்குமார்**

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் :
02–04–1959

மறைவு :
15–09–2025

சிதம்பரம், திருநறையூர் கிராமம் தெய்வதிரு. S. தங்கபிரகாசம் பிள்ளை
அவர்களின் துணைவியார்

## T. சித்ரா அவர்கள்

15–09–25 திங்கள்கிழமை காலை 5.00 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்கள்
என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மகன் : **T. ராஜேஷ்**

மருமகள் : **B. புவனா**

பேரன்கள் : **R. பிரத்யும்ராஜ்**

**R. அனிருத்ராஜ்**

கேளம்பாக்கம்.

மகன் : **T. வினோத்**

மருமகள் : **K. செல்வநித்யா**

பேத்தி : **V. அக்ஷரா**

பேரன் : **V. நிவின்**

U.S.A.

மற்றும்

**உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.**

# ஆறாம் ஆண்டு நினைவு அஞ்சலி



மலர்ந்தது
**05–01–1960**

உதிர்ந்தது
**17–09–2019**

தெய்வத்திரு. **N. தேன்மொழி** அவர்கள்

பிறந்தது : திருக்கடையூர்
வாழ்ந்தது : இலையமுதுகூடம்

**அதட்டலின் அழகை இனி**
**அனுபவிக்க வாய்ப்பில்லை**
**சிறகிழந்த பறவையாய் கீழ்**
**வானத்தில் பறக்கின்றோம்.**
**நீங்காத நினைவுகள் நித்தம்**
**கனவினில் வந்துடுதே!**
**மனதின் ஆழத்தில் நீ**
**மட்டும் நிலைத்திடுவாய்!!!**

*என்றும் உம் நினைவுகளுடன் வாழும்*

தெய்வத்திரு. **A. தியாகராஜன் குடும்பத்தினர்**

**A. உமாபதி குடும்பத்தினர்**

கணவர் : **A. நடனம்** எம்.ஏ. எம். எட்
(சீனிவாசா மேல்நிலைப்பள்ளி, மேலையூர்)

மகன்கள் – மருமகள்கள் :
**N. நீலகண்டன்,** M.E
**N. தண்டபாணி** B.A
**திவ்யா நீலகண்டன்**
**பவித்ரா தண்டபாணி**

பேரன்கள் : **நீதி, நிமலன்**
**த. ஹரிஹர பவிதன்**
இலையமுதுகூடம்.

மற்றும் **குடும்பத்தினர், திருக்கடையூர் விழுதுகள்**
Mob : 75984 56182 / 93440 78405

# 12-ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
01.11.1970

மறைவு
20.10.2013

## திருமதி. K. இலட்சுமி ( மணிக்கிராமம் )

புழுதிவாக்கம், சென்னை.

என்றென்றும் உன் நினைவில் வாழும்....

தகப்பனார் : M.நடேசன்
(காவல்துறை ஆய்வாளர் ஓய்வு, மணிக்கிராமம்)
தாயார் : N.இராஜேஸ்வரி, மணிக்கிராமம்
சகோதர சகோதரிகள்
மற்றும்
உறவினர்கள்

# ஆறாவது ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
03.06.1947

மறைவு
04.11.2019

தெய்வத்திரு. **அ. சுப்ரமணியன்,**
சுகாதார ஆய்வாளர் Gr.I (ஓய்வு)

எங்கள் வாழ்வின் வசந்தமாய் !!
உண்மையின் உருவமாய் !!
உழைப்பின் சிகரமாய் !!

எளிமையின் வடிவமாய் !!
நட்பின் இலக்கணமாய் !!
பாசத்தின் உச்சமாய் !!

அப்பா என்ற சொல்லுக்கு அர்த்தமாய் !!
வாழ்ந்து மறைந்த உங்கள் நினைவுகள் மட்டும் இன்று துணையாய் !!

என்றும் உங்கள் நினைவோடு வாழும்

மனைவி : **S. லலிதா**

மகன் : **S. சுதாகர்,** B.E., MBA.,
CREW (P) Ltd., Siruseri

மருமகள் : **B. சந்தியா சுதாகர்,** BBA.,BA (Hindi)
TCS, Thuraipakkam

பேத்தி : **S. ஸ்ரீநிகா சுதாகர்**
செங்கண்மால், கேளம்பாக்கம், சென்னை

மகள் : **K. கவிதா வெங்கடேஷ்,** B.E.,
HCL Technologies, Shozlinganallur

மருமகன்: **N. வெங்கடேஷ்,** B.E.,
Renault Nissan, Oragadam
தாம்பரம், சென்னை.

மைத்துனர்கள் : **S. ராதா & சகோதரர்கள்**
3, கருவாழக்கரை மேலையூர்

தம்பி : **R.கண்ணன்,** Rtd. TNEB, சிதம்பரம்.

மற்றும் **உறவினர்களும் நண்பர்களும்**

30, பெருமாள் கோயில் சன்னதி தெரு, மடப்புரம், திருவாரூர் – 610 001.

# முதலாமாண்டு நினைவஞ்சலி



தோற்றம் :
05.06.1953

மறைவு :
17.10.2024

திரு. **இரா. பாலுபிள்ளை,** அவர்கள்

மயிலாடுதுறை மாவட்டம், பட்டவர்த்திவர்த்தி, இளந்தோப்பைச் சேர்ந்த

தெய்வத்திரு. **இராமச்சந்திரன் பிள்ளை– செல்லத்தாச்சியின்** மகனும்,

நலமுடன். திருமதி. **இராணி பாலு** அவர்களின் கணவருமான

சென்னை, பட்டரவாக்கத்தில் வசித்து வந்த

திரு. **இரா. பாலுபிள்ளை,** அவர்களின்

முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

அனைவருக்கும் கிடைப்பதில்லை வரம்
வரமாய் அமைந்து
வாழ்வின் துணையாய் திகழ்ந்து
வணங்கும் நிலைக்கு உயர்ந்து
இன்றும் எங்களுள் வாழும்
இறையாய் திகழும்– தம்மை
மறக்காத இதயம் பாரத்துடன் !!!

வாழ்த்தி துணையாக இருக்க வேண்டுகிறது.

என்றும் தங்கள் நினைவில் வாழும் :

மனைவி. **பா. இராணி**

மகன். **பா. பரமைய்யன்**
மருமகள். **ர. சரண்யா**
பேத்திகள்.
**ப. கயல்விழி, ப. கலைவாணி**

மகள். **பா. செந்தில்வடிவு**
மருமகன். Dr. **ச. ஆனந்த்**
பேரன்கள்.
**ஆ. வருண், ஆ. விஷ்வா**

உடன்பிறந்தோர் மற்றும் குடும்பத்தினர்கள்


MARUTHI®
LET THE SUN PAY YOUR EB BILL
29 YEARS OF EXCELLENCE
INSTALL SOLAR ROOFTOP SYSTEM
GET ₹0 ELECTRICITY BILL
KEY FUTURE
BEST RETURN ON INVESTMENT - 19% TO 26%
NON POLLUTING - REDUCES GLOBAL WARMING.
EXCESS POWER GENERATED CAN BE SOLD.
28 YEARS PANEL WARRANTY.
CALL US
98418 28077
www.maruthipower.com
ANANDHAM SELVAKUMAR - CEO

Posted at Egmore RMS, Pathrikachanel, Chennai - 08.
RNI No. TNTAM / 2009 / 30435 Regn. No. TN/CH( C) / 405 /2025 - 2027 & WPP. No. TN/PMG (CCR)/WPP-161/2025-2027
Date of Publication : 15th of Every Month
15th / 16th October 2025

CHOZHA HOTELS

# HOTEL KANAKABHISHEGAM

First Hotel From The Temple

**We are truly honored by the gracious presence of Mr. Gopinath (Neeya Naana Fame) and his family during their stay at our hotel and their visit to Amirtham Restaurant. We sincerely thank them for choosing us.**






Means The Best Food

Amirtham A\C Veg Restaurant
Best Food @ Thirukadaiyur
Web : www.chozhahotels.com
Mob:7299078191

**Published by : K. SHANMUGAM,** on behalf of The Karkarthar Association (Madras), From 64, 10th Street, Sowrashtra Nagar, Choolaimedu, Chennai - 600 094 and **Printed by : M. NATARAJAN** at **Mayur Printers,** No. 72/88, Kamaraj Colony 8th Street, (Palayakaran Street) Kodambakkam, Chennai, Tamil Nadu - 600 024. **Editor : S. ANBALAGAN**